கல்கி

KALKI 25-6-72 45 காசு






படுசுட்டியான குடும்பம்!
எல்லோரும் என்னுடை
ஜான்ஸன்ஸ்* எப்பவும்
உபயோகிக்கிறாங்க!
Johnson's
baby
powder
குழந்தைகளுக்கு உகந்தது,
உங்களுக்கும் சிறந்தது.


பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும்
பாதி வேலையைத்தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்.. உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
லின்டாஸ்-INC. 20-690 TM
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்-10 மிலி
10 ml
Incremin drops
LYSINE-VITAMINS

ஒரு பூதக் கண்ணாடியில் இம்முனைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்!



பினாகா

டூத் பிரஷிலுள்ள

மழுக்கப்பட்ட முனைகள்

ஈறுகளுக்கு ஊறு செய்யாது

ஒரு டூத் பிரஷ் வெறும் டூத் பிரஷ் மட்டும்' அன்று, பினாகா எனில் நன்று

CIBA Cosmetics

ULKA-GB-70-TAM

வியக்கத்தக்க விதிமுறை அறுவை சிகிச்சை இன்றியே மூலத்தைச் சுருக்க உதவுகிறது

நமைச்சலை நிறுத்துகிறது – நிமிடங்களில் வலியைப் போக்குகிறது

நியூ யார்க் - இப்பொழுது விஞ்ஞானத் துறை, முற்றிவிட்ட மூலநோய் கண்டவர்களைத் தவிர மற்றவர்களின் மூலத்தை அறுவை சிகிச்சை இன்றியே சுருக்கும் ஓர் அற்புதமான மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. இம் மருந்தால், மூலநோய் கண்டிருந்த கணக்கற்றவர்களுக்கு 'கருத்தைக் கவரும் அபிவிருத்தி' ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களின் பரிசோதனைகளும் உறுதி கூறியுள்ளன. மூலநோயால் ஏற்படும் வலியும் நமைச்சலும் அதிவிரைவில் நீங்கி மூலம் சுருங்கிக் குணமளித்திருக்கிறது. இதன் விளைவுகள் வியக்கும்படி உள்ளன. இந்த நோயால் 10, 20 ஆண்டுகளாக அவதிப்பட்டு வருவோர்கூட "இப்போது மூலநோய் ஒரு பிரச்னையே இல்லை!" என்று கூறுகிறார்கள். இந்த சிகிச்சை, மயக்க மருந்து, உணர்விழப்பு மருந்து, மற்றும் சுருங்கச் செய்யும் மருந்துகளைப் பயன்படுத்தாமலேயே வெற்றி தந்துள்ளது. மூலத்தைக் குணப்படுத்தும் இந்தப் புதிய மருந்தின் பெயர் பிரிபரேஷன் எச் ஆயின்ட்மென்ட். மூலத்தைச் சுருக்குவதோடு, பிரிபரேஷன் எச் ஆயின்ட்மென்ட் நமைச்சலை நீக்கி, வலி தணிந்து குடல் இயங்க உதவுகிறது.

உங்கள் மருந்து வியாபாரியை பிரிபரேஷன் எச் பற்றிக் கேளுங்கள். (மருந்து இடும் குழாயுடன்) 30 கிராம் மற்றும் 50 கிராம் கொண்ட *டியூபுகளில் கிடைக்கிறது.


* ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்

ரெஜிஸ்டர்டு யூஸர்ஸ், ஜெஃப்ரி மேனர்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட், பம்பாய் -1.

74 PH 82 TAM

மேலான ஒளி வீசி நெடுங்காலம் உழைப்பவை

கிராம்டன் சூப்பர்கோல்ட் ஃபிட்டிங்குகள் மற்றும் துணையுறுப்புகள் கொண்ட **கிராம்டன்** ஃப்ளோரெஸென்ட் டியூப்லைட்கள்




நம்பகமான
மின்சார சாதனங்களுக்கு
நாடறிந்த பெயர் — கிராம்டன்!

Crompton Greaves
LIMITED

AIYARS-CG.153 TM

சொந்தமாக தொழில் செய்ய உங்களுக்கு பணம் தேவைப்படும்



உங்களுக்கு அது எங்கிருந்து கிடைக்கப்போகிறது? யூகோபாங்க்கிலிருந்துதான்

நீங்கள் சொந்தமாக ஒரு தொழில் செய்ய நினைத்துக் கொண்டிருந்தால் அதற்கான வழிவகைகளை நாங்கள் செய்து தர முடியும். இதுவே எங்கள் அலுவல்; இவ்விதம் செய்வது எங்கள் விருப்பமும் கூட.

யூகோபாங்க்கிலிருந்து எதிர் பார்க்கும் உங்கள் தேவைகளை அறிவோம். அந்த வகையில் உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கின்றோம். நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கும் எந்தத் தொழிலுக்கும்தான்

இயந்திரங்களோ அல்லது கச்சாப் பொருள்களோ வாங்கு வதில் உங்களுக்கு உதவி செய்ய முடியும். அல்லது ஒரு கடை வைக்க நினைத்தால் அதற்கும் கடனுதவி அளிப்போம். இப்படி யாக உங்கள் திறமைகளை லாப கரமான வழியிலே உபயோகிப் பதில் உதவி அளிப்போம்.

யூகோபாங்க்கில், நீங்களே உங்களுக்கு உதவி செய்து கொள்ள நாங்கள் உங்களுக்கு உதவி அளிப்போம்.

மற்ற விவரங்களுக்கும் அனுபவமிருந்த ஆலோச னைக்கும் உங்களருகிலிருக்கும் யூகோபாங்க்கின் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

UCO-4/72

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.



இந்த சந்தன சோப்பு - குளிர்ச்சியானது மிருதுவானது, சுகமானது. உங்களது சருமத்துக்கு எழிலூட்டுவது. இந்த சந்தனப் பவுடர் - மிருதுவானது. புத்துணர்ச்சியூட்டுவது. இந்த சோப்பையும் பவுடரையும் உபயோகித்தால் வியர்வை கொட்டும் ஒரு வெப்பமான காளிலுங்கூட நீங்கள் சந்தனத்தின் தன்னிகரில்லாத நறுமணம்கமழ எழிலுடனும் தூய்மை உணர்ச்சியுடனும் இருப்பீர்கள்

கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெடின் தயாரிப்புகள்.

கல்கி



பொருளடக்கம்

பரிதாபி ஆனி, 12 ○ ஜூன் 25, 1972

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே: சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

ராஜஸ்ரீயின் உண்மையான விருப்பங்கள்

ராஜஸ்ரீயை ஒரு நிதியுதவி நிகழ்ச்சியில் கண்டபொழுது அவர் வாழ்க்கையில் உண்மையாக விரும்பும் சிலவற்றைப் பற்றித் தெரிவிக்குமாறு கோரினோம்.

'ஓ! என் விருப்பங்கள் ஏராளமானவை' என்று கூறிச் சிரித்தார். 'நான் மிகவும் விரும்பும் நகரம் சென்னை'.

'தீபாவளியின் வர்ண ஜாலங்களும் வெடிச் சப்தங்களும் எனக்கு மகிழ்ச்சியூட்டுபவை. ஜோஸியம் என்றாலோ, ஒரே மோகம். ஏனென்றால், அதுதானே நமது நண்பர்களை நன்கு அறிய உதவுகிறது.'

அவரது எழில் மற்றும் எடுப்பான தோற்றத்தின் ரகசியம் என்னவென்று கேட்டபொழுது அவர் கூறியதாவது: லக்ஸின் கவர்ச்சியூட்டும் தன்மைதான்'.



லக்ஸ் மிருதுவானது, எனக்குத் துடிப் பூட்டுகிறது. எல்லோருமே லக்ஸ் உபயோகிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.'



இந்துஸ்தான் லீவரின் ஒரு தரமான தயாரிப்பு.

கல்கி மலர் 31 இதழ் 48

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

தொழில் அமைதியைக் காப்பீர்!

தொழில் அமைதி நிலவும் மாநிலம் என்று முன்னெல்லாம் தமிழ் நாட்டுக்கு நற்பெயர் இருந்து வந்தது. அதற்கு மாறாகத் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புக்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், தொழிலாளர்களிடையே கட்சிகள், பிளவுகள், தலைவர்களிடையே ஆதிக்கப் போராட்டங்கள், வன்முறைகள், — இவைகளையே சமீப காலத்தில் அதிகமாகக் காண்கிறோம்.

ஒரு தொழிற்சாலையில் கலவரம் ஏற்பட்டு, அதன் காரணமாக, இதர தொழிற்கூடங்களிலும் அமைதி குலையும் துயரச் சூழ்நிலையையும் காண்கிறோம்.

தொழிலாளர்களின் பிரச்னைகளை ஆதாரமாக வைத்துப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், அவை படிப்படியாக முக்கியத்துவம் இழந்து பின்னுக்குப் போய்விடுகின்றன. அரசியல் தலையீடும், கட்சி ஆதிக்கங்களுமே தலைதூக்கிச் சுலபத்தில் தீரக்கூடிய பிரச்னைகளையும் எளிதில் தீரவொட்டாமல் செய்யும் கொடுமையையும் பார்க்கிறோம்.

அமைதியைக் குலைக்க முனையும் தொழிலாளர் தலைவர்களின் இம்மாதிரி நடவடிக்கைகளினால் தொழிலில் உற்பத்தி குறைகிறது, தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊக்க போனஸ், அதிக ஊதியம் போன்ற நன்மைகள் கிடைக்காமல் போகின்றன, நாட்டுக்கும் பொருள் நஷ்டம் ஏற்படுகிறது. இவற்றைத் தொழிலாளர் இயக்கங்களை நடத்தும் தலைவர்கள் சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தொழில் அமைதி பாதிக்கப்படுவதால் சர்க்காருக்கு வரிப் பணமாகவும், இதர வகையிலும் கிடைக்கும் வருமானமும் குறைகிறதே என்பதை அரசாங்கமும், சுயநல நோக்கில் கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை.

ஒரு சதவீதம் உற்பத்தி உயர்ந்தால் ஒன்றே முக்கால் சதவீதம் அரசாங்கத்துக்கு வருமானம் அதிகமாகக் கிடைக்கிறது. அதே போல் லாபப் பங்கீட்டில் ஒரு ரூபாய் அதிகமாகத் தொழிற்சாலைகள் வழங்கினால் நாலே கால் ரூபாய் அரசாங்கத்துக்கு வரிமூலம் கிடைக்கிறது. இப்போதுள்ள வரி முறைகள் இம்மாதிரி உள்ளன.

இந்த உண்மையைத் தொழிலாளர்களும் உணரவில்லை; தொழில் தகராறுகளில் அனாவசியமாகத் தலையிட்டுக் குட்டை குழப்பும் அமைச்சர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சென்னையில் மாதக் கணக்கில் அமைதி குலைந்து கிடக்கும் இரண்டு பெரிய தொழிலகங்களில் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கிற சம்பவங்களைப் பார்க்கும்போது, தொழிலாளர் நலன் என்ற அம்சம் அடியோடு மறைந்து, யூனியன் சண்டையும் இதற்குத் தூபம் போட்டு வளர்க்கும் அரசியல் மனப்பான்மையுமே மேலோங்கி நிற்பதை நிதரிசனமாகக் காண முடிகிறது.

தாங்களே தேர்ந்தெடுத்த தலைவர் ஒருவருடைய பயன் தராத தவறான நடவடிக்கைகளினால், தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் சுமார் 3000 ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதை உணர்ந்து, அந்தத் தலைவர் மீதே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றிய ஒரு நிலைமையைச் சென்னைத் தொழிற்கூடம் ஒன்றில் காண முடிந்தது.

ஒரு தொழிலுக்கு ஒரு யூனியனே போதும் என்று மேடையில் பேசப்பட்டாலும், பல ஆலைகளில், பல யூனியன்கள் செயற்படுவதையும், அவர்களுக்குள் போட்டா போட்டி ஏற்பட்டு, அமைதி குலைவதையுமே காண்கிறோம்.

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும், அதன் ஆதிக்கம் தொழிலாளர் வர்க்கத்தின் மீது பரவ வேண்டும் என்ற குறுகிய நோக்குடன் அரசாங்கம் செயல்படுவது தொழில் அமைதியைக் காக்க உதவாது. இந்த வருந்தத்தக்க சூழ்நிலை தமிழகத்துக்கு இழிவைத் தேடித் தந்து கொண்டிருக்கிறது. இதைப் பொறுப்புள்ளவர்கள் உணர்வதுடன் நாட்டின் நலனைக் கருதி, தொழிலாளர் நலனைக் கருதி, இந்த நிலைமையை மாற்றுவதற்காக உறுதியுடன் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இழந்துவிட்ட நற்பெயரைத் தமிழ் நாட்டுக்கு மீட்டுத் தரவேண்டிய பொறுப்பில் அரசுக்கு அதிகப் பங்கு உண்டு.

கோபம் கொண்ட கோவை



■ போராட்டத்தின் துவக்கத்தில் தலைவர்கள் முன் செல்ல விவசாயிகள் அணிவகுப்பு.

ஜூன் 15ந் தேதி மாலை கோவை சீதாராம் லாட்ஜை விட்டு இறங்கிக் கையில் பெட்டியுடன் ஸ்டேஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். மூன்று அடி எடுத்து வைப்பதற்குள் மூன்று ஸி. ஐ. டிகள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள் !

''நீங்கள் 'கல்கி'யிலிருந்து வந்திருப்பவர் தானே? காலையில் நாராயணசாமியுடன் பேசிக் கொண்டிருந்தீர்களே? அவர் இப்போது எங்கே? தாம் போகுமிடம் பற்றி ஏதாவது சொன்னாரா?'' என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினார்கள்.

நான் மடியை உதறிக் காட்டாத குறையாக 'ஸாரி' சொல்லிவிட்டு ஸ்டேஷனுக்கு நடையைத் தொடர்ந்தேன்.

அன்று காலை நான் விவசாயிகள் சங்கக் காரியதரிசி திரு நாராயணசாமி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தது என்னவோ உண்மை தான். 'கோவையில் ஏராளமான போலீஸ் பட்டாளம் வந்து இறங்கி யிருக்கிறது: 144 உத்தரவு பிறப்பிக்கப்படலாம்' என்பன போன்ற செய்திகள் வந்தவண்ணமிருக்கவே போராட்டத்தை எப்படித் தொடர்வது என்பது பற்றி திரு நாராயணசாமி, பி. எல். சுப்பையா, டாக்டர் சிவஸ்வாமி போன்ற தமது சகாக்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தார். ஆயினும், நான் போய்ச் சேர்ந்ததும், அந்த ஆலோசனைகளை மூட்டை கட்டி வைத்து விட்டு, இதுவரை நடந்து வந்துள்ள போராட்டத்தைப் பற்றி 'கல்கி' நேயர்களுக்கென விரிவாக எடுத்துரைத்தார்.

அவர் தேதி நேரம் எல்லாம் குறிப்பிட்டுச் சாங்கோபாங்கமாகச் சொன்ன விஷயங்களின் சாரம் இதுதான் :

1. விவசாயிகள் போராட்டம் நடத்த வேண்டும் என்று ஆரம்பத்தில் எண்ணவேயில்லை; அரசின் போக்குத்தான் அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடும்படியான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

2. ஏப்ரல் ஆறுந்தேதி முதல்வர் இவர்களை அழைத்துப் பேசி மின் கட்டண உயர்வு, வருமான வரி உயர்வு, கடன்களுக்காக உடன் ஜப்தி செய்தல் போன்ற பிரச்னைகள் இருப்பதைக் கொள்கை அளவில் ஏற்பதாகவும் ஒரு வாரத்துக்குள் மீண்டும் பேச்சு வார்த்தை நடத்திச் சுமுகமான தீர்வு காணலாம் என்றும் சொன்னார். அந்தப் பேச்சு வார்த்தையை நடத்த இன்றளவும் முதல்வர் முன்வரவில்லை.

3. ஏப்ரல் 21ந் தேதி மின்சாரக் கட்டணம் செலுத்தக் கடைசி நாளானதால் அதற்கு முன்பே பிரச்னைக்குச் சுமுக முடிவு காண்பது நலம் என்று திரு நாராயணசாமி முதல்வரிடம் நேரில் பேசிய அன்றைக்கே - ஏப்ரல் 6ம் தேதி - சொன்னார். தொடர்ந்து கலெக்டரை முதல்வரிடமிருந்து தகவல் ஏதாவது உண்டா என்று பல நாட்கள் பல முறை கேட்டார். 19ந் தேதி நடந்த கூட்டத்தில் 21ந் தேதிக்குள் முதல்வரிடமிருந்து பதில் இல்லையெனில் போராட்டம் நடத்துவது தவிர வேறு வழியில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போதும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. இதன் பிறகுதான் மறியல் நடந்து வந்திருக்கிறது.

4. 7–6–72ந் தேதி சரித்திரம் காணாத வகையில் மாட்டு வண்டிகளை விவசாயிகள் கோவை மாநகர் தெருக்களின் இருபுறமும் கொண்டு வந்து நிறுத்தி மறியல் நடத்தி மகத்தான வெற்றி பெற்றனர். (காந்திய சகாப்தத்தில்கூட இப்படி ஒரு மாபெரும் சாத்துவீக மறியல் நடந்ததில்லை, உலகம் கண்டிராத அற்புதமாய் இருந்தது என்று கோவை வாசிகள் பலர் என்னிடம் பெருமிதத்துடன் கூறினர்.)

5. கட்டை மாட்டு வண்டிகளைக் கொண்டு மறியல் நடத்திய தினம் கலெக்டர், மந்திரி மாதவனுடனும் திருவாரூரிலிருந்த முதல்வருடனும் டெலிஃபோனில் பேசிவிட்டு மறியலை விவசாயிகள் சங்கம் **தயவுசெய்து** வாபஸ் பெற வேண்டும், பேச்சுவார்த்தை நடத்த முதல்வர் அழைத்திருக்கிறார் என்று சொன்னார். தடுப்புக் காவல் சட்டப்படி சிறை வைக்கப்பட்டிருந்த நாராயணசாமி முதலானோரை இதற்காகவே விடுவித்து அழைத்து வந்தனர். கலெக்டர் மேற்கூறியவாறு உறுதி கூறியதன் பேரில் நாராயணசாமி உள்ளிட்ட போராட்டக் கமிட்டியினர் விவசாயிகளைக்

கெஞ்சிக் கூத்தாடித் திரும்பிப் போகுமாறு செய்தனர்.. விவசாயிகள் அவ்வளவு தீவிரமாக இருந்ததால் கரம் கூப்பிக் கேட்க வேண்டியதாயிற்று.

6. ஒன்பதாம் தேதி காலை திரு நாராயணசாமியும் அவர் சகாக்கள் சிலரும் முதல்வருடன் பேசலாம் என்று சென்னை வந்து சேர்ந்த போது அன்று காலை தினசரிகளில், ''விவசாயிகள் சங்கத்தாரை நான் பேச்சு வார்த்தைக்கு அழைக்க வில்லை'' என்று முதல்வர் கூறிய தாகச் செய்தி வெளியாகி யிருந்தது. இந்தச் சூழலில் இவர்கள் தன்மானம் இழந்து முதல்வரைப் போய்க் காண விரும்பவில்லை. அஜந்தா ஹோட்டலிலேயே ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் விவசாயிகள் சங்கம் தமிழ்நாடு முழுவதும் போராட்டத்தை விரிவுபடுத்தவும் 16ந் தேதி முதல் தீவிரப் படுத்தவும் வேண்டும் என்று தீர்மானித்தனர்.



7 - 6 - 72 அன்று மறியலுக்கு வாழைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வரும் மாட்டு வண்டிகள்.

15ந் தேதியன்று — போராட்டம் தீவிர மடையப் போகும் தினத்துக்கு முதல் நாள்— திரு நாராயணசாமியிடம் மேற்படி விவரங்களைப் பெற்றுக் கொண்டு நான் புறப்பட்டேன். அன்று பிற்பகல் விவசாயிகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் கோவை பிரசிடெண்ட் ஹாலில் நடைபெற்றது.

அந்த அரங்கில் தலைவர்களின் உணர்ச்சிகரமான பேச்சுக்களைக் கேட்க விவசாயப் பெருங்குடி மக்கள் நிரம்பி வழிந்தார்கள். அதைவிட அதிகமான அளவில் தடியும் கையுமாக போலீஸார் வெளியே சாலையில் நின்றார்கள்!

கூட்டம் கலைந்து விவசாயிகள் வெளியே வர வர, அவர்களைச் சுற்றி வளைத்துப் பஸ்களில் ஏற்றிக் கொண்டு சென்றனர் போலீஸார். அன்று மாலையும் இரவும் போலீஸார் குழுக் குழுவாகக் கோவை நகரத் தெருக்களில் பஸ்ஸில் பவனி வந்து, விவசாயி என்று தாங்கள் சந்தேகித்த பலரை மடக்கி, பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

காரணம் அவர்கள் கலகம் விளைவிப்பார்களாம்! மின்சார டிரான்ஸ்ஃபார்மர்களை வெடி வைத்துத் தகர்ப்பார்களாம்!

இது பற்றிக் கோவையில் யாரை விசாரித்தாலும், ''அதெல்லாம் குடமுருட்டி குண்டு கதைதான் ஸார்'' என்கிறார்கள் ஏளனமாக.

''ஒரு டிரான்ஸ்ஃபார்மரைத் தகர்த்தால் நூறு மின் விநியோக லைன்கள் துண்டிக்கப்படும். அதாவது நூறு விவசாயக் குடும்பங்களின் கிணறுகளில் மோட்டார் பம்ப் ஓடாது! அவர்களும் அவர்களிடமுள்ள கால்நடைகளும் தண்ணீர் இல்லாமல் வாட வேண்டியதுதான்! இப்படிப்பட்ட தற்கொலைக்கொப்பான காரியத்தை எந்த விவசாயியாவது செய்வாரா? இவர்கள் மீது வீண் பழி சுமத்த ஆளும் கட்சியைச் சேர்ந்த விஷமிகள் யாராவது அப்படிச் செய்தால்தான் உண்டு. ஏன், 7ந் தேதியன்று உலக அதிசயத்தில் ஒன்றாகக் கருதும்படி 50,000 விவசாயிகள் கட்டை மாட்டு வண்டிகளைக் கொணர்ந்து முப்பத்தாறு மணி நேரம் மாபெரும் மறியல் செய்தார்களே, ஓர் அசம்பாவித சம்பவம் உண்டா?'' என்று திருப்பிக் கேட்கிறார்கள் நம்மை.

சாலை ஓரங்களில் கட்டை மாட்டு வண்டிகளை நிறுத்தி விவசாயிகள் நடத்திய மறியல்.



அந்த உலக அதிசயம் இருக்கட்டும்; கோவை விவசாயிகளின் தர்ம நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து கொண்டு பேச்சு வார்த்தை நடத்த அரசு முயலாதது அதைவிடப் பெரிய உலக மகா அதிசயம்! பேச்சு வார்த்தை நடத்துவதாகக் கலெக்டருக்குத் தெரியப்படுத்தி விட்டு, பிறகு, 'நான் எங்கே அழைத்தேன்?' என்று அப்பட்டமாகக் கேட்பது அண்டப் பேரண்ட அதிசயம்!

ஆனால் போலீஸ் பாதுகாப்பு இருக்கும்போது 'தைரியமாக' சைக்கிள் செயின் சுழற்றும் தொண்டர்களும், கலரொட்டி விளம்பரத்தினாலேயே மக்கள் மதிப்பில் உயர்ந்து விடலாம் என்று நினைக்கிற தலைவர்களும் உள்ளபோது நாம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? அது சரி,

கோவை விவசாயிகளின் கோரிக்கைகள், சிரமங்கள் என்ன? அவற்றை விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

திரு பழனிசாமி வாங்கிய இரண்டு ஏக்கர் ஐம்பத்து நாலு செண்ட் நிலப் பரப்பில் நாற்பத்தைந்து அடி ஆழமுள்ள ஓர் அகன்ற கிணறு இருந்தது. ஆனால் நீர் கிடையாது! அந்த வறண்ட கிணற்றிலும் பக்கத்து வயல்காரருக்குப் பங்கு உண்டு! பழனிசாமி கிணற்றை ஆழப்படுத்தி நீர் கிடைக்குமா என்று பார்க்க முற்பட்டார். தம் பங்குக்குள்ள பாதிக் கிணற்றை மட்டும் நூறு அடி ஆழம் தோண்டினார். நீர் கிடைத்தது. இதற்கு — அதாவது ஏற்கனவே இருந்த நாற்பத்தைந்து அடி ஆழக் கிணற்றின் ஒரு பாதியை மட்டும் மேலும் நூறு அடி தோண்டி ஆழப்படுத்த — அவருக்கு ஆன செலவு ரூ. 20,000! பம்ப் செட் வைத்து நீர் இறைக்கிறார். வீடு, வாசல், மாட்டுக் கொட்டில், களத்துமேடு ஆகியவை போக இரண்டு ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. பம்ப் செட் மின்சாரத்துக்கு இவருக்கு மாதம் 150 ரூபாய்க்குக் குறையாமல் பில் வருகிறது. அதிகபட்சம் ரூ. 260 ரூபாய் வரை சில மாதங்கள் கட்டியிருக்கிறார். இத்தனை பாடு பட்டாலும் கூடக் கிணற்றுத் தண்ணீரை மட்டும் நம்பிப் பயிர் செய்ய முடியாது. ஓரளவு மழையும் வேண்டும். கிணற்று நீர் போதாது என்பது ஒரு காரணம்; அந்நீர் உவர்ப்பு மிக்கது என்பது மற்றொரு காரணம்.

முந்நூறு நானூறு என்று மாதா மாதம் மின் கட்டணம் செலுத்தும் சிறு விவசாயிகள் கோவையில் நிரம்பப் பேர் உள்ளனர்.

இவர்கள் மின் கட்டணத்தைக் குறையுங்கள் என்றால் 'உலக பாங்க் நிர்ணயித்ததை விட நாங்கள் குறைவாகத்தான் வசூலிக்கிறோம்' என்கிறார் ஒரு மந்திரி. கோவை விவசாயி பற்றி உலக பாங்கைத்தானே கேட்க வேண்டும், நமக்குத் தெரியாது, பாருங்கள்! 'அண்டை மாநிலங்களைப் பார்!' என்கிறார் முதல்வர். 'அவர்களைவிட உனக்கு இங்கு குறைவாகத்தானே கட்டணம் வசூலிக்கிறோம்?' என்று கேட்கிறார். ஒரு யூனிட்டுக்கு இத்தனை பைசா என்று பார்த்தால் கம்மிதான். ஆனால் பிரச்னை அதுவல்ல. கோவை விவசாயி நூறு, நூற்றைம்பது அடி ஆழத்திலிருந்து இரண்டு பம்ப் செட் வைத்து நீர் இறைக்கும்போது ஏராளமான மின்சாரம் செலவிடுகிறார். அவர் மொத்தத்தில் செலுத்த வேண்டிய தொகையைக் கணக்கிடும்போது அது பயங்கர பூதமாக இருக்கிறது. இதற்காகக் கோவையில் தயாராகும் உணவுப் பொருட்களுக்கு மட்டும் அதிக விலை வைத்து விற்க முடியுமா என்ன?

திரு பழனிச்சாமியின் கிணற்றையும் சுற்றுப்புறத்திலுள்ள வேறு சில விவசாயிகளின் கிணற்றையும் நான் நேரில் சென்று பார்த்தேன். ஊட்டி பள்ளத்தாக்குகளுக்கு அடுத்தபடி நான் பார்த்துள்ள அதிக ஆழமான பள்ளங்கள் இந்தக் கிணறுகள்தாம்! ஓரத்தில் நின்றால் தலை சுற்றுகிறது!

இந்த லட்சணத்தில் கோவை வட்டாரத்தில் ஆண்டொன்றுக்குப் பத்து அடி வீதம் நீர் மட்டம் கீழே கீழே இறங்கிக் கொண்டே இருக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். நூறு அடி ஆழமுள்ள ஒரு கிணற்றின் அடிவாரத்தில் போர் பைப் போட்டு 150 அடி ஆழத்திலிருந்து நீரை இறைக்கிறார்கள். அந்த நீர் நூறு அடி மட்டத்தில் ஓரளவு நிரம்பியதும் ஐம்பது அடி உயரத்தில் உள்ள மற்றோர் இஞ்ஜின் இயங்கி நீரை வெளியே கொண்டு வருகிறது.

''இதற்குள்ளே இறங்கி இரண்டு மட்டங்களில் பொருத்தியுள்ள மிஷின்களை ஒரு கூலியாள் இயக்கிவிட்டு வரவே நாலு ரூபாய் கேட்பான்!'' என்றார் பழனிச்சாமி.

கோவை நகரை விட்டு வெளியே சென்றால், சாலை ஓரங்களில் சிறு சிறு குன்றுகளாகப் பாறைகள் குவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கிணறு வெட்டும் போது தட்டுப்படும் பாறைகள் இவை. இவற்றை வெடி வைத்துத் தகர்த்துத்தான் அப்புறப்படுத்திக் கிணற்றை ஆழமாக்க வேண்டும். தீபாவளி சமயத்தில் வெடியைச் சரியாகப் பற்ற விடவில்லை என்று நினைத்துக் கொண்டு அதனை நெருங்குவோம். எதிர்பாராதவிதமாக அது வெடித்து வைக்கும். அப்படி இங்கும் நேர்கிறது. ஒரு வித்தியாசம் — தீபாவளி ஒற்றை வெடியில் அவ்வளவு ஆபத்தில்லை; இங்கு கிணறு வெட்டுகையில் அங்கஹீனமானவர்களும் உயிரை விட்டவர்களும் ஏராளம்!

'' இப்படிப்பட்ட வெடியைத்தான் டிரான்ஸ்பார்மரில் வைத்துத் தகர்க்கப் பார்க்கிறார்களாமே, விவசாயிகள்?'' என்று கேட்டேன்.

'' நாங்க ஏனுங்க அதுக்கெல்லாம் போகப் போறோம்? இங்கே பில் பணம் கட்டலேன்னு சப்ளை கட் பண்ண வருகிற போதே நாங்க, 'வெட்டாதீங்க, வெட்டாதீங்க'ன்னு தடுக்கப் பார்க்கிறோமே? அப்படியிருக்க நாங்களே மின்சார சப்ளை நின்னு போகும்படி செய்வோமுங்களா?'' என்றார் பழனிச்சாமி. மேலும், ''விவசாயிகள் சங்கம் யாராவது வெடி வெச்சா அவங்களைப் புடிச்சுப் போலீஸிலே ஒப்படையுங்கன்னு விவசாயிகளான எங்களுக்கே உத்தரவிட்டிருக்குதுங்களே'' என்றார்.

வீரபாண்டியைச் சேர்ந்த திரு வி. வி. ரங்கசாமி என்ற விவசாயி என்னைக் கோவை சுற்றுவட்டாரத்தில் உள்ள பல விவசாயிகளிடம் அழைத்துப் போனார். ரங்கசாமிக்கு ஒன்பது ஏக்கர் நிலம் இருக்கிறது. கிணறு வெட்ட ஒன்பதாயிரம் ரூபாய் கடன் தந்தது அரசு, கூட்டுறவு பாங்கி மூலம். அது போதவில்லை. கிணறு அரைகுறையாக நிற்கிறது. பம்ப் செட் சும்மா கிடக்கிறது. இதுவரை 1500 ரூபாய் வட்டி கட்டிவிட்டார். நிலம் தரிசாகவே இருக்கிறது. அதைச் சரி பார்க்கப் பணம் இல்லை. இந்நிலையில் கடனைத் திருப்பாததால் நிலத்தை ஜப்திசெய்ய ஏற்பாடாகி வருகிறது. என்ன செய்வார்? ''விவசாயிகளின் தேவைகளைச் சரியாகக் கணக்கிட்டு முழுமையாக உதவ வேண்டும். அரைகுறை உதவியால் எனக்கும் லாபமில்லை; அரசுக்கும் பயனில்லை'' என்றார் திரு ரங்கசாமி.

டாக்டர் ஆர். சிவஸ்வாமியுடன் சில நிமிஷங்கள் பேசிக் கொண்டிருந்தேன். விவசாயிகள் சங்கப் போராட்டங்களில் இவர்

அழகு சொட்டும் தொட்டுணர்வு

ஹேஸ்லீன் ஸ்னோ



தலைசிறந்த அழகு
சாதன ஸ்னோவான
ஹேஸலீன், உங்கள்
மாந்தளிர் மேனிக்கு
மென்மையப் பராமரிப்பு
வழங்குகிறது.
லேசாகவும் மிருதுவா-
கவும் விளங்கும்
ஹேஸ்லீன் ஸ்னோ,
சீராகப் பரவி, உங்கள்
மேனியைப் பாதுகாத்து,
சருமத்தை நன்கு
பராமரிக்கிறது.
உங்கள் மேனி குற்றங்
குறையின்றி முற்றும்
இளமையுடன் வனப்-
போங்கி விளங்க,
நித்தமும் உபயோகி
யுங்கள் இதை.
இளமையான இயற்கை
எழிலின் இரகசியம்,
ஹேஸ்லீன் ஸ்னோ.



தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டுள்ளவர். பொதுத் தேர்தலுக்கு முன்பு இதே காரணங்களுக்காக நடந்த விவசாயிகள் மறியலின் சுபோது (பெருமாள்நல்லூரில் மூன்று பேர் டேப்பட்ட சமயம்) இவர் சிறைப்படுத்தப் பட்டார். இவர் தாய் மரணத் தறுவாயில் இருப்பதாக அப்போது செய்தி வந்தது. இவர் ஒரே மகன். 'மன்னிப்புக் கடிதம் எழுதித் தந்தால் விட்டுவிடுகிறோம்' என்றது அரசு. 'எதற்கு மன்னிப்புக் கோருவது? மாட்டேன்' என்று சொல்லிவிட்டார் சிவஸ்வாமி.

அத்தனை நெஞ்சுறுதி உடைய இவரது மனைவியும் இவருக்குச் சளைத்தவரல்ல. இப்போது நடக்கும் போராட்டத்தில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்!

'' 'உச்சவரம்பினால் பாதிக்கப்பட்ட சில நிலப் பிரபுக்களின் போராட்டம் இது; ஏழை விவசாயிகள் ஏமாறக் கூடாது' என்று அமைச்சர்கள் கூறுகிறார்களே?'' — சிவஸ்வாமியை நான் கேட்டேன்.

'' இன்றைக்கு இந்தப் போராட்டத்தின் விளைவாகச் சிறையில் இருக்கும் 4000 பேர்களில் உச்சவரம்பினால் பாதிக்கப்பட்டவர்கள் நாலைந்து பேர்கள் இருப்பார்கள்'' என்றார் சிவஸ்வாமி. ''நிலப் பிரபுக்கள் போராட்டமாவது, ஒன்றாவது? நிலப் பிரபுக்கள் இன்று ஏது? அப்படி இருப்பார்களேயானால், இவர்களுடைய உச்சவரம்புச் சட்டத்தில் ஓட்டை இருப்பதாகத்தானே அர்த்தம்?'' என்றார்.

கோவையில் சுதந்திரக்கட்சித் தலைவர் திரு ஜி. கே. சுந்தரத்தைச் சந்தித்துச் சில நிமிஷங்கள் பேசினேன். ''இந்தப் போராட்டத்துக்கிடையில் சில கம்யூனிஸ்டுகள், 'மில் அதிபர்கள் எல்லாம் யூனிட்டுக்கு ஐந்து பைசாதான் தருகிறார்கள்; ஏழை விவசாயிகள் மட்டும் அதிகமாகத் தர வேண்டியிருக்கிறது' என்று விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். இந்த வகுப்புவாத விஷப் பிரசாரத்தில் விவசாயிகள் ஏமாந்து விடக் கூடாது'' என்று அவர் எச்சரித்தார். ''மிகப் பெரிய மில் — அதாவது மிக அதிகமாக மின்சாரம் உபயோகிக்கும் மில் — சராசரியில் யூனிட்டுக்குப் பன்னிரண்டு காசு தருகிறது. அதைவிடக் குறைவாக மின்சாரம் உபயோகிக்கும் சிறிய மில்கள் யூனிட்டுக்குப் பதின்மூன்று காசு, அல்லது பதினான்கு காசு என்று கொடுக்கின்றன.

'' நாம் எதைக் கவனிக்க வேண்டும் என்றால் 10,000 குதிரை சக்தி உள்ள மிஷின்களைப் பயன்படுத்தும் மில்களுக்கும் பத்து குதிரை சக்தி உள்ள மிஷினை மட்டுமே பயன்படுத்தும் ஏழை விவசாயிக்கும் யூனிட்டுக்கு இவ்வளவு என்று மின் கட்டணம் வசூல் செய்வதில் அதிக வேற்றுமை இல்லை. விவசாயிகளுக்குச் சலுகை காட்டுவது அவசியம்.

''ஆனால் இதைக் காட்டிலும் முக்கியம் விவசாய வருமான வரி விதிப்பதில் ஏற்படுத்தியுள்ள மாற்றத்தால் விவசாயி படக்கூடிய அவதியும் 'ஸ்லாப் ஸிஸ்டம்' என்ற முறையில் மின் கட்டணம் வசூலிப்பதில் உள்ள அநீதியும் தான்'' என்றார்.

விவசாயிகள் சங்கக் காரியதரிசி திரு நாராயணசாமியிடம் பேசிக் கொண்டிருக்கையில் திரு சுந்தரம் சுருக்கமாகக் கூறியதை விரித்துரைக்குமாறு வேண்டினேன். அவர் சொன்னார்:

'' 'பயிரின் அடிப்படையில் ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயித்து விவசாய வருமான வரி விதிப்போம்' என்கிறார்கள். பயிரின் அடிப்படையில் விவசாய வருமான வரி விதிப்பது ஏற்கனவே உள்ள லஞ்ச ஊழல் மேலும் அதிகமாகவே உதவும். பயிருக்குத் தக்கபடி ஒரே நிலம் பலவிதமான ஸ்டாண்டர்ட் ஏக்கராக மாறும். 'இப்போது கரும்பு பயிரிடுகிறேன்; இப்போது புகையிலை போடுகிறேன்; இப்போது பருத்தி' என்று விவசாயி கர்ணத்திடம் போய்ச் சொல்லிவிட்டு வரவேண்டும். பயிர் மாறுதலுக்கு ஏற்பக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். ஒரே ஏக்கரில் ஒரு சமயம் இரண்டு பொதி பருத்தியும் விளையலாம், ஆறு பொதி பருத்தியும் விளையலாம். ஒரே வருடத்தில், பருத்தி ஒரு சமயம் விற்ற விலைக்கு ஒன்றுக்குப் பாதி விலையில் இன்னொரு சமயம் விற்கும். விவசாயி அதிக படிப்பறிவில்லாதவன்; கைநாட்டுக்காரன். அவன் கணக்கு வைத்துக் கொள்வான். ஆனால் எதையும் நிரூபிக்க அவனால் முடியாது. வருமான வரி அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல இவனுக்குத் தெரியாது.''

''ஸ்லாப் ஸிஸ்டம் என்பது.....'' என்று அவருக்கு இரண்டாவது பிரச்னையை விளக்குமாறு நினைவூட்டினேன்.

''400 யூனிட்டுக்கு அதிகமாக மின்சாரம் பயன்படுத்துகிறவர்களுக்குச் சலுகை காட்டுவதாகச் சொல்கிறார்கள். இருநூறு அடி ஆழம் கிணறு வெட்டி நீர் கண்ட ஓர் ஏழை விவசாயி பம்ப் செட்டை ஓட்டினால் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் நீர் வற்றிவிடுகிறது. மறுபடியும் தண்ணீர் ஊறினால்தானே அவன் பம்ப்பை இயக்கப் போகிறான்? எனவே, இவன் நானூறு யூனிட் பயன்படுத்துவான் என்று சொல்வதற்கில்லை. ஆக, ஏழை விவசாயிக்கு இந்த 'ஸ்லாப் ஸிஸ்டத்தால்' என்ன பயன்? அமைச்சர்கள் குறிப்பிடுகிற நிலப் பிரபுக்களுக்கேதான் ஆதாயம்!''

கோவையில் நான் பல விவசாயிகளுடன் பேசிவிட்டுத் திரும்பியதும் என் மனத்தில் மேலோங்கியிருந்த எண்ணம்: 'இந்த விவசாயிகளுக்கு அரசு வரிந்து கட்டிக் கொண்டு உதவாவிட்டாலும் ஆணவப் பேச்சு பேசாமலாவது இருக்கலாம்.' — **குட்டி கிருஷ்ணன்**

நாடே இருக்க நிலம் எதற்கு?

சுதந்திர வீரர் சாவர்க்கருக்குச் சொந்தமான நிலத்தை (நாஸிக் ஜில்லாவில் இருக்கிறது) பிரிட்டிஷார் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் சாவர்க்கரின் நண்பர்கள் அந்த நிலத்தை அவருக்குத் திருப்பித் தரப் பிரயத்தனங்கள் செய்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை.

அப்பொழுது ஒரு நண்பர் சொன்னார்: ''பாருங்கள் அரசு உங்கள் சொந்த நிலத்தைத் திருப்பிக் கொடுக்க எவ்வளவு காலம் கடத்துகிறது!''

''போனால் போகட்டும்! எனக்கு விசாலமான இந்தத் தேசமே கிடைத்திருக்கும்போது 'இந்தத் துண்டு' நிலத்துக்காக ஏன் கவலைப்படணும்?'' என்றார் வீரசாவர்க்கர். - 'அம்ருத்' பத்திரிகையிலிருந்து

எடுத்தெழுதியவர்: பி.ஆர். ராஜாராம்

என்ன சேதி?

புதிய பட்டத்துக்கு வாழ்த்து

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துக்கு இருபத்தோராவது புதிய மகாசந்நிதானமாக



எழுந்தருளியிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் ஆவார்கள். இவர்கள் முந்தைய ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளால் பதினெரு ஆண்டுகளுக்கு முன்பே இளவரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்; திருப்பனந்தாள் மடத்தைச் செவ்வனே பரிபாலனம் செய்து அனுபவம் உள்ளவர்கள். தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர்கள். தரும சிந்தனை மிக்கவர்கள். இவர்களது நிருவாகத்தில் சைவமும், சிவதருமமும், தமிழும் சிறந்தோங்குமாக!

சிங் தேவ் எச்சரிக்கை!

ஒரிஸ்ஸாவில் புதிதாகப் பதவி ஏற்றுள்ள ஸ்ரீமதி நந்தினி ஸத்பதியைப் பற்றியும், அம் மந்திரிசபை தோற்றுவிக்கப்பட்ட முறையைப் பற்றியும் சுதந்திரக் கட்சித் தலைவர் ஆர். என். சிங் தேவ் வெளியிட்டுள்ள அறிக்கை ஓர் எச்சரிக்கையாக விளங்குகிறது. திரு ஆர். என். சிங் தேவ் ஒரிஸ்ஸாவின் முன்னாள் முதல்வர்; இப்பொழுது பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள கூட்டணி மந்திரி சபையிலும் பணியாற்றியிருக்கிறார். அவர் தம் அறிக்கையில் கூறுவதாவது:

''தனிப்பட்ட முறையில் ஸ்ரீமதி நந்தினி ஸத்பதிக்கு என் நல்வாழ்த்துக்கள் உண்டு. ஆனால் அவர் கம்யூனிஸ்ட் கட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய அங்கத்தினர். ஆகவே, அவர் ராஜ்யத்தை எத்திசையை நோக்கி இட்டுச் செல்கிறார் என்பதனைக் கூர்ந்து பார்க்க வேண்டும்.

''பாபமான முறையில் இப் புதிய அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டிருப்பதால், கெட்ட வேளையில் ஸ்ரீமதி நந்தினி ஸத்பதி தமது புதுப் பதவியை வகிக்கத் தொடங்கியிருக்கிறார் எனலாம். கொஞ்சம்கூட வெட்கமோ கூச்சமோ இன்றி ஆளும் கூட்டணியிலிருந்த சட்ட சபை உறுப்பினர்கள் பலரைப் புது காங்கிரஸுக்கு இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கட்சி மாறியவர்களின் பலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட இம் மந்திரி சபை இந்திய ஜனநாயக வரலாற்றில் அவமானத்துக்குரிய அத்தியாயமாக இருக்கும்.''

சம்பூ பிரசாத் மறைவு

'ஆந்திரப் பத்திரிகா'வின் ஆசிரியர் ஸ்ரீ சம்பூ பிரசாத் காலமானார் என்ற செய்தியைக் கேட்டபோது, அரும் தேசபக்தர் ஒருவரை இழந்துவிட்டோமே என்று பலரும்



துயருற்றிருப்பார்கள். ஆந்திராவில் மசூலிப்பட்டணத்திலும், வங்கத்தில் தாகூரின் சாந்திநிகேதனத்திலும் படித்துப் பட்டம் பெற்றார். பிறகு தமது மாமனாரும் அந்நாளையபெரிய தேசபக்தருமான தேசோத்தாரக திரு கே. நாகேசுவர ராவ் பந்துலு அவர்கள் தொடங்கிய வாரப் பத்திரிகையான 'ஆந்திரப் பத்திரிகா'வின் ஆசிரியராகச் சேர்ந்தார்.


இரண்டு ஆண்டுகளில் பந்துலுகாரு காலமானவுடன், 1938லிருந்தே ஆந்திரப் பத்திரிகா தினசரி, வார ஏடுகள், 'பாரதி' என்ற இலக்கிய மாதப் பத்திரிகை ஆகிய மூன்றினுக்கும் ஆசிரியப் பொறுப்பேற்றுச் சென்ற முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆந்திர மக்களுக்கு அரசியலிலும், இலக்கியத்திலும் தம் எழுத்தின் மூலம் அருமையாக வழிகாட்டி வந்தார்; அவர் மறைவு ஆந்திர நாட்டுக்குப் பெருநஷ்டமாகும். தமிழ் மக்கள் ஓர் அரிய இனிய நண்பரை இழந்தனர். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்கள்.

அவர் கெடிலாக் கம்யூனிஸ்டு: இவர் இம்பாலா சோஷலிஸ்டு!

சோவியத் கம்யூனிஸ்டு தலைவர் ப்ரெஷ்னெவ், கார்கள் சேகரிப்பதில் விருப்பம் உள்ளவராம். சமீபத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்த நிக்சன் அவருக்கு 'கெடிலாக்' கார் ஒன்றை அன்பளிப்பாக அளித்தாராம்.

சோஷலிஸம் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டே மாடமாளிகைகளில், கார் வசதிகளுடன் வாழும் காங்கிரஸ் தலைவர்களை ''இம்பாலா சோஷலிஸ்டுகள்'' என்று வர்ணிக்கிறார் இந்திரா காங்கிரஸ் தலைவர் விபூதி மிஸ்ரா.

ஹிம்மத்திலிருந்தும், ஹிந்துஸ்தான் டைம்ஸிலிருந்தும்
எடுத்தெழுதியவர்கள்: வீயெஸ், சம்பத்குமாரி



சம்ஸ்கிருத எழுத்துக்களின் சிறப்பு

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்

உள்ளத் தூய்மை, உடல் வலுவைத் தரும் ஓசைகள்

சம்ஸ்கிருதத்தைப் பாதுகாப்பதனால் மொழிகள் அனைத்தினதும் மூலத்தைப் பாதுகாத்தவர்கள் ஆகிறீர்கள். சம்ஸ்கிருதம் எல்லா மொழிகளுக்கும் தாய் மொழியாக விளங்குகிறது. ஒரு காலத்தில் ஒரே மொழியும் ஒரே மக்கள் சமுதாயமும் இருந்தன என்பதற்கான நிரூபணத்தை ஸம்ஸ்கிருதமே தந்துள்ளது.


தெய்விகத்திலிருந்து தோன்றியது ஸம்ஸ்கிருதம். மனத்தைத் தூய்மையாக்கவும் சரீரத்தை வலுப்படுத்தவும் தகுந்த முறையில் அந்த மொழி அமைக்கப்பட்டுள்ளது.

மொழியின் தோற்றத்தைப் பற்றிய ஐதிஹ்யத்தைச் சொல்கிறேன். நடராஜர் தம்மை மறந்து நாட்டியம் ஆடிக் கொண்டும் உடுக்கடித்துக் கொண்டும் நின்ற சமயத்தில் உடுக்கிலிருந்து ஹயவரடு ஹல் முதலிய 14 வேறு வேறான சப்தங்கள் வெளிவந்தன; சரியான மொழியமைப்புக்கு முயன்றவரும் ரிஷிகளுள் ஒருவருமான பாணினி என்பவர் அந்தச்சப்தங்களை ஒலி விஞ்ஞானமாகக் கொண்டு சம்ஸ்கிருத அக்ஷரத் தோற்றங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. மொழியென்பது எழுத்துக்களின் சேர்க்கை. இந்த இடத்தில் அந்த எழுத்துக்கள் தெய்விக உடுக்கிலிருந்து வெளிவந்துள்ளன. அது கடவுளின் மொழி. எப்படி ஒரே கடவுள் நிலவுகிறாரோ அதேபோல் நடராஜர் உடுக்கிலிருந்து வந்த ஒரே மொழி ஆதியில் நிலவியது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த தண்டி என்னும் கவி சம்ஸ்கிருதத்தைத் தெய்வ வாக்கு என்று வருணித்திருக்கிறார்.

சரீரத்தில் உள்ள ஒவ்வோர் உறுப்பையும் நல்ல முறையிலும் தீய முறையிலும் உபயோகிக்கலாம். நல்ல சப்தத்தையும் தீய ஓசையையும் நாவினால் ஏற்படுத்தலாம். நரம்புகளின் சலனம் ஓசையினால் ஏற்படுகிறது. இது முறையே சில உணர்ச்சிகளை ஏற்படுத்துகிறது. சில நரம்புகளை இயங்கச் செய்வதனால் ஒரு வல் மனச் சாந்தியையும் தோன்றச் செய்ய முடியும். மனத்தைத் தூய்மைப்படுத்தி நரம்பு மண்டலத்தை வலுப்படுத்த வல்ல ஓசைகளையே ஏற்படுத்தும் விதத்தில் சம்ஸ்கிருத எழுத்துக்களும் மந்திரங்களும் ஆக்கப்பட்டுள்ளன. சம்ஸ்காரம் செய்யப்பட்ட அல்லது தூய்மைப்படுத்தப்பட்ட மொழியே சம்ஸ்கிருதம். சம்ஸ்கிருத மந்திரங்களை உச்சரிப்பதால் நரம்பு மண்டலத்துக்கு அளிக்கப்படும் அப்பியாசத்தினால் பிராணாயாமம் போன்ற யோகங்களின் தேவையை நீக்குகிறது.


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
RIN
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கனமிக்கது ரின்: சோப்பை விட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு
அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

அலை ஓசை



அமரர் கல்கி

10. பகற்கனவு

ஒரு நிமிஷ நேரம் இந்தப் பூமண்டலம் மட்டுமின்றி ஈரேழு பதினாலு உலகங்களும் ஸ்தம்பித்து நின்றன. சப்த மயமான பிரபஞ்சத்தில் மிக மெல்லிய இலை அசையும் சப்தம்கூடக் கேளாத நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. வாயு பகவானும் தன்னுடைய இயற்கையான சலனத்தை மறந்து நின்றுவிட்டதாகத் தோன்றியது.

பிறகு எங்கேயோ அதல பாதாளத்திலிருந்து பேசுவது போலச் செளந்தர ராகவனுடைய குரல் கேட்டது.

''நான் காண்பது உண்மையா? அல்லது கனவு காண்கிறேனா?'' என்றான்.

''தாஜ்மகாலைச் சொல்கிறீர்களா? ஆம்; அதைக் 'காதல் கனவு' என்றும் 'பளிங்குக் கல் சொப்பனம்' என்றும் கவிகள் வர்ணித்திருக்கிறார்கள். ஆனாலும் இங்கு நின்று பார்க்கும்போது, தாஜ்மகால் என்பது வெறும் கனவல்லவென்றும் நிஜக் கட்டிடம்தான் என்றும் தோன்றுகிறது!'' — இந்தப் பதிலைத் தாரிணி கூறினாள்.

இடையில் தாரிணியின் தோழி நிருபமா தலையிட்டு, ''இவர் மிஸ்டர் ராகவன் அல்லவா? என்ன அதிசயமான சந்திப்பு?'' என்றாள்.

''ஆம்; அந்தத் துரதிர்ஷ்டசாலி நான்தான்!'' என்றான் ராகவன் நிருபமாவைப் பார்த்து.

''ஆகா! இவ்வளவு அடக்கம் உங்களுக்கு எப்போது வந்தது? உங்கள் பின்னால் நிற்கும் பெண் யார்?'' என்று நிருபமா கேட்கவும் ராகவனுடைய முகம் கொஞ்சம் சுருங்கியது.

''அவரிடம் அதைக் கேட்பானேன்? உன்னால் ஊகிக்க முடியவில்லையா நிருபமா? அவருடைய அருமை மனைவியாகத்தான் இருக்க வேண்டும்!'' என்று தாரிணி கூறினாள்.

''இது உண்மைதானா?'' என்று நிருபமா பிடிவாதமாகக் கேட்டாள்.

''உண்மைதான்!'' என்று ராகவன், மென்று விழுங்கினான்.

''ஆகா! எவ்வளவு அழகான பெண்! இப்படிப்பட்டவளைக் கல்யாணம் செய்துகொண்டும் உம்மைத் துரதிர்ஷ்டசாலி என்று சொல்லிக் கொள்கிறீரே! நல்ல வேடிக்கை இது!'' என்று கூறி நகைத்துவிட்டு, ''அதோ பின்னால் வருகிற இளைஞர் யார்?'' என்று கேட்டாள் நிருபமா.

''என்னுடைய மனைவியின் பந்து'' என்று ராகவன் முணுமுணுத்தான்.

''எனக்குக்கூடத் தெரிந்த முகமாகத் தோன்றுகிறது. சமீபத்தில் எங்கேயோ பார்த்திருக்கிறேன்'' என்றாள் தாரிணி.

''இந்தப் பையனை நீ எப்படிப் பார்த்திருக்க முடியும்? வேறு யாரையோ பார்த்துவிட்டுத் தவறாகச் சொல்கிறாய்'' என்றான் செளந்தரராகவன்.

இதற்குள் சூரியா கொஞ்சம் முன்னால் வந்து, ''இவர் சொல்வது பிசகில்லை. ஹரிபுரா காங்கிரஸில் இவரை நான் பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு, தாரிணியை நோக்கி, ''நீங்கள் சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டத்துக்கு வந்திருந்தீர்கள் அல்லவா?'' என்றான்.

ஹரிபுரா காங்கிரஸ் என்றதும் எட்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த கராச்சி காங்கிரஸ் ராகவனுடைய ஞாபகத்

துக்கு வந்தது. கராச்சி விமானக் கூடமும் அங்கே முதன் முதலில் தான் தாரிணியைச் சந்தித்த சந்தர்ப்பமும் நினைவுக்கு வந்தன. இதற்கிடையில் தாரிணியின் மதுரமான குரல், ''ஆம்; சோஷலிஸ்ட் கூட்டத்துக்கு நான் வந்திருந்தேன். அங்கே நீங்கள் பிரமாதமான பிரசங்கம் ஒன்று செய்தீர்கள். அதை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை!'' என்று கூறியது கனவிலே கேட்பது போல் ராகவன் காதில் விழுந்தது.

சற்று அவன் நிதானித்துத் தாரிணி சூரியாவைப் பற்றித்தான் அவ்விதம் சொல்கிறாள் என்பதை அறிந்துகொண்டான். தன்னுடைய எழுத்துத் திறமையைக் குறித்துத் தாரிணி ஒரு சமயம் பாராட்டிப் பேசியது அவனுக்கு நினைவு வந்தது.

''ஓஹோ! சூரியா அவ்வளவு பெரிய அதிகப் பிரசங்கி என்று எனக்குத் தெரியாதே?'' என்றான்.

''அதிகப் பிரசங்கம் ஒன்றும் இவர் செய்யவில்லை. சுருக்கமாகத்தான் பேசினார். பேசியவரையில் அற்புதமாகப் பேசினார்'' என்றாள் தாரிணி.

''ஏழை, பணக்காரன் எல்லாம் ஒன்றாகிவிட வேண்டும்; சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் சுதேச ராஜாக்களை ஒழித்துவிட வேண்டும் என்றெல்லாம் வெளுத்துக் கட்டினானாக்கும்! இப்படியெல்லாம் தீவிரமாகப் பேசுவதில் கஷ்டம் ஒன்றுமில்லை. யார் வேணுமானாலும் அப்படித் தடபுடலாய்ப் பேசலாம்!'' என்றான் ராகவன்.

நிருபமா மறுபடியும் குறுக்கிட்டு, ''தயவுசெய்து கொஞ்சம் உங்கள் விவாதத்தை நிறுத்தி ஒரு நிமிஷம் இடைவெளி கொடுங்கள். என்னுடைய கணவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். இவர்தான் மிஸ்டர் வேணி பிரஸாத், பி.ஏ., எல்.எல்.பி. இந்த ஊரில் பிரபல வக்கீல். ஆனால் பிராக்டீஸ் மட்டும் கிடையாது. இப்போதைக்கு இவருடைய மனைவியின் சிநேகிதர்களை வீட்டுக்கு அழைத்து உபசரிப்பதுதான் இவருக்கு முக்கிய வேலை. தாரிணி எங்கள் வீட்டில்தான் தங்கியிருக்கிறாள். நீங்களும் வந்து தங்கினால் இவருக்கு மிக்க சந்தோஷமாக இருக்கும். எங்களால் முடிந்த சௌகரியம் செய்து கொடுப்போம். ஆக்ராவில் எத்தனை நாட்கள் தங்கியிருப்பதாக உங்களுடைய உத்தேசம்?'' என்று சௌந்தர ராகவனைப் பார்த்து நிருபமா கேட்டாள்.

'' இன்றைக்கும் நாளைக்கும்தான். தங்களுடைய அன்பார்ந்த அழைப்புக்காக வந்தனம். ஆனால் இன்னொரு சமயம் வருகிறோம். பொய் சொல்லுகிறவர்களுடன் சேர்ந்து ஒரே வீட்டில் இருக்க எனக்கு இஷ்டமில்லை.''

''அது என்ன? யார் பொய் சொன்னது?'' என்று நிருபமா கேட்டாள்.

''உங்களுடைய தோழிதான். நீங்களே கேளுங்கள்; இவள் இறந்துபோய் விட்டதாகக் கடிதம் எழுதியது உண்டா இல்லையா என்று?''

தாரிணி புன்னகை புரிந்து, ''நான் இறந்து போய் விட்டதாக நானே எப்படி எழுதியிருக்க முடியும்?'' என்றாள்.

''நீ எழுதா விட்டால் வேறு யாரையோ கொண்டு எழுதச் சொல்லியிருக்கிறாய்!''

''நான் இறந்து போனது என்னவோ உண்மையான செய்திதான்!''

''அப்படியானால் இப்போது இங்கே எப்படி இருக்கிறாய்?''


'' இறந்து போனவள் மீண்டும் பிழைத்தெழுந்தேன்.''

''எதற்காக?'' என்று ராகவன் கடுமையாகக் கேட்டான்.

''இறந்து போன பிறகு தங்களுக்கு நான் கொடுக்க வேண்டிய இரண்டாயிரம் ரூபாயைப் பற்றி நினைவு வந்தது. அதை நினைத்து நினைத்து நீங்கள் இராத் தூக்கம் இல்லாமல் தவிப்பீர்களே என்று எண்ணி மறுபடியும் பிழைத்து எழுந்து வந்தேன்!''

''பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும். நீ ஒரே அண்டப் புளுகாய்ப் புளுகுகிறாய். அன்றைக்கு டில்லி ஸ்டேஷனில் பார்த்தபோது, 'நான் தாரிணி இல்லை' என்று சொன்னாயே? அந்தப் பொய் எதற்காகச் சொன்னாய்?''







''அப்படி நான் சொல்லவில்லையே! 'பழைய தாரிணி நான் இல்லை' என்று தான் சொன்னேன். மேலே சொல்வதற்குள் ரயில் நகர்ந்து விட்டது.''

''ஆகா! முன்னைப் போலவே எதற்கும் காரணம் சொல்லிச் சமாளித்துக் கொள்கிறாய்'' என்றான் ராகவன்.

''நான் எல்லா விஷயங்களிலும் முன்னைப்போலவேதான் மாறாமல் இருக்கிறேன். மற்றவர்களும் அப்படி இருந்தால் இந்த மாதிரிப் பேச்சுக்கே இடமிராது. போனால் போகட்டும். உங்களை மறுபடியும் எங்கே சந்திப்பது? பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லவா?''

''அதற்கு அவசரம் ஒன்றும் இல்லை. மெதுவாய் வாங்கிக் கொள்கிறேன். ஆனால் உங்களை மறுபடியும் நான் சந்திக்கவேண்டும். தாஜ்மகால் பார்த்தாகி விட்டதா?''

''சாயங்காலம் மஞ்சள் வெய்யிலில் பார்த்துவிட்டு இரவு பூரண சந்திரனுடைய நிலவிலும் பார்க்கலாம் என்று உத்தேசம்.''

''நாங்களும் அந்த நேரத்துக்குத் தான் வருவதாக இருக்கிறோம். பாக்கி விஷயம் அங்கே பேசிக் கொள்ளலாம்.''

இதற்குள் இரண்டு கோஷ்டிகளும் பிரிந்து வெவ்வேறு வழி போக வேண்டிய இடம் வந்தது. விடைபெற்றுக் கொண்டு பிரிந்தார்கள்.

தாரிணி முதலியவர்கள் போனதும் இத்தனை நேரமும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் மௌனமாக இருந்த சீதா, ''என்னா! இந்த ஸ்திரீ யார்?'' என்று கேட்டாள்.

''உன் அம்மாஞ்சியைக் கேட்டுத் தெரிந்துகொள்!'' என்றான் ராகவன்.

''அம்மாஞ்சியைக் கேட்பானேன்? நீங்கள்தான் சொல்லுங்களேன்! உங்களுக்குத் தெரியாதா?''

''பேஷாகத் தெரியும்! உன்னைப் போல் அவளும் ஒரு ஸ்திரீதான்!''

''ஸ்திரீதான் என்று எனக்கும் தெரிந்தது. ஆனால் உருவத்திலேதான் ஸ்திரீயே தவிர, நடவடிக்கை எல்லாம் ஆண் பிள்ளை மாதிரி! புருஷனாய்ப் பிறந்திருக்க வேண்டியவள்; தவறிப் பெண்ணாய்ப் பிறந்து விட்டாள் போலிருக்கிறது!''

''நீ சொல்வது ரொம்பச் சரி. ஆகவே அந்தப் பெண்ணாய்ப் பிறந்த புருஷனோடு நான் பேசுவதினால் உனக்கு மனக் கஷ்டம் ஏற்படாதல்லவா?''

''மனக் கஷ்டமா? எனக்கு எதற்காக மனக் கஷ்டம்? அசல் பெண்ணாய்ப் பிறந்தவளோடு நீங்கள் பேசினால்தான் எனக்கு என்ன வந்தது? என்னைச் சுத்தப் பட்டிக்காடு என்று நினைத்துக் கொண்டீர்களா? நானும் பம்பாய் நகரத்தில் பிறந்து வளர்ந்தவள்தான்.''

''அந்த மகத்தான விஷயத்தை மறந்து போய்விட்டேன். தயவுசெய்து மன்னிக்க வேணும்.''

''ஆனால் என்னிடம் எதையும் மறைத்துப் பேசினால் மட்டும் எனக்குப் பிடிக்காது. டில்லி ரயில்வே ஸ்டேஷனில் நீங்கள் ஓடிப் போய்ப் பேசினவள் இவள்தானே? அதை எதற்காக மறைக்க வேண்டும்?''

''பார்த்தாயா, சூரியா, உன் அத்தங்காளின் சமர்த்தை? இவளிடம் பயந்து கொண்டு நான் எதையோ மறைத்தேனாம்! நம்ம பக்கத்துப் பெண்களிடம் இதுதான் ஒரு பெரிய சங்கடம்! வெறும் சந்தேகப் பிராணிகள்!''

''நான் ஒன்றும் சந்தேகப் பிராணி இல்லை. 'ரயில்வே ஸ்டேஷனில் பார்த்துப் பேசியவள் யார்?' என்று நான் கேட்டதற்குத் 'தெரியாது' என்று ஏன் மெழுகி மறைத்தீர்கள்?''

''மெழுகவும் இல்லை; மறைக்கவும் இல்லை. தெரிந்தவளாக்கும் என்று போய்ப் பேசினேன். அவள் இல்லை என்று சாதித்தாள். அப்படியிருக்க, 'யார் யார்?' என்று நீ துளைத்தால் நான் என்ன பதில் சொல்வது? இப்போது அவளும் நானும் பேசிக்கொண்டிருந்தோமே? — அதிலிருந்தே உனக்கு விஷயம் தெரியவில்லையா?''

''ஏதோ இங்கிலீஷில் பேசிக்கொண்டிருந்தீர்கள். என்ன பேசினீர்கள் என்று நான் கண்டேனா? அவ்வளவு இங்கிலீஷ் எனக்குத் தெரியாது.''

''தெரியாவிட்டால் வாயை மூடிக் கொண்டு சும்மா இரு.''

''இப்படி எரிந்து விழத்தான் உங்களுக்குத் தெரியும்; அன்பாக ஒரு வார்த்தை சொல்லத் தெரியாது.''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு பின்னால் சூரியா வந்து கொண்டிருந்தான். பாரதியாரின் பாடலில்,

''தேன்விய தேனில் ஓர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனுமோ?''

என்ற வரிகள் அவனுடைய நினைவுக்கு வந்தன. அடடா! இவர்களுடைய இன்ப மயமான இல் வாழ்க்கையில் இந்த ஒரு துளி விஷம் கலந்து விட்டதாக அல்லவா காணப்படுகிறது? — என்று மனத்துக்குள் பச்சாத்தாபப் பட்டான்.

''அத்தங்கா! நீ அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னது கொஞ்சமும் சரியல்ல; உத்தமமான தேச சேவகி அவள். ஹரிபுரா காங்கிரஸில் அவள் ஓடி ஓடித்



காவியக்
கவர்ச்சி
மைசூர் பியூடி
வாஷ்-என்-வேர், சாயந்தோய்த்த
கேம்பிரிக்குகள்
புஷ்பாஞ்சலி
வாஷ்-என்-வேர், சாயந்தோய்த்த
கேம்பிரிக்கு வாயில்கள்
தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்
- பண்டைய மரபை இன்றைய வடிவாய்ப்
படைக்குமிடம்!
தாவண்கெரே
துணிவகைகள்
iam/dcm/3/72 tam

பாரதத்திலிருந்து பங்களாதேஷுக்கு!

சங்கர் சிமெண்ட்

போரினல் உருக்குலைந்த நாட்டைப் புதுப்பிக்கச் செல்கிறது

1968-69ம் ஆண்டில் ஏற்றுமதிக்கென இந்தியா சிமெண்ட்ஸ் அண்மையில் இந்திய அரசிடமிருந்து பாராட்டு இதழ் பெற்றுள்ளது. இந்த ஏற்றுமதி இன்னும் தொடர்கிறது...


சங்கர் சிமெண்ட் ஏற்றுமதியில் இப்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. புது நாடு ஒன்றை நிர்மாணிக்க, அந்நாட்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க, போரினல் சீர்குலைந்த தொழில்களையும் பொருளாதாரத்தையும் செம்மைப்படுத்த அது செல்கிறது. 20,000 டன் சங்கர் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ... இன்னும் நிறைய ஏற்றுமதி செய்யப்படும்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோட்,
சென்னை-2

தொழிற்சாலைகள்:
சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி, சேலம் மாவட்டம்

FDSIC-1773TMA



தொண்டு செய்ததைப் பார்த்திருந்தாயானால் அவளுடைய குண மேன்மை உனக்குத் தெரிந்திருக்கும். அவள் 'பானி சாஹியே?' (தண்ணீர் வேண்டுமா?) என்று கேட்கும் வார்த்தையின் இனிமையிலேயே தாகம் தணிந்துவிடும். அவளைப் பற்றி நீ ஒன்றும் தவறாக எண்ணிக் கொள்ளாதே!'' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான் சூரியா.

''நீ பெரிய அதிகப்பிரசங்கி என்று தாரிணி சொன்னது சரிதான்! ஒரே வர்ணிப்பாய் வர்ணிக்கிறாயே?'' என்றான் ராகவன்.

அதற்குப் பிறகு ஆக்ரா கோட்டையில் பாக்கியிருந்த கட்டிடங்களை அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். ஆனால் முன்னைப் போல் அவ்வளவு உற்சாகம் யாருக்கும் இல்லை.

''நடந்து நடந்து எனக்குக் காலை வலிக்கிறது. ஓட்டலுக்குப் போகலாமா?'' என்றாள் சீதா.

''ஆமாம்; பளிங்குக் கல்லாலேயே எல்லாக் கட்டிடங்களும் கட்டியிருப்பதால் ஒன்றைப் போலவே இன்னொன்றும் இருக்கிறது. ஒரு வித்தியாசமும் இல்லை. திரும்பிப் போக வேண்டியதுதான். சாயங்காலம் தாஜ்மகால் வேறு பார்க்க வேண்டும் அல்லவா?'' என்றான் ராகவன்.

''தாஜ்மகாலைப் பற்றியும் இப்படித்தான் சொல்லுவீர்களோ என்னமோ? அதுவும் பளிங்குக் கல்லால் கட்டியதுதானே?'' என்று சொன்னான் சூரியா.

''ஆஹா! அது வேறு விஷயம். தாஜ்மகால் கட்டிடமே இல்லை. அது உயிருள்ள தெய்விக சிற்ப வடிவம்; இந்தியாவில் மொகலாயர் காலத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் ஜீவ பிம்பம்; ரதியும் மன்மதனும் பவனி வரும் வெண்மலர் விமானம்; சந்திர கிரணங்களையும் மந்தமாருதத்தையும் வானவில்லின் வர்ணங்களையும் காதல் இன்பத்தையும் குழைத்து எழுதிய உயிர்ச் சித்திரம்; ஒரு தடவை பார்த்தவர்களின் உள்ளத்திலிருந்து என்றென்றும் அகலாத சௌந்தரிய மோகினி. தாஜ்மகாலைப் பார்க்காத ஜன்மம் மனித ஜன்மமே அல்ல!'' என்று ராகவன் சொல்மாரி பொழிந்தான்.

மூவரும் ஆக்ராவில் தாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்றார்கள். சாப்பிட்டு விட்டுச் சிரம பரிகாரம் செய்து கொண்டார்கள்

* * *

சீதா பட்டுப் பூச்சியின் பல வர்ண இறகுகள் போல் பிரகாசித்த உடைகள் அணிந்திருந்தாள். சிலந்திப் பூச்சியின் கூண்டைப் போல் தோன்றிய மெல்லிய சல்லாத் துணியைத் தலை பாதி மறையும்படியாகப் போர்த்திக் கொண்டிருந்தாள். விலை மதிக்க முடியாத முத்து மாலைகளையும் ரத்தின ஹாரங்களையும் அணிந்திருந்தாள். பாதங்களையும் விரல் நகங்களையும் செம்பஞ்சுக் குழம்பினால் அலங்கரித்து அழகுபடுத்திக் கொண்டிருந்தாள்.

வெண்ணிலாவின் நிறத்தையொத்த பளிங்குக் கல்லினால் கட்டி, பல வர்ண இரத்தினக் கற்களினால் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த அரண்மனையின் மண்டபங்களிலும்' மாடங்களிலும் அங்குமிங்கும் நடமாடினாள். ஆங்காங்கு பளிங்குக் கல் வாய்க்கால்களில் சலசலவென்று ஓடிய நீரோடையைப் பார்த்து மகிழ்ந்தாள். சிற்சில இடங்களில் நீரோடையில் சிறு குளங்கள் அமைந்திருந்தன. அந்தக் குளங்களில் அன்று மலர்ந்த குமுதங்களும் தாமரைகளும் செங்கழுநீர்ப் பூக்களும் செடி, கொடிகளுடனும் இலைகளுடனும் காணப்பட்டன. இன்னும் சில குளங்களில் அன்று பூத்த ரோஜா மலர்களைக் கொட்டியிருந்தார்கள். புஷ்பங்களின் வாசனைகளோடு ராணி நூர்ஜஹான் கண்டுபிடித்து உலகுக்கு அளித்த ரோஜா வாசனையும் அத்தர் வாசனையும் அகிற் புகை வாசனையும் கலந்து பரிமளித்தன.

குளங்களின் ஓரமாக நின்று, மலர்ந்து மிதந்த புஷ்பங்களைச் சில சமயம் சீதா உற்றுப் பார்த்தாள். சில சமயம் ஸ்படிகம் போன்ற தண்ணீரில் தன்னுடைய பொன் மேனியின் அழகைக் கண்ட ஆனந்தத்தினால் அவளுடைய தேகமெல்லாம் சிலிர்த்தது.

திடீரென்று அவளைச் சுற்றிப் பல பணிப் பெண்கள் நின்றார்கள். எங்கிருந்து வந்தார்களோ தெரியாது. எல்லாரும் அழகிகள்தான். படமெடுத்து



பம்பாயில் உள்ள மரங்களுக்கு ஓர் அழகுப் போட்டி நடத்தினார்கள். பம்பாய் போர்ட் டிரஸ்ட் தோட்டத்தில் உள்ள ஒரு 80 வயது மரத்திற்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. — பாலி

— டைம்ஸ் ஆஃப் இந்தியா

ஆடி அவ்வப்போது சீறும் நாக சர்ப்பத்தின் அழகை அவர்களுடைய அழகு ஒத்திருந்தது.

நாகப் பாம்பு தன் நீண்ட நாவை நீட்டுவது போல் அந்தப் பணிப் பெண்கள் எல்லாரும் சீதாவை நோக்கித் தங்கள் ஆட்காட்டி விரலைச் சுட்டிக் காட்டினார்கள். நெருப்புத் தழலைப் போல் அவர்களுடைய கண்கள் பிரகாசித்தன. ''இவள்தான்!'' ''இவள்தான்!'' என்று சொல்லி ஏக காலத்தில் எல்லாரும் சீறினார்கள்.

''வா! எங்களுடன் வா!'' என்று சீதாவை அழைத்தார்கள். அவர்களுடைய அழைப்பை மறுக்க முடியாமல் சீதா அவர்களுடன் சென்றாள்.

விசாலமான பளிங்குக் கல் மண்டபம் ஒன்றில், தோகை விரித்த மயிலைப் போல் பின்புறச் சாய்வு அமைந்த ரத்தின கசிதமான சிம்மாசனத்தில் மொகலாய மன்னனின் பட்டமகிஷி அமர்ந்திருந்தாள். ஆஹா! அந்த மாதரசியின் கர்வந்தான் என்ன? சீதாவை, ''வா'' என்றுகூட அழைக்கவில்லை; உட்காரவும் சொல்லவில்லை.

''இந்த அசட்டுப் பைத்தியக்காரி யார்? எதற்காக இவளை இவ்விடம் கொண்டு வந்தீர்கள்?'' என்று பணிப் பெண்களைப் பார்த்துச் சக்கரவர்த்தினி கேட்டாள்.

''மகாராணி! இவள்தான் நம் இளவரசரின் காதலைக் கவர்ந்த காதகி. ரஜபுத்திர மங்கை சீதா!'' என்று ஒரு பணிப் பெண் கூறினாள்.

''ஓகோ! அப்படியா? இவளுக்குத் தக்க தண்டனை விதிப்போம். இன்று நள்ளிரவு வரையில் இவள் உயிரோடு இருக்கட்டும்!'' என்று அரசியின் ஆணை பிறந்தது.

அந்தி மாலையில் அரண்மனை உத்தியான வனத்தில் சீதா அங்குமிங்கும் அலைந்தாள். ரோஜா மலர்களையும் மல்லிகைப் பூக்களையும் பறித்து முகர்ந்தாள். அவளுடைய மனத்தில் கவலை குடிகொண்டிருந்த போதிலும் இளவரசர் வந்து தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் இருந்தது. இளவரசருடைய முகத் தோற்றத்தை எண்ணிப் பார்த்தபோது மொகலாய உடை தரித்த சௌந்தரராகவனுடைய வடிவமும் முகமும் சீதாவின் அகக் கண் முன்னால் வந்தன.

மாலை மயங்கி இருளானபோது அவளுடைய உள்ளத்தில் திகில் தோன்றியது. அது மிகுதியாக நள்ளிரவு நெருங்கி வந்தது. அரண்மனையைச் சோதி மயமாகச் செய்துகொண்டிருந்த தீபங்கள் ஒவ்வொன்றாக அணைக்கப்பட்டன. பிறகு சீதா இருளும் தானும் தனிமையுமாக ஆனாள். சலவைக் கல் சுவரில் அமைந்திருந்த சித்திரப் பலகணி வழியாகச் சந்திரனுடைய கிரணம் ஒன்று உள்ளே புகுந்து சீதாவின் கன்னத்தைத் தொட்டுத் தன்னுடைய மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது.

திடீரென்று அறைக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

''அடியே! தூங்கிவிட்டாள் போலிருக்கிறதடி!''

''இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரே தூக்கமாய்த் தூங்க வேண்டியவள் தானே!''

''எனக்கு என்னவோ இவளை ஒரேயடியாய்க் கொன்றுவிடுவதில் விருப்பமில்லை. அனார்க்கலியைச் சிறையில் அடைத்ததுபோல் இவளையும் அடைத்துவிட்டால், தானே பைத்தியம் பிடித்துப் புலம்பிச் சாகிறாள்!''

''எல்லாவற்றுக்கும் மகாராணியைக் கேட்டுக் கொண்டு வருவோம், வாருங்கள்!''

பேச்சுக் குரல்கள் நின்று மௌனம் குடிகொண்டது. உடல் நடுக்கத்துடன் சீதா எழுந்தாள். இனி அங்கே ஒரு கணம் தாமதிப்பதும் ஆபத்தாகிவிடும். உடனே கிளம்பி எப்படியாவது இந்த அந்தப்புரச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்து ஓடிப்போக வேண்டும். இளவரசர் இங்கு வந்து தன்னைத் தப்புவிப்பார் என்று நினைப்பது மதியீனம்! தான் இங்கிருப்பதே அவருக்குத் தெரியாதே! பின் எப்படிக் காப்பாற்றுவார்? 'டில்லியிலே இருக்கவும்; ஆக்ராவுக்கு வரவேண்டாம்!' என்று இளவரசர் சொன்னதைக் கேட்காமல் அல்லவா வந்துவிட்டோம்!

இருள் சூழ்ந்த அந்தப்புரத்தின் தாழ்வாரங்கள் வழியாகச் சீதா தட்டுத் தடுமாறி நடந்து சென்றாள். கையினால் சுவர்களைத் தடவிக் கதவு உள்ள இடத்தைத் தேடிக் கொண்டே சென்றாள். ஆங்காங்கு பலகணிகளின் வழியாக வந்த நிலா வெளிச்சம் அவளுக்கு ஒருவாறு வழிகாட்டிக்கொண்டிருந்தது. பல இடங்களில் சுவரைக் கதவு என்று எண்ணி ஏமாந்தாள். கதவு தட்டுப்பட்டாலும் அதைத் திறக்க முடியாமல் ஏமாற்றமடைந்தாள். ஒரு யுகம்போல் தோன்றிய ஒரு நாழிகை நேரம் இப்படி அலைந்து திரிந்த பிறகு கடைசியில் ஒரு கதவு அவள் கையை வைத்ததும் திறந்தது. நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள வாசற்படியைத் தாண்டினாள். வெளியே வந்ததும் தன் எதிரே பிரம்



அதி நவீன போஷாக்கு பானம்!

விவா போஷாக்கு செறிந்தது. விவா சுவை நிறைந்தது. உடனடியாக கரைகிறது. அதிக சக்தி அளிக்கிறது. பெரியவர்களுக்குப் பிடித்தமானது. குழந்தைகள் விரும்புவது—விவா. ஏனெனில், விவா தூய பாலாடைக் கலவையோடு இன்னும் பல நல்ல பொருட்கள் அடங்கியது. விவாவில் உள்ள ப்ரோட்டீன் உங்களுக்கு வலிமை அளிக்கிறது. விவாவில் உள்ள கார்போஹைட்ரேட் உங்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது. விவாவில் மால்ட் செய்யப்பட்ட பார்லியும், கோதுமையும் நிறைந்துள்ளது.

எனவே விவா எல்லாவற்றையும் விட சுவைமிகுந்த போஷாக்கு பானமாகத் திகழ்கிறது.

விவா அதிநவீன தொழில்நுட்ப முறையில் உருவானது. எனவே அதன் பூரண போஷாக்கு தன்மை நீடித்து நிலைத்து நிற்கிறது. மேலும் உடனடியாக கரைகிறது.

இன்றே உங்கள் குடும்பத்துக்கு ஒரு பாட்டில் விவா வாங்கிச் செல்வீர்—புதிய வலிமையும் புத்துணர்ச்சியும் பெறுவீர்!

சிறந்த சுவைக்கும், செறிந்த சக்திக்கும் நவீன விவா

ULKA-VS-TAM

மாண்டமான கோர ராட்சத உருவம் ஒன்று நிற்பதைக் கண்டு திகைத்து நின்றாள். அந்த உருவம் யார் என்பது அவள் அறிவாள். ஆணும் இல்லாத பெண்ணும் இல்லாத அலி அவன். அதோடு செவிட்டு ஊமை. காது கேளாது; பேசவும் முடியாது. ஆனால் அவன் கண் பார்வை தீட்சண்யமானது. தன்னுடைய கடமை என்னவென்பதும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அந்தப்புரத்திலிருந்து வெளியே போகிறவர்களைத் தடுப்பது அவனுடைய முதல் கடமை, மீறிப் போக யத்தனிப்பவர்களைக் கொஞ்சமும் தாட்சிண்யம் பாராமல் கண்ட துண்டமாக வெட்டுவதற்காக அவன் கத்தி வைத்திருந்தான். கத்திக்கு இரையாகாமல் தப்பி ஓடுகிறவர்களைக் குத்திக் கொல்வதற்காக ஈட்டியும் வைத்திருந்தான். இவனைப் போல் பல அலிகள் மொகலாய பாதுஷாவின் அந்தப்புரத்தைப் பாதுகாத்து வந்தார்கள்.

இவற்றையெல்லாம் நன்கறிந்திருந்த சீதா நடுநடுங்கினாள். அந்த அலியோ ஒரு வார்த்தையும் பேசாமல் அவளை உற்றுப் பார்த்து விழித்தான்.

அவ்வளவுதான்; சீதா பீதியினால் தன்னை மறந்து விட்டாள். ''சூரியா! சூரியா!'' என்று கதறினாள். தன்னைக் காப்பாற்றுவதற்காகத் தன் அம்மாஞ்சி சூரியா அந்தக்கோட்டைக்குப் பக்கத்தில் எங்கேயோ ஒளிந்திருக்கிறான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. அதனாலேதான், ''சூரியா!'' என்று அவள் கதறினாள்.

சீதாவின் கதறலுக்கு ஒரு பதில் குரல் வந்தது: ''இங்கே சூரியா இல்லை; நான் இருக்கிறேன்; வருகிறேன்!'' என்று அந்தக் குரல் சொல்லிற்று. அது யாருடைய குரல் என்று சீதா அதிசயப்பட்டுக் கொண்டிருக்கையில் வெண்ணிலவு பிரகாசித்த நிலா முற்றத்துக்கு அப்பால் இருள் சூழ்ந்திருந்த மண்டபத்திலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு வந்தது. கொஞ்ச தூரம் வந்ததும் அது யாருடைய உருவம் என்பது சீதாவுக்குத் தெரிந்துபோயிற்று. அன்றொரு நாள் தன் தாயார் நோயாகப் படுத்திருந்தபோது அவளைப் பார்க்க வந்து பணமும் நகையும் கொடுத்து விட்டுப் போன ஸ்திரீதான். புதுடில்லி சாலை முனையில் கையில் கத்தியுடன் மரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாளே, அவள்தான்! அந்த ஸ்திரீ இப்போதும் அக்கத்தியைக் கையில் பிடித்திருந்தாள். நிலா வெளிச்சத்தில் கத்தியின் சுடர் விளிம்பு தழல் கீற்றைப் போல் பிரகாசித்தது.

அந்த ஸ்திரீ யார்? அவள் எதற்காக வருகிறாள்? அலியைக் கொன்று தன்னைக் காப்பாற்ற வருகிறாளோ, அல்லது அந்தப்புரத்திலிருந்து தப்ப முயன்றதற்காகத் தன்னையே கொன்று விடுவதற்குத்தானோ?...

''அத்தங்கா! அத்தங்கா! இது என்ன தூங்கிக் கொண்டே பேசுகிறாய்! எழுந்திரு!'' என்றான் சூரியா.

சீதா கண் விழித்தாள். பட்டப் பகலில் தான் தூங்கியது மட்டுமல்லாமல், பயங்கரமான கனவு கண்டு பிதற்றியும் இருக்க வேண்டும் என்று தெரிந்து வெட்கினாள். வெட்கத்தை மறைப்பதற்காக, ''நான் ஒன்றும் பிதற்றவில்லையே, சூரியா! இவர் எங்கே போனார்?'' என்று கேட்டாள்.

''டோங்கா கொண்டு வருவதற்காக வாசலுக்குப் போனார். எழுந்திரு. சீக்கிரம்! தாஜ்மகாலுக்குப் புறப்பட வேண்டாமா? மணி நாலு அடித்து விட்டதே!'' என்றான் சூரியா. (தொடரும்)

11. போலோ

☐ போலோ ஆட்டம் பிரசித்தியும் பழமையும் வாய்ந்தது. கி. மு. 600ஆம் ஆண்டில் பாரசீகர்களும் துருக்கியரும் போலோ ஆட்டம் ஆடியதாகப் பாரசீகக் கவி பிர்தூஸி சித்திரித்திருக்கிறார். இந்த விளையாட்டு பாரசீகத்திலிருந்து சீனா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு வேகமாகப் பரவியது. இந்தியாவில் அடியெடுத்து வைத்த பிரிட்டிஷ் சிப்பாய்கள் போலோ ஆட்டத்தை இங்கு அறிமுகப்படுத்தினார்கள்.

☐ போலோவில் ஒரு மாறுதல் செய்து இப்பொழுது ஆடப்படுவதைக் காணலாம். சைக்கிளில் ஹாக்கி மட்டையைப் பிடித்துக் கொண்டு பந்தை அடித்து விளையாடுவது சில கல்லூரிகளில் நிலை எடுத்துள்ளது. இந்தப் 'போலோ' நவீன விளையாட்டை முதன் முதலில் ஆட வழி வகுத்தவர், போபால் நவாப். இவர் முதல் தடவையாக அலிகார் சர்வகலாசாலையில் இந்த நவீன 'போலோ' விளையாட்டைத் தொடங்கி வைத்தார். குதிரைகளைப் பராமரிக்க எல்லாருக்கும் வசதி இராதல்லவா? அதற்காக இந்த நூதன வழியைக் கண்டுபிடித்தார். குண்டுமணி

தெரிந்த விளையாட்டு: தெரியாத விவரம்



“ஸைக்கோ ஸாரநாதன்”

20. ரகசிய சந்திப்பு

கனகம் ‘குய்யோ முறையோ’ என்று கூச்சல் போட்டாள்: ‘‘ஐயய்யோ! இவன் காலில் விழுகிற அளவுக்குப் போயிட்டியேடி! என்னவோ மாய்மாலம் பண்ணி மயக்கிட்டானே, உன்னை? நான் என்ன செய்வேன்?’’

‘‘அம்மா! நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்! ஆ ஊ என்று கத்தாமல் வாயை மூடிக்கிட்டு இரு போதும்!’’

‘‘கேட்டுக்கோடா! கேட்டுக்கோ! உன் மனசு குளிர்ந்து போச்சா? என் பொண்ணு இன்றைய வரைக்கும் என்னை எதிர்த்து ஒரு வார்த்தை சொன்ன தில்லை; உன் போதனையாலே இப்போ பேசிட்டா!... சந்தோஷம் தானே, உனக்கு?’’


‘‘அம்மா! அவரைத் தாறுமாறாக ஏசாதே! நான் கேட்டுக்கிட்டுச் சும்மா இருக்க மாட்டேன். எப்போ இவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சோ, அப்போ மிச்சத்தையும் சொல்லிடறேன்; நல்லாப் புரிஞ்சுக்க. நான் இவரைக் கல்யாணம் செய்துக்கிடத் தீர்மானிச்சுட்டேன்! அதாவது இவர் என்னை ஏற்றுக்கிடறதாயிருந்தால்.’’

‘‘அடப் பாவி!’’ என்று மகளிடம் பதில் கூறாமல் தொடர்ந்து திட்டித் தீர்த்தாள் கனகம். ‘‘என் குடியைக் கெடுக்க வந்தியா? அம்மாவையும் பெண்ணையும் பிரிக்க வைக்கச் சூழ்ச்சி பண்ணிட்டியா? இவன்

கி. ராஜேந்திரன்







பணத்தை யெல்லாம் அபகரிக்கத் திட்டம் போட் டிருக்கியா ?''

''கவலைப்படாதே, கனகம்! நான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சாத் தானே?'' என்றான் பார்த்திபன். ''எனக்கு உன் பணமும் வேண்டாம். உன் பெண்ணும் வேண்டாம் !''

''பார்த்தியாடி ! இவன் என்னை அவமானப் படுத்தியதோடு உன்னையும் அலட்சியமாத்தான் பேசறான். நீ அவன் காலில் விழுந்து கெஞ்சினே. அவன் உன்னை வேண்டாம்னு உதைச்சுத் தள்ளறான்! இப்படிப்பட்டவனைப் போய் நீ தலை மேலே தூக்கி வைச்சுக் கிட்டுக் கூத்தாடறே! தம்பி! இதைத் தெரிஞ்சுக்க ! நம்ம வீட்டு வாசல்லே வந்து நின்னு கூழைக் கும்பிடு போட்டு உள்ளே வரலாமான்னு கேட்கிறவங்கதான் எங்களுக்குப் பழக்கம்.''

''அந்த முதுகெலும்பு இல்லாத ஆசாமிகளோடு என்னையும் சேர்த்துடாதீங்க, நான் போய் வரேன் '' என்று புறப்பட்டான் பார்த்திபன்.

அவன் கரங்களைப் பற்றி நிறுத்தினாள் பிரமீளா. ''அம்மா ! இவர் ஏன் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறார், தெரியவில்லையா உனக்கு? என் பணத்தின் மேல் இவருக்கு ஆசை இல்லை. அப்படி இருந்தால் உன் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளமாட்டாரா ? அதிலிருந்து இவருடைய உயர்ந்த குணம் உனக்குப் புரியவில்லையா? உன் சம்மதத்தையும் பெற்று சந்தோஷமாக நடக்க வேண்டும் எங்கள் திருமணம் என்று ஆசைப்படுகிறார் அம்மா !''

''இப்ப அப்படித்தாண்டி பேசுவான்! ஊரறியக் கழுத்திலே தாலி ஏறின அப்புறம் பேச்சும் நடத்தையும் வேறுவிதமாகத்தான் இருக்கும்.''

'' உன்னைப் போன்றவர் இல்லை அம்மா இவர். நீ என் பணத்துக்கு ஆசைப்பட்டு என் கல்யாணத்தைத் தடை செய்ய விரும்புகிறாய். இவர் பணத்தாசை இல்லாததால் கல்யாணம் வேண்டாம் என்கிறார். நடுவில் நான் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறேன்.'' விம்மி விம்மி அழுதாள் பிரமீளா. ''என்னிடம் உண்மையான பிரியம் உனக்கு என்றைக்கு இருந்திருக்கிறது? பாழும் பணம்தானே பிரதானம் !''

'' ஏண்டி! நான் பணத்தாசை பிடித்தவளா? இவன் ஒருத்தன் தான் உன்னிடம் கலப்படமற்ற அன்பைச் சொரிகிறானா? சின்னக் குழந்தையாக இருந்த உன்னை வளர்த்து ஆளாக்கி, பேரும் புகழும் செல்வமும் அடையச் செய்த என்னைவிட நேற்று வந்த இந்தத் தறுதலைப் பயல் உனக்கு ஒசத்தியாய்ப் போயிட்டானா?''

''ஆமாம்,- அம்மா! அப்படித்தான். சற்று முன்னால் நீ சொன்னியே, வளர்த்து ஆளாக்கினேன் என்று! அதுதானே நிஜம்! **பெற்று** வளர்த்தேன் என்று என்றைக்காவது நீ வாய் விட்டுச் சொன்னதுண்டா ? அதனால்தான் உனக்கு என் பேரில் பாசம் உண்டாக மாட்டேனென்கிறது. என் சந்தோஷத்தைவிடப் பணத்தையே பெரிதாக மதிக்கிறாய். நான் இவரைக் கல்யாணம் செய்துகொண்டால் அது கைநழுவிப் போய்விட்ப் போகிறதே என்று பயப்படுகிறாய்!''

கனகத்தை முன் எப்போதையும்விட அதிகமாக இப்போது பீதி கவ்விக்கொண்டது. 'அடிமடியிலேயே கையைப் போடுகிறாளே, இவள்! நான் இவள் தாயே இல்லை என்று நிரூபணமாகிவிட்டால் அப்புறம் சட்ட ரீதியாகக்கூட இவள் மீது நமக்குச் செல்வாக்கு இல்லாமல் போய் விடுமே!' வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டாள் அவள். ''எப்படியடி மனசு வந்தது, வார்த்தைகளால் என்னை



வதைக்க? இத்தனை வருஷங்களுக்குப் பிறகு. என் கண்மணி என்னை இப்படிப் பேச நேர்ந்ததே! இதற்குக் காரணம் இந்தச் சண்டாளன்தானே!'' என்று கூறித் தலை மயிரைப் பிய்த்துக் கொள்பவள்போல் இழுத்துக் கொண்டு தரையில் உட்கார்ந்து ஓலமிடத் தொடங்கினாள்.

பார்த்திபன் பிரமீளாவிடம் சொன்னான்: ''இந்த மாதிரிச் சூழலில் நம் கல்யாணம் எப்படி நடக்க முடியும்? நாம் இனி அடிக்கடி சந்திக்காமல் இருந்தால் கூட நல்லது. இல்லாவிட்டால் இவளுக்கு ஹிஸ்டீரியா வந்துவிடும்! நான் போய் வருகிறேன். உன் அம்மாவை நல்ல வார்த்தை சொல்லித் தேற்று.''

சட்டென்று வழிமறித்து நின்று அவன் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பிரமீளா. ''அம்மா இப்படி அழுது புலம்புகிறாளே என்பதால் நீங்கள் என்னை வந்து பார்க்காமல் இருந்து விடாதீர்கள். அப்புறம் எனக்குச் சித்தம் கலங்கிப் போகும். இவளாவது ஹிஸ்டீரியா வந்த மாதிரி அலறுகிறாள். எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். உங்களைச் சந்திக்காமல் இருந்தால்! கல்யாணம் நடக்கிறதோ இல்லையோ, நீங்கள் அவசியம் வந்து போய்க் கொண்டிருங்கள். நாளடைவில் இவள் மனம் மாறுகிறதா, பார்ப்போம்.''

பார்த்திபன் அவ்வாறே அவள் விருப்பத்துக்கு இசைந்து நடந்துகொண்டான். ஆனால் கனகத்தின் மனம் இளகுவதாய் இல்லை. மாறாக இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு

அவனுடைய கெடுபிடி முன்னிலும் அதிகமாகிவிட்டது. பிரமீளாவை யாருடனும் தனியேவிடாமல் கட்டிக் காத்தாள். இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேச அனுமதிக்க மாட்டாள். அதுவும் திரைப்படத்தொழில்ரீதியில்தொடர்பு கொள்ளாத எவரிடமாவது அவள் சற்று நேரம் உரையாடிவிட்டால், அவ்வளவுதான், கனகத்துக்கு ஒரே குலை நடுக்கமாகிவிடும். மாட்டை ஓட்டிப் போய்க் கொட்டிலில் அடைப்பதுபோல் இவளை 'வீட்டுக்குப் போகலாம்' என விரட்டுவாள். ஆனால் பார்த்திபனிடம் மட்டும் அவள் ஜம்பம் சாயவில்லை. அவ்வப்போது அவனைக் குத்திக் காட்டுவது போல் அவள் பேசியதைக்கூட ஏதோ பைத்தியம் பிதற்றுகிறது என்ற ரீதியில் அவன் பொருட்படுத்தாமலிருந்து வந்தான். இவ்வாறு அவன் பொறுத்துக் கொண்டு போனதால் பிரமீளாவுக்கு அவனிடம் அன்பு மிகுதியாயிற்று.

ஒரு சமயம் ஷேக்ஸ்பியர் நாடகங்களிலிருந்து சில பகுதிகளை நடித்துக் காட்ட பிரிட்டனிலிருந்து ஒரு தம்பதி வந்திருந்தனர். அவர்களுடைய கலைநிகழ்ச்சிக்கு ஷூட்டிங்கை ஒத்திப் போட்டுவிட்டாவது பிரமீளாவை வரவேண்டும் என்று பார்த்திபன் வற்புறுத்தினான். அவன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாள் அவள். உனக்கு ஒன்றும் புரியாது அம்மா என்று பிரமீளா எடுத்துக் கூறியும் கேளாமல் கனகம் உடன் வந்தாள். அவர்களைத் தனியே எங்கும் அனுப்புவதில்லை என்று அவள் இப்போது கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள். ஆரம்பத்தில் இந்த விஷயத்தில் சற்று அசிரத்தையாக இருந்து சினிமா, நாடகம் என்று அவர்களைப் போக அனுமதித்ததால்தான் இத்தனை இறுக்கமான ஒரு பிணைப்பு அவர்களிடையே ஏற்பட்டு விட்டது. முடிச்சை அவிழ்க்க முடியாமல் சிரமப்படுகிறோம் என்று கனகம் தீர்மானித்தாள். ஆகவே, தானும் துணைக்குச் சென்று தொண்ணூறு கொட்டாவிகளை விட்டு விட்டு அவர்களுடனேயே திரும்பினாள். ''என்ன இழவு நாடகமோ இது. மறுபடியும் மறுபடியும் இதே இரண்டு பேர்கள்தானா? ஒரு ஸீனா ஸெட்டிங்கா உடைமாற்றமா ஒண்ணையும் காணுமே?'' என்றாள் காரில் வீடு நோக்கிச் செல்லும்போது.

'' அதுதான் இவர்களிடம் தனிச் சிறப்பு. தங்கள் நடிப்புத் திறனால் நம்மைக் கவர்ந்தார்கள். பகட்டான ஆடை அலங்காரங்களாலோ காட்சி ஜோடனைகளாலோ நம்மை அசந்து போகச் செய்யவில்லை. ரசிகர்கள் எப்படிக் கை தட்டி மகிழ்ந்தார்கள்! உங்களுக்கும் புரிந்திருந்தால் ரொம்பப் பிடித்திருக்கும்'' என்றான் பார்த்திபன்.

'' அம்மா வீட்டுக்குப் போனதும் அந்தக் கதைகளைச் சுருக்கமாகச் சொல்லி அவர்கள் நடித்துக் காட்டிய குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் படித்து விரிவாக அர்த்தம் சொல்கிறேன். அப்போது விளங்கும் இவர்கள் எப்பேர்ப்பட்ட நடிகர்கள் என்று.'' இப்படிப் பிரமீளா கூறினாள்.

'' எனக்கு எதுக்கு அதெல்லாம்?'' என்று அலுத்துக் கொண்டாள் கனகம். ''நீ அநுபவிச்சால் சரி !''

''மெய்ம்மறந்து ரசித்தேன் அம்மா'' என்றாள் பிரமீளா. இரவு நேரமான போதிலும் மவுண்ட்ரோட்டின் பிரகாசமான விளக்கொளி அவள் கண்களில் நன்றி ததும்புவதைப் பார்த்திபனுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. நாடகத்தில் பார்த்திபனுக்கு அருகே அவன் தோளை உரசியபடி உட்கார்ந்திருந்ததே, அவளுக்குக் கந்தர்வலோகத்தில் இருப்பது போன்ற இன்ப உணர்வைக் கொடுத்தது. போதாததற்கு நாடகமும் கந்தர்வலோகத்தில்கூட நடிக்கத்தக்க அளவுக்கு மிக உன்னதமாக அமைந்திருந்தது.

''ஒரு கறுப்புப் படுதா, தரையில் ஒரு ஜமுக்காளம் அதன் மையத்தில் ஒரு முக்காலி — இவ்வளவுதானே காட்சி ஜோடனை ! இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பாடுபடுத்திவிட்டார்கள் ! ஆடம்பரமில்லாத சர்வ சாதாரண உடை அணிந்திருந்தபோதிலும் நடிப்புத் திறனால் எப்படி நம்மைப் பிரமிக்க வைத்து விட்டார்கள்!'' என்று வியந்து பாராட்டினாள் பிரமீளா.

''அதைவிட முக்கியமான விஷயம் பல்வேறு கதாபாத்திரங்களாக அவர்களால் கண நேரத்தில் மாற முடிகிறது, பார்!'' என்றான் பார்த்திபன். ''இந்தக் காட்சியில் லேடி மாக்பெத்தாகத் தோன்றி அருவருப்பை நம் மனத்தில் ஏற்படுத்துபவள் அடுத்த காட்சியிலேயே அடங்காப் பிடாரி மனைவி காதரினாகத் தோன்றி நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறாள். இப்படி மாறுவது எவ்வளவு சிரமம் ?''

''ஆனாலும் அதை மிக எளிதாகச் செய்து வருகிறார்கள், இல்லையா ?'' என்றாள் பிரமீளா.

''அப்படியில்லை ! ரொம்பச் சிரமப்படுகிறார்கள். ஆனால் ரொம்பச் சுலபமாக நடிப்பதுபோல் காட்டிக் கொண்டு நம்மை ஏமாற்றுகிறார்கள். அங்கேதான் அவர்கள் மேதை பிரகாசிக்கிறது!''

ஆஸ்துமா நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்பூநாத் அவர்களின் பேரன் ஸ்ரீ கேசவ் மோஹன்லால் ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை வினியோகிக்கிறார். ஸ்ரீ சம்பூநாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக வினியோகிக்கப்பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப் பணியை பேரன் நடத்துவதோடு இதற்குப் பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதியுறும் பலர் நிவாரணமடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்கள் மூலிகைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KESHAV MOHAN LAL
P. B. No. 11463
CALCUTTA-6

மேற்கு வங்காள சங்கங்கள் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1961 கீழ் நிறுவப்பட்ட பாபா ஸ்ரீ சம்பூநாத் சேவா கேந்திராவினால் வியாதியஸ்தர்கள், டாக்டர்கள், மருத்துவர்கள் அளிக்கும் நன்கொடையின் மூலம் ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டது.


NAA/E/72



சென்னை டாக்டர் *P. S. C.* மணி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி எம். நாராயணமூர்த்திக்கும், காமாக்ஷிபுரம், ஸ்ரீ *S.* சேதுராம அய்யர் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி எஸ். மைதிலிக்கும், திருமணம் சமீபத்தில் கும்பகோணத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

அஜாக்ஸ் உப்புத்தாள் வேலையை துரிதமாக முடிக்கிறது. அதனால் பணச் செலவும், நேரமும், உழைப்பும் குறைகிறது.



- சிறந்த முறையில் தயாரிக்கப்படுவதால் ஒரு சிறு துண்டும் பல நாட்களுக்கு நீடித்து வரும்.
- அஜாக்ஸ் உப்புத்தாளின் மேல்பூச்சு ஒரே சீராய் இருப்பதால் பொருள்களை மழமழப்பாக்குவது வெகு சுலபம்.
- அஜாக்ஸ் உப்புத்தாள் வேலையை துரிதமாக முடிப்பதால் காசும் மிச்சம், வேலையும் மிச்சம்.
- எந்த வேலைக்கும் ஏற்றதோர் அஜாக்ஸ் உப்புத்தாள் உண்டு.

அஜாக்ஸ்


உப்புத்தாள்கள் தரத்தில் A-1

கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்,
சென்னை - கல்கத்தா - பம்பாய் - புது டில்லி

பல்வேறு தொழில்களுக்கும் ஆதாரக் கருவிகளை தயாரித்து அளிப்பதையே தன் பணியாகக்கொண்ட ஸ்தாபனம்

பெண்மையின் மென்மையை உணர ஆண்களைப் போல் 'ஷேவ்' செய்யாதீர்!

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர் தடவி பெண்மை வழியிலே உரோமத்தை வழித்தெறியுங்கள். அது மென்மையானது, இன்மணம் கொண்டது. உரோமங்களின் வேர்கள் வரை ஊடுருவிச் செயல் புரிகிறது. வெட்டுக்கள் இல்லை, உரோமத் துகள்கள் இல்லை. வாரக் கணக்கில் வழவழப்பான சருமம்.





பட்டுப்போன்ற கரங்களுக்கும் கால்களுக்கும்.

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர்

ட்ரேட்மார்க்கின் ரெஜிஸ்டர்ட் யூஸர்: ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிட். 95-AF-172-Tam

"லேடி மாக்பெத் தன் கரங்களில் ரத்தக் கறை படிந்திருப்பதாகப் பிரமையில் ஆழ்ந்து போகிறாளே, அந்த இடத்தில் நிஜமாகவே ரத்தம் சொட்டுவது போல் நமக்குப் படுகிறது!"

"ஆமாம், நம்மவர்களாயிருந்தால் பஞ்சை, சிவப்பு இங்கியில் தோய்த்துக் கையோடு எடுத்து வருவார்கள் மேடைக்கு! அதே போலத்தான் ஹாம்லெட்டாக நடிக்கும்போது அவன் கையில் கத்தியே இல்லை. ஆனாலும் அவன் உணர்ச்சியுடன் பேசும்போது அவன் கையில் கத்தி இல்லாத குறையே தோன்றவில்லை."

"அதுவல்லவா நடிப்பு!" என்று பெருமூச்செறிந்தாள் பிரமீளா. "நாம் என்னத்தைக் கிழிக்கிறோம் இங்கே?"

போர்ட்டிகோவில் வண்டி நின்றது. பேச்சைத் தொடர்ந்தபடியே கீழே இறங்கிப் பங்களாவுக்குள் சென்றார்கள்.

"ஏண்டி, உன்னை நீயே பழிச்சுக்கிறே? உனக்கு நடிப்புத் திறன் இல்லாததாலா மாறி மாறி புரொட்யூசர்கள் வந்து உன் காலடியில் பணத்தைக் கொட்டறாங்க?" என்று கர்வம் கொப்புளிக்கப் பேசினாள் கனகம்.

"நடிப்புத் திறனை ஒருவருக்குச் சேரும் பணத்தைக் கொண்டு அளந்து விட முடியுமா, அம்மா?" என்றான் பார்த்திபன். "கத்தை கத்தையாக நீங்க நோட்டை அடுக்கினாலும் நடிப்பு சொத்தைதான்!"

பிரமீளா இதைக் கேட்டுக் கலீரென்று சிரித்தாள். கனகம், "என் வயிறு பத்தி எரியறது. இவன் பேசறதைக் கேட்டு நீ சிரிக்கறே?" என்றாள்.

"உண்மையைத்தானே அம்மா, இவர் சொல்கிறார்? நானும் நடிப்பதாகத்தான் பெயர் பண்ணுகிறேன். ஆனால் நான் அந்த நாளைய கிரேடா கார்போவோ அல்லது இந்த நாளைய சோபியா லாரெனோ இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏன் ஒரு பத்மினிகூட இல்லைதான். இதை நீ உணராவிட்டால் போ, ஆனால் என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாராயில்லை."

"எல்லாம் இவனோட சகவாசத்தால் வந்த வினை. என்னவோ 'பிரெய்ன் வாஷ்' என்பார்களே, அப்படி இவன் உன்னுடைய மூளையையே மழுங்கச் செய்துவிட்டான்!"

"அம்மா! என் முகராசி இப்போ பணம் வந்து குவியறது. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்கள் போனால் என்னுடைய இந்த உருவத்துக்கும் முகத்துக்கும் மவுசு குறைஞ்சு போயிடும். என்னைவிட அழகான ஒருத்தி என்னை



எதிரொலி!

பிராட்போர்டில் பதினைந்து கராத்தே ஆட்ட நிபுணர்கள் ஆறு அறைகள் கொண்ட ஒரு வீட்டை ஆறு மணி நேரத்தில் கைகளினாலும், தலையாலும் கால்களாலும் இடித்துத் தள்ளி உலக ரிகார்டு கண்டனர். — செய்தி

ஹவுஸிங் போர்ட் கட்டடங்களின் வலிமையைச் சோதிக்க இப்படிப்பட்ட கராத்தே நிபுணர்களை வரவழைத்தால் என்ன?

விடக் கம்மியாக உடை அணிந்து காமிரா முன் தோன்றத் தயாராகி விடுவாள். அவள் என்னைவிட அதிகமாகப் பணம் கேட்பாள்! கொடுப்பார்கள்! அப்போது என்னைச் சீண்டுவார் இருக்க மாட்டார்கள்."

"சரி சரி, டிரைவர் வீட்டுக்குப் போகணும்னு அவசரப்படறான். உனக்குப் பஸ் டாக்ஸி எதுவும் இந்த அகால நேரத்தில் கிடைக்காது. சீக்கிரமாய்ப் போய் வீட்டில் இறங்கிக்கிட்டு வண்டியை அனுப்பு" என்றாள் கனகம்.

"டிரைவருக்கு அவசரம்னா போகட்டுமே! அம்மா, இவரைச் சாப்பிடச் சொல்லாமல் விரட்டாதே" என்றாள் பிரமீளா.

"வாயை அலம்பிக்கிட்டு வாடி! இவன் ராத்திரி முழுவதும் இங்கேயே இருந்தால் டிரைவர் அதை ஊரெல்லாம் தமுக்கடிச்சுட்டு வந்துடுவான்!"

"அம்மா! ஊரிலே இப்போ என்னைப் பழித்துப் பேசாமலா இருக்கிறார்கள்? இவர் சிநேகம் எனக்குக் கிடைப்பதற்கு முன்னமேயே என்னை எவ்வளவோ இழித்தும் பழித்தும் நாவில் நரம்பில்லாமல் பேசி விட்டார்கள். புதுசாச் சொல்ல என்ன இருக்கு? இவர் இங்கேதான் சாப்பிடணும். அப்புறம் வேணுமானால் நானே காரோட்டிக்கிட்டுப் போய் இவரை வீட்டில் விட்டுட்டு வரேன். இல்லே இவர் சம்மதிச்சால் இங்கேயே படுத்திருந்துவிட்டு நாளைக்குப் போகட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை."

"வேண்டாம், பிரமீளா! நான் உன் திருப்திக்குச் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு உங்கம்மா திருப்திக்கு டிரைவரோடேயே வீட்டுக்குப் போயிடறேன். அவனுக்கு இரண்டோ மூன்றோ தந்துவிட்டால் காரை ஷெட்டில் விட்டுவிட்டு

இரவு நேரம் கழித்து வீட்டுக்கு நடந்து போக நேர்ந்ததைப் பொருட்படுத்த மாட்டான்.''

பிரமீளா இதற்கு ஒப்புக் கொண்டாள். ஆனால் இரவு அங்கேயே அவன் தங்க வேண்டும் என்ற பிரமீளாவின் கோரிக்கை இருவர் மனங்களிலும் ஆசையை வளர்த்துவிட்டது. யதேச்சையாகக் கூறப்பட்ட ஒரு யோசனைதான்; அதை அவனும் உடனே மறுதளித்து விட்டான்தான். ஆயினும் அந்த எண்ணம் தோன்றியபிறகு சுலபமாக அவர்களால் அதை மறந்துவிட முடியவில்லை. ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளும் போதும், பேசும் போதும், சிரிக்கும் போதும் அந்த நினைப்பு எழுந்து தொந்தரவு கொடுத்தது. அவர்கள் பேச்சிலே புதிய அர்த்தங்கள் தொனிக்க ஆரம்பித்தன. பார்வைகள் துணிந்து செயலாற்றுமாறு அழைப்பு விடுத்தன. சிரிப்பிலே இன்ப ரகசியங்களை ஜாடையாகப் பகிர்ந்து கொண்டனர். இயற்கை வேகத்தால் கட்டுண்ட அவர்களின் எண்ணங்கள் ஒரு கட்டுக்கடங்காமல் எங்கெங்கோ சென்றன. அவள் அவனுக்குப் பிரேம் ஆனாள். அவன் அவளுக்குத் தீபன் ஆனான். தீபச் சுடர் பிரேமையைத் தீண்டித் தீய்த்துவிடத் துடித்தது. பிரேமைத் தீபச் சுடருள் ஐக்கியமாகிவிட ஏங்கியது. அந்த ஒரு தகிப்பினை வேண்டி நின்றது.

கல்யாணப் பேச்சை யாருமே எடுக்கவில்லை. கனகம் அதற்குச் சம்மதிக்கவே போவதில்லை. ஒரே ரகளை பண்ணிவிடுவாள். தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் அதனாலேயே திரைப்பட உலகில் தனக்கு மவுசு குறைந்துவிடும் என்று அந்தக் கல்நெஞ்சுக்காரி கணக்குப் போடுகிறாள் என்பது பிரமீளாவுக்குப் புரிந்தது. அவள் தன் சொந்தத் தாயார் இல்லை என்று நீண்ட நாட்களாகவே ஊகித்து வந்தாள் பிரமீளா. அது இப்போது ஊர்ஜிதமாவதாக அவளுக்குத் தோன்றியது.

முன்னொரு நாள் வயதான ஒருவர் தன் வீட்டுக்கு வந்ததும் அவரிடம் கனகம் பத்து ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றினைக் கொடுத்து 'இந்தப் பக்கமே இனி எட்டிப் பார்க்கக் கூடாது' என்று கடிந்து கொண்டதும் அந்த நபர், 'பணத்துக்காக நான் வரலே அம்மா, குழந்தையை ஒரு தடவை கண்குளிரப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்; 'வரேன்' என்று ஏமாற்றுக் குரலில் கூறிப் பணத்தை வாங்காமலேயே திரும்பியதும் அவளுக்கு நன்றாக நினைவிருந்தன.


மாடிப்படி அறைக்கு வந்தவள் வாசலில் வரவேற்பு அறையில் 'பேச்சுக் குரல் கேட்கவே தயங்கி நின்றாள். தன் பெயர் அடிபடுவது புரிந்தது. ஒரு வேளை யாராவது ப்ரொட்யூஸர்—டைரக்டராக இருந்தால் புடவையை மாற்றிக் கொண்டும் லேசாக மேக்அப்பைச் சரி செய்து கொண்டும் வருவது நல்லது என்று பட்டதால் இப்பாலேயே சற்று நின்றாள். அந்த மனிதர் எழுந்து போகும்போது வரவேற்பு அறை அலமாரியில் பதிக்கப்பட்டிருந்த நீண்ட நிலைக் கண்ணாடியில் அவர் முழு உருவமும் தெரிந்தது. முதுமைப் பருவத்தை எட்டிப் பார்க்கும் சாத்வீகமான முகம். பிரதிபலிப்பை ஒரு விநாடி நேரம்தான் பார்த்தாள் என்றாலும் அந்த முகத்தை இன்றளவும் பிரமீளா நன்றாக ஞாபகம் வைத்திருந்தாள். சுரத்தின்றி அவர் எழுந்து சென்றதும் அவள் அவருக்காக வருத்தப்பட்டபடி தன் தாயாரைக் கேட்டாள்: ''யாரம்மா அது?''

''எவனோ பரதேசிப் பயல். இல்லையா, நைட் ஸ்கூல் நடத்தறேன், அன்ன தானம் பண்ணறேன் என்று விதவிதமாகச் சொல்லிக்கிட்டு எத்தனை பேர் வரானுக? பத்து ரூபாய் கொடுத்து



பள்ளி நிர்வாகி : ஸ்கூல் ஃபீஸ் ஒண்ணும் கிடையாது. இலவசக் கல்விதான். ஆனால் கட்டட நிதி டொனேஷன் நூறு ரூபா, பி.டி.ஏ. சங்கக் கட்டணம் அறுபது ரூபா, சுற்றுலாவுக்கு ஐம்பது ரூபா, ஸ்பெஷல் ஃபீஸ் நாற்பது ரூபா...

''குழந்தைக்கு டிக்கட் வாங்கணும்னு மாட்டேங்கறே! பள்ளியில் அவனைச் சேர்க்க 'டொனேஷன்' இரு நூறு ரூபா கட்ட மாத்திரம் க்யூவில் நிக்கறையே...!''



அனுப்பிச்சேன்'' என்று கூசாமல் பொய் சொல்லி விட்டுப் பிரிக்கப் படாத பத்து ரூபாய் நோட்டுக் கட்டுடன் உள்ளே சென்றுவிட்டாள் கனகம்.

அந்த மனிதரைப் பற்றிய ஏதோ ஒரு பயங்கர ரகசியம் அம்மாவுக்குத் தெரிந்திருக்கிறது. அதனுல்தான் இவளால் அவ்வளவு சுலபமாக அவரைத் திருப்பி அனுப்பிவிட முடிந்தது என்று ஊகித்தாள் பிரமீளா. நெஞ்சை அழுத்திய பாச பாரத்தை இறக்கவும் முடியாமல் சுமக்கவும் முடியாமல் தள்ளாடியபடி வந்த வழியே அவர் போய்விட்டார். 'அந்த மனிதர்தான் அப்படி யென்றுல் இவள் எதற்கு என்னை ஏமாற்ற முயல்கிறுள்?' என்று எண்ணியபோதே பிரமீளாவுக்குத் தன் தாயாரிடத்தில் மதிப்புப் பெருமளவு குறைந்து விட்டது. எனினும் அந்தச் சம்பவத்தைப் பெரிதுபடுத்தாமல் வழக்கம் போல் அன்பாக இருந்து வந்தாள் அம்மாவிடம். ஆனுல் இப்போது மகளின் மகிழ்ச்சியை விடப் பணம்தான் முக்கியம் என்று கனகம் கருதுவதைப் பார்த்துச் சீ என்று ஆகி விட்டது அவளுக்கு. பெற்ற வயிருக இருந்தால் மகளுக்குக் கல்யாணம் என்றதும் அதில் அடித்துக் கொள்ளத் தோன்றுமா? ஒரு தடவை தடவிக் கொடுத்து விட்டுத் தடவிய விரல்களை முத்தமிடமாட்டாளா?

கல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டாலே ஹிஸ்டீரியா வந்த மாதிரி கூச்சல் போட்டாள் கனகம்: ''எத்தனை டைரக்டர்கள், படாதிபதிகள் வீட்டுப் படி ஏறி இறங்கியிருக்கிறேன், உனக்காக? ஒரு சான்ஸ் உனக்குக் கொடுக்கச் சொல்லி எவ்வளவு தடவை மானத்தை விட்டுக் கெஞ்சிக் கேட்டிருக்கிறேன்!''

''ஆட்டைக் கொழுக்க வைக்கிறுர்களே எதுக்கு அம்மா? அந்தமாதிரி தான் நீ என்னைப் பாடுபட்டு வளர்த்திருக்கிறுய்!''

''பலி போடவாடி வளர்த்தேன்? ஏண்டி இப்படிக் கொடூரமாப் பேசறே?''

''என்னைக் கொல்லவில்லை அம்மா! எனக்கென்று உள்ள உணர்ச்சிகளைக் கொன்றுவிட்டுப் பணம் பண்ணுகிற மிஷிஞக நான் இயங்க வேண்டும் என்கிறுய். அதிர்ஷ்ட வசமா எனக்கு இரண்டு சினிமாச் சான்ஸ் ஆரம்பத்திலேயே கிடைச்சிருக்கலைன்னு நான் இப்போ எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலையில் இருப்பேன் என்கிறதும் எனக்கு நல்லாத் தெரிஞ்சுதானிருக்கு. அதுவும் உன் கருணையால்தான் கிடைச்சிருக்கும்.''

இதற்கு நேரிடையாகப் பதில் கூற இயலாத கனகம், ''இத்தனை கஷ்டப் பட்டுச் சம்பாதிச்ச பேரையும் புகழையும் உதறிப்புட மனசு வருதா உனக்கு? கல்யாணம் ஆனப்புறம் கையிலே கரண்டியைக் கொடுத்துச் சமையல் கட்டுக்கு அனுப்பிடுவான் உன் தீபன்!'' என்றுள்.

''இருக்கட்டுமே அம்மா, அதனுல் என்ன? திரை உலகம் என்னை நம்பியா உசிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இருக்கு? இன்னும் இரண்டு தலைமுறைக்கு வேணும்கிற பணம் கொட்டிக் கிடக்கே, போதாதா? அவருக்குச் சமைச்சுப் போட்டுத்தான் பாக்கிக் காலத்தை ஓட்டிடறேனே? நடிக்கத் தான் வரலை, சமைக்கவாவது வருதா பார்க்கலாமே!''

என்ன வாதாடியும் பயனில்லை. எல்லா வாக்கு வாதங்களும் கடைசியில் ''நான் சம்மதிக்க மாட்டேன், மாட்டேன், மாட்டேன்!'' என்று கனகம் முத்தாய்ப்பு வைப்பதுடன் முடிந்தன.

இதற்கிடையில் சுடரும் விட்டிலுமாக, காந்தமும் இரும்புமாக, கொம்பும் கொடியுமாகப் பார்த்திபனும் பிரமீளாவும் நெருங்கி நெருங்கி வந்தார்கள். அதே சமயம் சுடரை அணைக்கும் நீராய், கொம்பை வெட்டி எறியும்



''அரசாங்கம் ஏழைமையை ஒழிச்சுகட்டட்டுங்க. பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க நம்ம கிட்டேயே டோனேஷனுக்கு வர்றுங்கன்னு பார்த்துக்கிடுங்களேன்!''

''என்ன முனியண்ணே! இது என்ன, பெரிய மனுஷன் மாதிரி?''

''ஆமாம்! பள்ளிக்கூட நிர்வாகி என்னைப் பெரிய மனுஷனு நினைச்சு நன்கொடை கேட்கறபோது விட்டுக் கொடுப்பானேன்னுதான்!''



அரிவாளாய், காந்தம் அதன் தன்மையை இழக்கச் செய்யும் சக்தியாய்க் கனகம் அருகிலேயே இருந்தாள்.

இனிமேலும் இந்தச் சித்திரவதையைத் தாள முடியாது என்ற நிலைக்கு இருவரும் வந்தபோது அவர்கள் கொடைக்கானலுக்குப் போகத் தீர்மானித்தார்கள். பார்த்திபன் முதலில் செல்வான். விடுமுறையைக் கழிக்க அங்கு வரும் எத்தனையோ சுற்றுலாப் பயணிகளில் ஒருவனாய் ஹில்டன் ஹோட்டலில் ஓர் அறையை எடுத்துக் கொள்வான். தன் அறை எண்ணை மட்டும் ஒரு தாளில் எழுதி உறையிலிட்டுப் பிரமீளாவுக்கு அனுப்பிவிடுவான். அவள் புரிந்து கொள்வாள். மற்றவர்கள் அதைப் பார்க்க நேர்ந்தாலும் அவர்களுக்கு ஒன்றும் விளங்காது.

மூன்று அல்லது நான்கு நாட்கள் கழித்துப் பிரமீளாவும் இடைவிடாத ஷூட்டிங்கில் களைத்துப் போய் ஓய்வு கருதி வருபவள் போல் கொடைக்கானலுக்கு வந்து அதே ஹோட்டலில் அறை எடுத்துத் தங்குவாள். கனகமும் பின்னோடு வருவாள்தான். வந்துவிட்டுப் போகட்டும். அவள் கண்ணிலும் டிரைவர் கோபாலன் பார்வையிலும் மட்டும் படாமல் பார்த்திபன் கவனமாக இருக்க வேண்டும். அதற்கென்ன? பிரேமையில் மூழ்கித் திளைக்க அவன் அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கவும் தயார்தான். அப்போது சிறையாகவா தோன்றும் அது? சாப்பாட்டை வேண்டுமானாலும் அறைக்கே வரவழைக்கலாமே!

கனகம் நன்றாகத் தூங்கிக் குறட்டைவிடத் தொடங்கிய பிறகு பிரமீளா பார்த்திபனின் அறைக்கு வந்து சேர்ந்து கொள்ளலாம். அமைதியாக அனைவரும் உறங்கும் இரவு வேளையில் இதற்கு இடையூறு ஏதும் இராது. தப்பித் தவறி அவளைத் தாழ்வாரத்தில் யாரேனும் சந்திக்க நேர்ந்தாலும் மங்கலான ஒளியில் சட்டென்று அடையாளம் தெரியாது. மேலும் பிரமீளா இயல்பாக நடந்து கொண்டால் ஏதோ காரியமாகப் போகிறாள் என்றுதான் எண்ணுவார்கள்; வேறு விதச் சந்தேகம் எழாது.

இந்தத் திட்டம் கச்சிதமாக நடந்தேறியது. ஆறு நாட்கள் அவர்கள் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஏழாவது நாள் கனகம் விழித்தெழுந்து மகளைப் பின்தொடர்ந்து சென்று பார்த்திபனையும் பார்த்துவிட்டாள்!

(தொடரும்)

வட்டமேஜை

தமிழ் நாட்டு அரசு வெளியிட்டுள்ள தொடக்கப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாட நூல்களில், ஒன்று முதல் நான்கு வகுப்பு வரை கடவுள் வாழ்த்து இன்றியே வெளியிடப்பட்டுள்ளது. இதுதான் கல்வியில் தமிழக அரசு செய்யும் சீர்திருத்தமோ! தொன்று தொட்டு வரும் இறை நம்பிக்கையைச் சிறார்களின் மனத்திலிருந்து மாற்றப் பார்ப்பது எவ்விதத்தும் நியாயம் அல்ல. மேலும் ஏழை எளிய குழந்தைகள் வாங்கிப் படிக்கும்படியான நிலையில் இல்லை புத்தகங்களின் விலை. முன்பு முதல் வகுப்புப் புத்தகம் 35 பைசாவாக இருந்தது. தற்போது 80 பைசாவாக விலை ஏறிவிட்டது. எல்லாப் புத்தகங்களின் விலையும் முன்பு இருந்ததைவிட இருமடங்குக்கு அதிகமாக உயர்ந்துவிட்டது.

வடகரை
7—6—72 ''நல்லாசிரியன்''

நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு கொண்டு வருவது பற்றி அரசு யோசித்து வருகிறது. இதில் பல சிக்கல்கள் உள்ளன.

சென்னையில் ஐந்து லட்சம் பெறுமானமுள்ள அதே வீடு பம்பாயில் இருக்குமானால் அதன் மதிப்பு இருபது லட்சமாகும். சென்னையில் இருப்பவன் ஐந்து லட்சம் பெறுமானமுள்ள சொத்தும் பம்பாயில் வசிப்பவன் இருபது லட்சம் பெறுமானமுள்ள சொத்தும் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டமியற்றினால் அது சமதர்மமாகாது.

உச்சவரம்பு கொண்டு வரும் பொறுப்பை மாநிலங்களுக்கே விட்டு விடலாம் என்றாலோ ஒரே நபர் இந்த மாநிலத்தில் உச்சவரம்பு அளவுக்கு நகர்ப்புறச் சொத்து வைத்துக் கொண்டபின் வேறொரு மாநில நகரில் வீடும் நிலமும் வாங்க ஆரம்பித்தால் எப்படித் தடுக்க முடியும்?


உச்ச வரம்பை எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது? நிலத்தின் பரப்பளவைக் கொண்டா? அல்லது வீட்டின் விஸ்தீரணத்தைக் கொண்டா? ஐந்து முதல் பத்து கிரவுண்டு வரையுள்ள நிலத்தின் மையத்தில் வீடு அமைந்திருந்தால் உச்சவரம்புக்கு மேற்பட்ட நிலப் பகுதியை அரசு எடுத்துக் கொண்டு எப்படிக் கூறு போட்டு யாருக்கு விற்பது? நகரின் அழகே கெட்டுக் குட்டிச்சுவராகும். தனி மனிதர்களின் வாழ்வில் இவ்வாறு அரசு புகுவது விபரீதமாகும்.

சென்னை போன்ற நகரங்களில் பேட்டைக்குப் பேட்டை நிலத்தின் மதிப்பு வித்தியாசப்படுகிறது. மேலும் பெரிய வீடானாலும் பழைய வீடாக இருந்தால் அதற்கு மதிப்புக் குறைவே. புதிய சிறிய வீட்டின் மதிப்பு மிகுதி.

இவ்வாறெல்லாம் எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு விதிப்பதில் அரசு அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்தால் குழப்பமே விளையும்.

சென்னை—34
31—5—72 வாசன்

உங்கள் எல்லாத் தலைவலிகளையும்



ஒரே ஒரு ஸாரிடான்
டிரேட் மார்க் 'ரோஷ்'

போக்கிவிடுகிறது.

உங்கள் தலைவலியின் காரணம் எதுவாயினும் சரி, கைவசம் ஸாரிடான் வைத்திருங்கள். தலைவலி, உடம்புவலி, பல்வலி, அசௌகரியமான தினங்களில் ஏற்படும் வலி இவைகளால் ஏற்படும் சோர்வைப் போக்கும் வகையில் ஸாரிடான் விசேஷ கலவை முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது. சோர்வை நீக்கிப் புத்துணர்வு அளிக்கிறது. அதுவே ஸாரிடானின் தனிச்சிறப்பு—அது உங்களைத் துடிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வைக்கிறது.

ஸாரிடான் நிவாரணமளிக்கிறது. சோர்வை நீக்குகிறது. புத்துணர்வூட்டுகிறது.



ஒரே ஒரு ஸாரிடான் போதும்
ஒரு 'ரோஷ்' தயாரிப்பு

RP 3836



அன்பே அகிலா!
11
முக்தி வாஹினி கொரில்லாப் படையினர், வங்க தேச விடுதலைக்காக ஏராளமாய் உயிர்த் தியாகம் செய்தால் போதாது; பாக். ராணுவக் கொடுங்கோன்மையை எதிர்க்க ஆயுத பலத்தையும் துணை பெறவும் வேண்டும்; இதற்கு பாரதத்தின் உதவியை நாட வேண்டும் என்கிறாள் அகிலா.
அகிலா! நடக்கிற காரியமா அது?
முயன்று பார்த்தால் தானே தெரியும்?
இது இருந்தால், பாரதத்தின் அனுதாபம் நம்மிடம் இருப்பது உலகறிந்த உண்மை. இதனால் நமது கொரில்லா போருக்கு அது ராணுவத் தளவாடங்கள் கொடுத்து உதவிடும்....
எனக்கென்னவோ நம்பிக்கை இருக்கிறது!
சிறைப்பட்ட நம் தலைவர் நினைவாக முஜீப் நகர் என்று சுதந்திர வங்க தேசத்தின் தலைநகரை அமைத்தாயிற்று. அதன் பிரதிநிதிகளாகச் சிலர் பாரதத்தில் மறைமுகமாக பாரதத் தலைவர்களைச் சந்தித்து வருகின்றனர்!
ரகசியமாக ராணுவத் தளவாடங்களைப் பெற நாம் முயல வேண்டும் என்கிறேன். பாரதம் நமக்கு உதவுகிறது என்பது இன்றுவரை வெளி நாட்டினருக்கும் தெரியாதவாறு காரியத்தைச் சாதிக்க வேண்டாமா?


ம்.... அகிலா! நீ நினைத்ததை முடிப்பாய் என்றே எனக்குத் தோன்றுகிறது. நாளையே புறப்படு!
நானா?.... யோசனை சொல்லத் தான் முன் வந்தேனே ஒழிய....
உன் தோற்றமும் தகுதியானவை தான்! யார்? எங்கள் வீரம் உனக்குத் தெரியும். ஆனால் ஒரு பெண்ணை இருப்பதால், மகிழ்ச்சியோடு மரணத்தை தழுவும் எங்களுக்கோ அனுதாபம் பிறக்கிறது. ஆயுதங்கள் மட்டும் நிறைய இருந்தால் நாங்கள் இன்னும் என்னவெல்லாம் சாதனைகள் புரிய முடியும் என்பதை நன்கு அறிவாய்!
உங்கள் பிரதிநிதி என்ற முறையில் மனம் வாக்கு காயத்தால் என்னால் முடிந்ததனைத்தையும் செய்வேன்!
வெற்றியோடு திரும்பு அகிலா!
அன்பின் வடிவம் அகிலா, வாழ்க!
பெரும் பொறுப்பு ஏற்றுக் கொண்ட அகிலா, அகதிகள் கூட்டம் ஒன்றுடன் சேர்ந்து தானும் ஓர் அகதியாக மேற்கு வங்க எல்லையை நெருங்கினாள்.
அடடா! பாக். ராணுவத்தினரின் காயம் முதாம் தெரிகிறதே! அகதிகளாயும் அவர்களைத் தன் நாக்கு வார்க்களா?
அகிலா நினைத்தபடியே..
நில்லுங்கள்!
அகதிகள் தானே? அனுப்பி விட்டால் என்ன?
அனுப்புவது என்னவோ பாரதத்துக்கு அடுத்துத் தரத்திலே செய்யலாம் திருதிகளோ. ஆனால் அங்கு போய் வம்பு வளர்க்கக் கூடிய சிலரும் இதில் புகுந்து கொண்டிருப்பார்கள். கண்டுபிடித்துப் போலி அகதிகளைப் பிரித்து விட வேண்டும்!
ஆ! சுலைமான் அல்லவா அது!
தொடரும்....

காமன் ஸ்பெஷல்!

கேசி



சீடைசித் தடவையாய் அந்தக் கூண்டுக்குள் கிடந்த முயல்களை மிகவும் பெருமையுடனும் பரவசத்துடனும் பார்த்த நாகநாதன் (எம்.எஸ்.ஸி. ரஸாயனம்) தன் பாண்ட் பைக்குள் கையை விட்டு ஒரு சின்னப் புட்டியை எடுத்து ஆசையுடன் முத்தமிட்டான்.

கூண்டுக்குள் கிடந்த ஏழெட்டு முயல்களில் மூன்று முயல்கள் நன்றாய்க் கருகருவென்று கறுப்பு நிறத்தில் மின்னின ! என்ன விழிக்கிறீர்கள்? முயல்கள் கறுப்பாய் எப்படி இருக்கும் என்று? ஹ ! இருக்கும். நாகுவின் முயல்கள் இருக்கும். சாதாரண நாகுவா அவன் ? ஆராய்ச்சிக் கருவூலம் அவன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுக்கும் கருநெல்லிக் கனி போல், அவனுடைய பன்னிரண்டு மாத ரஸாயன ஆராய்ச்சியின் விளைவாய் உருவான அபூர்வமான தைலம் தான் இப்போது அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்தது. அது என்ன தைலம்?

அதுதான் நரை கறுக்கும் தைலம். அதை உபயோகித்தால் சந்ததமும் இளமையோடு இருக்கலாம். வெண் பஞ்சுக் கூட்டமாய் இருக்கும் முடிகூட, மைக் கறுப்பாய் மாறி மின்ன, அழகு பொங்கி உங்கள் முடிகளில் வழிய, இளமை பொங்கித் ததும்ப, வயோதிகனும் வசீகரமாய் வாலிபக் கோலம் காட்டி, இன்ப வீணையை மீட்டிடுவான். அதற்கு ஆதாரம் இதோ....!

கடந்த ஒரு வருடமாய் அவன் மண்டையைக் குடைந்து, உடைத்து முடியைப் பிய்த்து மூளையை நசுக்கி, உருட்டி, பிரட்டித் தேய்த்துக் கசக்கிச் சித்திரவதை செய்து கண்டு பிடித்த தைலம்தான் தன் பலனைக் காட்டிப் புன்னகை செய்கிறதே!

இரண்டு மாத காலமாய், காலை மாலை இரு வேளைகளும் வெள்ளை முயல்களின் முதுகில் அந்தத் தைலத்தைத் தடவிச் சிப்பால் அழுந்தி வார.... ஏழு முயல்களில் மூன்று முழுக் கறுமை..... இரண்டு பாதிக் கறுமை... மீதி இரண்டும் வெண்மை நிறம் மாறக் கறுமையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன !

ஜாக்கிரதையாய் அவுட்ஹவுஸ் கதவைப் பூட்டிக் கொண்டு சாவியை அலட்சியமாய்ச் சுழற்றிக்கொண்டு பங்களாவை நோக்கி நடந்த நாகு மேகத்தில் பறப்பது போல் நீந்திக் கொண்டிருந்தான்.

அவன் நரை கறுக்கும் தைலமான 'காமன் ஸ்பெஷல்' பெரிய வெற்றி ! அதற்குப் பெரிய வரவேற்பு. அதற்கு முன்னால் நடமாடிக் கொண்டிருந்த நரை கறுக்கும் தைலங்கள் — தவிடு பொடியாகிவிட்டன. வெளி நாடுகளிலிருந்துகூட அதற்கு ஏகப்பட்ட ஆர்டர்கள் வந்து குவிந்தன. அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலை. நாகுவின் சொந்தத் தொழிற்சாலை. காமன் ஸ்பெஷலைத்

தயாரித்துக் 'குவியோ குவி' என்று குவித்தது. அவன் தைலத்தின் சின்னம் கரும்பு வில்லே வளேத்துக் கணே தொடுக்கும் காமன்! எப்படி?

பங்களாவை நெருங்க நெருங்கப் போர்ட்டிகோவைச் சுற்றி நின்றிருந்த ஏகப்பட்ட கார்கள் அவன் கவனத்தை ஈர்த்தன. இவ்வளவும் இங்கு ஏன்? போர்ட்டிகோ படிக்கட்டைத் தாண்டியவன் 'டக்'கென்று நின்ருன். ஏன்?

ஹாலில்.....

ஏகப்பட்ட சல்வார் கமீஸ்கள், லுங்கிகள், பெல் பாட்டம்கள், மினி ஸ்கார்ட்டுகள் அங்கு கிடந்த சோபாக்களிலும் நாற்காலிகளிலும் நிறைந்து கிடந்தன. ஒவ்வொருத்திக்கும் ஒரு சீட் போதவில்லே. எல்லாம் பணக்கார உடம்புகள். எக்கச்சக்கமாய் ஊட்டம் வாங்கிப் பருத்த 'கொஷுக் மொஷுக்' உடம்புகள். கழுத்தும் இடுப்பும் இருக்குமிடம் தெரியவில்லே. இவ்வளவு குண்டோதரிகளும் எதற்காக இங்கு....?

சுரீரென்று உறைத்தது நாகுவுக்கு. ஆகா! இவர்கள் எல்லாரும் அவன் அக்கா அனசூயாவைத் தேடித்தான் வந்திருக்க வேண்டும்.

''பத்தே நாட்களில் கணிசமான அளவில் உங்கள் உடல் எடையைக் குறைத்து, இடுப்பைக் குறுக்கி, மேனி எழிலேக் கூட்டி, இளமைத் தோற்றத்தைப் பெருக்கி, வளமான வாழ்வை வகுத்துக் கொள்ள வேண்டுமா? உடனே அணுகுங்கள், அனசூயா பியூட்டி பார்லர், சென்னே — 97 ''

— என்ற விளம்பரத்தைப் பார்த்துத் தபால் மூலம் தங்களேப் பதிவு செய்து கொண்ட 'பிடி இடையர்களே' ஹாலில் அமர்ந்திருந்த பீப்பாய் இடுப்புக்கள்!

நாகநாதனுக்குத் திடீரென்று ஒரு யோசனே உதித்தது. தைரியமாய் உள்ளே சென்று அந்த அழகுக் குவியல்களிடம் தன் தைலத்தைப் பற்றியும் அதன் அருமை பெருமைகளேப் பற்றியும் கூறி அவர்களேக் கவர்ந்தால் என்ன?

அனசூயாவிடம் என்ன கெஞ்ச கெஞ்சினுன் அவன்.. தன் தைலத்தைஅவளுடைய மாணவிகளுக்குச் சிபாரிசு செய்யும்படி?.... செவிமடுத்தாளா அந்தக் காதகி? என்ன சொன்ருன்? ''பியூட்டி பார்லர்தான்



நான் ஆரம்பித்திருக்கிறேன். ஹேர் டிரஸ்ஸிங் ஸலூன் ஆரம்பிக்கவில்லை'' என்றல்லவா 'பட்'டென்று அடித்து விட்டாள் !

மாடியிலிருந்து வந்த அனசூயா அனைவரையும் அழைத்துக் கொண்டு பங்களாவின் பின்றல் இருந்த தனி இடத்துக்கு, அனசூயா பியூட்டி பார்லருக்கு போய் விட்டாள்.

பெரிய பெருமூச்சு ஒன்றைக் கக்கிவிட்டு ஹாலினுள் வந்து அங்கு காலியாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். தன் துயரத்தின் எல்லையில் உலகை மறந்திருந்த நாகு, வாசல் போர்ட்டிகோவில் ஒரு கார் வந்து நின்றதையும், அதிலிருந்து ஒரு பெண் இறங்கி உள்ளே வருவதையும் கவனிக்கவில்லை.

'' சார் !''

குழலும் யாழும் குழையும் மதலை இழைந்தது அவன் குரலில்.

'' எஸ் ! எஸ் !''

''அனசூயா பியூட்டி பார்லர் என்பது....''

''இஃதே... இஃதே....'' என்றான் நாகு. ''பியூட்டியா? உங்களுக்கு எதற்கு எக்ஸ்ட்ரா பியூட்டி ? இது சோஷலிஸ நாடு. அளவுக்கு மீறி எதையும் யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது. உங்களுக்கு இருக்கும் பியூட்டியே பத்துப் பேருக்குத் தாராளமாய்த் தானம் பண்ணலாமே !''

அவள் புன்னகை செய்தாள்.

குமரன் நிலைகுலைந்தான். காற்றிலேறி விண்ணையும் சாடத் தயாரானான்.

'' சார் ! எனக்கு ஒரு முக்கியமான பிரச்னை. அழகுப் பிரச்னை. அதற்காகவே இங்கு வந்தேன். யாரோ அனசூயா என்பவரைக் கன்சல்ட்' பண்ணும்படி விளம்பரத்தில் வந்ததே?''

''என்ன கேட்டீர்கள்? ஓ! அனசூயா... அனசூயா... அவள் இங்கே ஆலோசனையாளர் அவ்வளவுதான். உங்கள் பெயர் ?''

'' வத்ஸலா.....''

'' வெரிகுட்... குமாரியா... ஸ்ரீமதியா?''

''குமாரிதான் !''

''ஓ, நான் நாகநாதன் எம்.எஸ்ஸி. நீங்கள் நாகு என்று கூப்பிட்டாலும் சரி. இல்லை, ஷார்ட் பண்ணி என். நாதன்னு கூப்பிட்டாலும் சரி. என் நாதன்னு சொல்ல எனக்கும் யாருமில்லை!''

அவள் புன்னகையுடன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

'' ஆ ! பார்த்தீர்களா, மிஸ் வத்ஸலா...! உங்கள் அழகுப் பிரச்னையைப் பற்றிச் சொல்லவே இல்லையே.....!''

''ஒன்றுமில்லை. எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் பிரச்னைதான். ஆங்காங்கு தலை காட்டும் நரை முடிப் பிரச்னைதான்.''

''ஹா !''

நாகுவுக்கு ஒரே கணத்தில் பத்தாயிரம் பக்கெட்டுகள் இன்பத் தேனைக் காதுகளில் பாய்ச்சியது போலிருந்தது.

'' நரை... நரை... உங்களுக்கா...? உங்களுக்கா...?''

''ஆமாம், சார் ! நானும் உபயோகிக்காத தைலமில்லை. ஒன்றும் பிரயோசனமில்லை. இன்னும் இரண்டு வாரங்களில் என் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டம் வருகிறது. ஹேர் 'டை' உபயோகிக்க எனக்கு மனமில்லை. அதற்குள் ஏதாவது இதற்கு வழி..... !''

பொங்கி எழுந்தான் நாகு. ''கவலைப்படாதீர்கள், மிஸ் வத்ஸலா! கவலையேபடாதீர்கள். இதோ பார்த்தீர்களா? காமன் ஸ்பெஷல். ஆண், பெண், சிறுவர் அனைவருக்கும் நீக்கமறக் 'காம'னாய் நரைத்திருக்கும் முடிகளைக் களைய வந்த மயன். நரை களைந்து, கருமையூட்டி, புத்தம் புதிய பொலிவூட்டி, இளமை வழிய ஒரே வழிகாட்டி காமன் ஸ்பெஷல்......''

''சார்.... இது புது பிராண்டா?''

''ஆம்! இந்தியா, இலங்கை, ஜப்பான், இந்தோனேஷியா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் மக்களின் பேராதரவைப் பெற்றது எங்கள் 'காமன ஸ்பெஷல்' நரை கறுக்கும் தைலம். காமன் ஸ்பெஷல் நரை கறுக்கும். தயாரிப்பாளர்கள் டி. பி. டி. நாதன் அண்டு கம்பெனி, அம்பத்தூர்.....''

இதோடு அவன் நின்றிருந்தால் பரவாயில்லை. விவித பாரதியைக் கேட்டுக் கேட்டுப் பழகியவன் அவன். 'டொய், டொய்... டொய்ங்...' என்ற வீணையின் இன்னொலியையும் வாயால் ஒலிபரப்பினான் நாகு.

'களுக்'கென்று நகைத்த அவள், ''இது... இது.... மார்க்கெட்டில் கிடைக்கிறதா ?'' என்று கேட்டாள்.

'' ஓ ! முந்நூறு கிராம், ஐந்நூறு கிராம், ஆயிரம் கிராம் புட்டிகளிலும் பத்தாயிரம் லிட்டர் பீப்பாய்களிலும் கிடைக்கிறது !'' என்ற நாகு அவள் முன் ஒரு காமன் ஸ்பெஷல் சீசாவை நீட்டினான்.

பத்துப் பகல், பத்து இரவாய் வத்ஸலாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நாகுவின் மனங் குளிரப் பதினோராம் நாள் அதிகாலையில் 'ஜில்'(?)லென்று கதிரவன் தோன்றினான்.

படுக்கையில் அவன் புரண்டு கொண்டிருந்த போது அவன் அறையை நோக்கி வந்தாள் அனசூயா. அவனைத் தட்டி, ''நாகு, நாகு...! வத்ஸலாங்கிற பெண்ணை உனக்குத் தெரியுமா?'' என்றாள்.

விருட்டென்று எழுந்தான் நாதன். ''ஆ! வத்ஸலா வந்துவிட்டாளா ? எங்கே? எங்கே, அவள் ?'' மகிழ்ச்சியால் துள்ளினான்.

''அடேயப்பா... அப்படி என்ன பரபரப்பு. வாசல் டிராயிங் ரூமில் அவளும் அவள் அம்மாவும் உட்கார்ந்திருக்கிறார்கள்.''

மகிழ்ச்சியில் மாடியிலிருந்து பத்துப் படிகளுக்கு ஒரு காலாக வைத்துத் தாவி ஓடினான் நாகு. ஆவலுடன் ' வத்ஸலா ' என்று கூவப்போனவன் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை.

'' நீர்தான் இந்தத் தைலத் தயாரிப்பாளரோ?'' என்று சீறியது ஒரு செங்கட்சியம்.

நாகுவுக்கு உயிர் போய் உயிர் வந்தது. அவள் கையிலிருந்த காலிப் புட்டியைப் பார்த்தான். ஆம்! அது அவன் வத்ஸலாவுக்குக் கொடுத்த 'சாம்பிள்' புட்டிதான்!

''ஆமாம் ! நாகநாதன் எம். எஸ்ஸி !''

''வா, வந்து பார், உன் தைலம் செய்த கொடுமையை, பயங்கரத்தை...'' என்றபடி



இது இளைஞர்களின் காலம். இளைஞர்கள் எதையும் ஆற்றவும், மாற்றவும் முடிந்த காலம். இளைஞர்கள் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பலவற்றைப் பாடங்களாகக் கற்பதோடு சமூகத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் சிலவற்றைப் பாடங்களாகக் கற்பிக்கவும் செய்கிறார்கள். பல வேளைகளில் அவர்கள் கற்பதை விடுத்துக் கற்பிக்க முற்பட வேண்டிய அளவுக்கு, சுயநலமிகள் சமூகத்தைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள்.

அதிகார ஆசை, பதவிப் பித்து, சுரண்டல், ஆதிக்க வெறி, சுய விளம்பர மோகம் ஆகிய தீமைகள் நான்கு புறமும் பூத கணங்களைப் போல் சூழும் போதெல்லாம் அவற்றை எதிர்த்துப் பொங்கும் **சத்திய வெள்ள**த்தின் முதல் ஊற்றுக் கண் மாணவருலகிலும், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் எல்லையிலும்தான் இன்று இருக்கிறது; நாளையும் இருக்கும்; என்றும் இருக்க வேண்டும்.

அப்படிச் சத்திய வெள்ளத்தைப் பொங்கச் செய்யும் ஓர் இளம் மாணவர் தலைவன், தன் இளம் தோழர்களுக்காக அவன் செய்யும் பணிகள், போர்கள், சாதனைகள், அவன் வாழ்வில் மெல்லிய அநுராகமாய் இழையும் ஒரு யுவதியின் காதல், சமூகத்தின் சக்தி மிக்க பலிபீடங்களாகிய அதிகாரத்தை; அரசியல் போக்குகளை, சுயநலவாதிகளை எதிர்த்து முரண்பட்டு அவனும் பல்லாயிரம் சக மாணவர்களும் நியாயம் தேடி வீறு பெற்றெழும் நிலைகள், விடுதலைப் போராட்டக் காலத்தில் மகாத்மா காந்தி சாதித்தது போல், விடுதலை பெற்ற பின் சொந்த நாட்டிலேயே உருவாகிவிட்ட சுயநல சக்திகளை அழித்து, அவன் பெறும் நியாயமான வெற்றிகள், அவற்றில் ஊடாடும் சோதனைகள், திருப்பங்கள், அன்பு, ஆற்றாமை, பிரியம், வெறுப்பு, பகை, நட்பு, தவிப்புக்கள், எல்லாவற்றையும் நயமாகச் சித்திரிக்கும் தற்காலப் பல்கலைக் கழக மாணவ வாழ்க்கையைப் பற்றிய ஒரு சுவையான சமூக நாவல் இது.

இந்த நாவலில் மாணவர்கள் தங்களைப் பார்க்கிறார்கள். தங்கள் கோப தாபங்களையும், நியாய உணர்வையும் இதன் கதாபாத்திரங்கள் மூலம் காண்கிறார்கள். சந்தர்ப்பவாதிகளையும், சுயநலமிகளையும் மூழ்க அடிக்கும் பெரும் பிரவாகத்தின் ஊற்றுக் கண்களைத் தங்கள் தார்மீகக் கோபங்களால் அவர்கள் திறக்கிறார்கள்.

நா. பார்த்தசாரதி

எழுதும்

புதிய சமூக நாவல்

சத்திய வெள்ளம்

கல்கி 9-7-72

இதழில் ஆரம்பமாகிறது

அவள் கண்ணீரும் கம்பலையுமாய் அவனை இழுத்துக் கொண்டு வெளியே போனாள்.

மனுநீதிச் சோழன் பதைபதைப்புடன் பின்தொடர்ந்தான்.

''பார், நன்றாய்ப் பார்!'' என்று அவள் வெளி வராந்தாவின் மூலையில் முக்காடிட்டு அமர்ந்திருந்த உருவத்தைப் புயலென நண்ணி வெடுக்கென்று, முக்காடினை விலக்கி அவன் முன் நிறுத்தினாள்.

ஹா! நாகநாதன் இரண்டடி பின் வாங்கினான்.

வத்ஸலாவா அவள்? அவள் வத்ஸலாவா அவள்? என்ன பயங்கரம்? எங்கே அவள் தலையிலிருந்த முடியெல்லாம்?

''பார்த்தாயா, உன் தைலத்தின் மகிமையை....? இப்பொழுது என்ன சொல்கிறாய்?''

''ம்.... ம்....''

நாகு மென்று விழுங்கினான். அவன் தைலம் தடவிய முயல்கள் மட்டும் எப்படிக் கறுகறுவென்று மாறின? பெண்ணின் தலையில் தடவியதும் முடி வெளுத்தாலும் பரவாயில்லை, ஆனால் இப்படிக் கொட்ட ஆரம்பித்துவிட்டதே..... அவன் ஆராய்ச்சியில் எங்கே தவறு?

''இப்போது உன் மேல் நஷ்ட வழக்குப் போடப் போகிறேன்......''

''நஷ்ட வழக்கா?''

''ஆமாம்! உன் அபூர்வத் தைலத்தால் அவள் தலை இப்படி ஆயிற்று. இவளைப் பெண் பார்க்க வந்த என் தம்பி — ஒரே தம்பி —ஐந்து லட்சங்களுக்கு அதிபதி. அவனுக்கும் இவளுக்கும் கல்யாணம் நடக்க வேண்டும் என்று இருபது வருஷங்களாய் நான் கனவு கண்டு வந்தேன். இவளை இன்று காலையில் பெண் பார்க்க வந்தவன் இவள் தலையைப் பார்த்தவுடன் மறு விமானத்திலேயே டில்லிக்கு ஓடிவிட்டான். அவள் தலைதான் இப்படி என்றால் அவள் தலைவிதியும் இப்படி ஆயிற்று. ஆகையால் உன் மேல் முடி நஷ்ட வழக்கு, அழகு நஷ்ட வழக்கு, கல்யாண நஷ்ட வழக்கு, வாழ்க்கை நஷ்ட வழக்கு ஆகியவற்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடரப் போகிறேன்'' என்று கர்ஜித்தபடி எதிர்த்த வாடையிலிருந்த பாரிஸ்டர் பதஞ்சலியின் பங்களாவை நோக்கிப் பாய்ந்தாள், வத்ஸலாவின் தாயார்.

நாகநாதன் விரல்களைச் சொடுக்கினான். கைகளைப் பிசைந்தான். மெல்ல அடிமேலடி வைத்து வத்ஸலாவை அணுகினான்.

''வத்....வத்.... மிஸ் வத்ஸலா...ஐயாம் ஸாரி......''

மெல்ல அவள் திரும்பினாள்.

புயலையும், எரிமலையையும் எதிர்பார்த்தவனுக்குத் தென்றலாய்க் குளிர்ந்தாள் அவள். முகமெல்லாம் புன்னகையாய், ''ரொம்பத் தாங்ஸ்'' என்றாள் அவள்.

நாகநாதன் ஓரடி பின்வாங்கினான். எல்லையற்ற சோகத்தால், பாவை நல்லாள் தலையினுள்ளும் நலம் இழந்தாளோ?

''சந்தேகப்படாதீர்கள். நிஜமாகவே நான் உங்களுக்கு, உங்கள் காமன் ஸென்ஸுக்குத் தாங்ஸ் சொல்லுகிறேன். ஷியாம்சுந்தர், அம்மாவின் தம்பி என்னைப் பெண் பார்க்க வந்தான். அவனைக் கண்டாலே எனக்குச் சின்ன வயதிலிருந்தே ஆகாது. பெரிய குடிகாரன். அவன் சொத்துக்காக அவன் காலில் எப்படியாவது என்னைக் கட்டிவிட வேண்டும் என்று என் அம்மாவும் ஒற்றைக் காலில் நின்றாள். உங்கள் தைலத்தால் என் தலை இப்படி ஆனதும், அம்மா, 'விக்' வைத்து என் தலையை ஜோடித்து அவனை ஏமாற்றிவிடலாம் என்றெல்லாம் திட்டம் போட்டாள். இன்று மாலைதான் கடைக்குப் போவதாக இருந்தது. நல்ல வேளை. நாளைக்கு வர வேண்டியவன் இன்றைக்குக் காலையிலேயே திடீரென்று வந்தான். கண்டான், ஓடிவிட்டான்.......''

'ஹப்பா' என்று ஓர் ஆனந்தப் பெருமூச்சு விட்டான் நாகு.

திடீரென்று அவளிடமிருந்து விம்மல் ஒலி கேட்டது.

''வத்ஸலா! பின் எதற்காக இப்போது அழுகிறீர்கள்? உங்கள் குடிகார அத்தான் தான் தொலைந்தானே? ஏன் விம்முகிறீர்கள்?''

''பின்னே, விம்மாமல் 'ஹம்ம' முடியுமா? என் தோழிகள் என் தலையைப் பார்த்துவிட்டு 'அடி, நீ வத்ஸலா இல்லை, இனி மேல் வழுக்கைத் தலா' என்று கேலி செய்கிறார்கள். இந்த மாதிரித் தலையை வைத்துக் கொண்டிருக்கும் என்னை யார் சீண்டப் போகிறார்கள்?''

நாகநாதனுக்கு இப்போது சினிமாத் தைரியம் வந்துவிட்டது. துணிந்து அவன், அவள் தலையை இழுத்து மார்பில் அணைத்துக் கொண்டு, ''வத்ஸலா, என்னை 'என். நாதன்' என்று சொல்லிக் கூப்பிட யாருமில்லை என்று மறைமுகமாக அன்று உன்னிடம் சொன்னேனே, அப்பொழுதே நீ புரிந்துகொள்ளவில்லையா என்னை? நீ வத்ஸலாவாக இருந்தாலும் சரி, வழுக்கைத் தலையாய் இருந்தாலும் சரி.... உன்னை முதன் முதலாய் எப்போது பார்த்தேனோ.... அதற்கென்ன ஒரு 'விக்' வைத்துக் கொண்டால் பேரழகியாகி விடுகிறாய்......!''

இனி இந்தக் கோடம்பாக்கம் வசனங்களை நாம் கேட்கத் தேவையில்லை.

ஓடிப் போன தம்பி என்னவானான் என்று அறியப் படு வேகமாக வந்த அனசூயா, ஹாலின் வெளிப்புறத்தே நடந்து கொண்டிருந்த சென்ஸார் செய்யப்படாத சீனைப் பார்த்து மறுபடியும் மாடியேறி மறைந்தாள்.

அவளுக்கு ஒரு திருப்தி. அருமைத் தம்பி ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று ஈடுபட்டு, அது வெற்றியடையாவிடில் இதயம் வெடித்து இறந்துவிடுவானோ என்றெண்ணி, ஒவ்வோர் இரவும் அவுட்ஹவுஸுக்கு மறு சாவி போட்டுத் திறந்து தைலம் தடவப்பட்ட முயல்களுக்குப் படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கறுப்பு 'டை' போட்டு நிறம் மாற்றியவளாயிற்றே, அவள்!

தம்பியின் மனம் இனி ஆராய்ச்சியில் செல்லாமல் வத்ஸலாவின் பின்னால்தானே சுற்றும்? இதைவிட அக்கா அனசூயாவுக்கு வேறே என்ன வேண்டும்?


ப்ரூக்ஸ்
ஒலிம்பிக்
ஹெக்டார்


சுகமான சவாரிக்குச் சிறந்தவை

ப்ரூக்ஸ், ஒலிம்பிக், ஹெக்டார் சைக்கிள் ஸீட்டுகள் உயர்ந்த ரகத் தோலினால் உருவாக்கப்படுபவை. இயற்கையான தோலினால் உருவாக்கப்பட்ட இவை சொகுசான சவாரிக்கு உகந்தவை.

உலகப்புகழ்பெற்ற ப்ரூக்ஸ், ஒலிம்பிக் ஸீட்டுகள் தனித்தன்மை வாய்ந்தவை. சகாயமான விலையில் கிடைக்கும் ஹெக்டார் உங்கள் பணத்திற்கு சிறந்த மதிப்பளிக்கிறது.

ப்ரூக்ஸ், ஒலிம்பிக், ஹெக்டார்
சிறந்த சைக்கிள்களை அளிக்கும் டிஐ நிறுவனத்தாரின் தயாரிப்பு







இந்தியாவில் தயாரிப்போர்:
தி ரைட் சாடில்ஸ் ஆஃப் இந்தியா, சென்னை 53.

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட் அனுமதி பெற்று உபயோகிப்பவர்.


TIC/WS/6780



யுரேனஸ் கொண்டான்!

தராஜா

பாரத நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஒன்றில், ஆளும் கட்சியினரது அவசரக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. ('அது எந்த மாநிலம்? அது எந்தக் கட்சி' என்றெல்லாம் அதிகப் பிரசங்கித்தனமாகக் கேட்கக் கூடாது. ஊரைச் சொன்னாலும் சொல்லலாம்; பேரைச் சொல்லக் கூடாதல்லவா ?)



கட்சியின் தலைவர், மாநில முதல்வர் ஆகிய இரு பெரும் பொறுப்புக்களையும் ஏற்றிருந்தவர், கன்னத்தில் கை வைத்துக் கவலையில் ஆழ்ந்திருந்தார். 'முதல்வர் என்ன செய்கிறாரோ அதையே நாமும் செய்தால்தான் மந்திரி சபையில் ஒட்டிக் கொண்டு காலம் தள்ள முடியும்' என்ற உண்மையை உணர்ந்திருந்த இதர அமைச்சர்களும் அதேபோலக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு, முதல்வருக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

ஆமாம், விஷயம் என்ன?



மக்களது மனம் கவரும்படியாக எதையாவது சொல்வது, ஏதாவது செய்வது என்பதை வாடிக்கையாக வைத்துக் கொண்டிருந்தார் அந்த முதல்வர். தினமும் அவரைப் பற்றிய செய்தி ஏதாவது பத்திரிகையில் வந்தாக வேண்டும்; தினசரி குறைந்தபட்சம் ஒரு போஸ்டரிலாவது அவரது படம் இருந்தாக வேண்டும்; இதில் அவர் மிகக் கண்டிப்பாக இருந்தார்.

திறந்திருந்த பள்ளிக்கூடங்களையெல்லாம் மூடப் பண்ணி, பிறகு அவற்றையே திறந்தும் வைத்தாகி விட்டது. தண்ணீரே இல்லாத மணல் ஆறுகளின் மீது பாலங்கள், மக்கள் இல்லாத ஊரில் ஆஸ்பத்திரிகள், ஜன நடமாட்டமே இல்லாத இடங்களில் சாலைகள் — என்று பல இடங்களில் 'அபிவிருத்தி' வேலைகளை ஆரம்பித்து வைத்துச் சலவைக் கல்லில் பெயரைப் பொறித்துக் கொண்டு விட்டார். வெளிநாடுகளுக்குப் பயணம் போய் வந்தாகி விட்டது. இனி அடுத்தபடி என்ன செய்யலாம்? அதுதான் முதல்வருடைய தற்போதைய கவலை...

''ஏன், இப்படிச் செய்தால் என்ன?'' என்றார் ஓர் அமைச்சர்.

'' எப்படி ?'' என்று கேட்டார் முதல்வர்.

''விண்வெளிப் பயணம் போய் வந்தால்?''

அந்த அமைச்சரைச் சந்தேகத்துடன் உற்றுப் பார்த்தார் முதல்வர். 'நம்மை ஒரு வழியாக அப்புறப்படுத்திவிட்டு, தாமே முதல்வ



ராக வருவதற்கு இவர் அடி போடுகிறரோ' என்ற சந்தேகம் முளைத்தது.

''விண்வெளிப் பயணமா? நடக்கக்கூடிய காரியமா அது?'' என்று ஆலோசனை சொன்னவரையே திருப்பிக் கேட்டார் முதல்வர்.


''ஏன்? இப்போது 'சாக்கடையைச் சந்தனக் காடாக்குவோம்!' திட்டத்தை நாம் வெற்றிகரமாக நடத்தவில்லையா?... அதேபோல இதுவும் சாத்தியமே!''

''சரி...பார்ப்போம்...எந்தக் கிரகத்துக்குப் போவது? சந்திரனுக்கா?''

''சேச்சே! அங்கே ஏற்கனவே அமெரிக்காக்காரன் அடியெடுத்து வைத்து விட்டான்... அவன் போன இடத்துக்கே நாமும் போனல், அவனைப் பார்த்துக் காப்பியடிக்கிறேம் என்பார்கள்... மேலும் நம்முடைய விஞ்ஞான சோஷலிஸத்துக்கு அது ஒத்து வராது...பேசாமல் நீங்கள் யுரேனஸ் கிரகத்துக்குப் போய் வாருங்கள்!''

''ஆமாம், அது இங்கிருந்து ரொம்பத் தொலைவு இல்லையா?''

''அதெல்லாம் இல்லிங்க.... சிங்கப்பூர் போயிட்டு வர்ற தொலைவுதான் இருக்கும்னு நெனைக்கிறேன்!'' என்று தம் பூகோள — விஞ்ஞான அறிவை விளம்பரப்படுத்திக் கொண்டார் இன்னொர் அமைச்சர்.



''உளருதீர் ஐயா.. விஷயம் தெரியா விட்டால் வாயை மூடிக் கொண்டு இரும்!'' என்று அவரை அடக்கிய முதல்வர்,

''புள்ளி விவரம்! நீங்க சொல்லுங்க!...யுரேனஸ் போய் வர எவ்வளவு நாட்கள் பிடிக்கும்?'' என்று கேட்டார்.

'புள்ளி விவரம்' என்ற செல்லப் பெயர் கொண்ட அமைச்சர் சொன்னர்: ''யுரேனஸ் இங்கிருந்து 972,000,000,000,000,079 மைல் தூரத்தில் இருக்கிறது... விநாடிக்கு 1870 மைல் வீதம் பறக்கும் ராக்கெட்டில் சென்றல் சீக்கிரமே நீங்கள் திரும்பி வந்து விடலாம் !''

''சீக்கிரம் என்றல் எவ்வளவு நாட்கள்? அக்டோபர் பத்து தேதிக்குள் வந்துவிட முடியுமா?'' — அக்டோபர் 10ந் தேதிதான் முதல்வரது பிறந்த நாள். அவரது ஐம்பத்திரண்டாவது பிறந்த நாளை முன்னிட்டு, ஐம்பத்திரண்டு அங்குலம் விட்டம் கொண்ட 'கேக்' ஒன்றை, ஐம்பத்திரண்டு சென்டிமீட்டர் நீளம் கொண்ட தங்கக் கத்தியால் வெட்டுவது என்று ஏற்பாடு. எனவேதான் இந்தக் கேள்வியைக் கேட்டார் முதல்வர்.

''ஓ! வந்துடலாங்களே!'' என்று பலமாகத் தலையாட்டினர் 'புள்ளி விவரம்'.

''சரி, அப்படியானல் யுரேனஸ் விஜயம் பற்றி அறிவித்துவிட வேண்டியதுதான்!... பி. ஏ.வைக் கூப்பிடுங்கள்!'' என்றர் முதல்வர் உற்சாகமாக.

அன்று மாலையே எல்லாப் பத்திரிகைகளிலும் முதல்வரின் யுரேனஸ் விஜயம் பற்றிய செய்தி பரபரப்புடன் வெளியாகி விட்டது.

யுரேனஸ் பயணத்துக்கென 'ராக்கெட்டு'கள் கட்ட, முதலில் இடம் பார்க்கப்பட்டு, ஏராளமான நிலம் அரசாங்கத்தால் வாங்கப்பட்டது. அப்போது ராக்கெட் வேகத்தில் புறப்பட்டது — ஊழல் நம்பர் ஒன்று! ஆளும் கட்சிப் பிரமுகர் ஒருவர் அரசிடமிருந்து இனமாகப் பெற்றுக் கொண்ட நிலத்தையே மூன்று மடங்காக விலை வைத்து அரசுக்கே விற்று விட்டதாகச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டிப் பேசினர்கள்.

'ஊழல்' என்பதைக் குறிக்க, ''திஸ் ஈஸ் ஏ ரேக்கட்!'' என்றர் எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர்.

''ராக்கெட் விடும் இடத்திலிருந்து ரேக்கட் புறப்படுவதிலே வியப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று சொற் சிலம்பாடி,

கைதட்டல் பெற்றார் முதல்வர். அத்துடன் சரி. விசாரணையாவது, வெங்காயமாவது!

அடுத்தபடி, 'ராக்கெட்' டெண்டர்கள் கோரப்பட்டன. டெண்டர்களையெல்லாம் விண்வெளி நிபுணர் குழு ஒன்று பரிசீலனை செய்தது. அப்போது நடந்த பல சுவையான உரையாடல்களில் இதோ ஒன்று:

நிபுணர் குழுத் தலைவர்: ஆமாம், குறைந்த பட்சத் தொகைக்குத்தான் நாம் காண்ட்ராக்ட் கொடுக்க வேண்டுமா என்ன?

அரசாங்க அதிகாரி: எஸ். எஸ்.... இல்லாவிட்டால் 'ஆடிட்'டில் ஆட்சேபணை எழுப்புவார்கள்..... அதுவும் இல்லையென்றால் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் ஏதாவது பிரச்னையைக் கிளப்புவார்கள்..... நம் முதல்வருக்கு இந்த இரண்டுமே பிடிக்காது!

நி. கு. த.: அப்படியென்றால் கரிவலம் வந்த நல்லூர் குப்புமுத்துவுக்குத் தான் நாம் காண்ட்ராக்ட் கொடுத்தாக வேண்டும்.... அவருடையதுதான் குறைந்தபட்ச டெண்டர்!

அ. அ.: கேள்விப்படாத பெயராக இருக்கிறதே!..... ஆமாம், டெண்டர் தொகை எவ்வளவு ?''

நி. கு. த.: முந்நூற்று முப்பத்து மூனு ரூபாய் முப்பத்தேழு பைசா !

அ. அ.: என்னது?

நி.கு.த.: நெட்டி என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதிலே செய்யப் போகிறாராம் இந்த ராக்கெட்டை!

அ. அ.: நெட்டியிலா ! பறக்குமோ ?

நி. கு. த.: கெட்டியான உலோகத்தில் செய்த ராக்கெட்டே பறக்கிறது. நெட்டி பறக்காதா என்ன?

அ.அ.: எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கிறது..... முதல்வர் பயணம் செய்யப் போகிறார். அது நினைவிருக்கட்டும்! வேறு ஏதாவது டெண்டர் இருந்தால் பாருங்கள்!

கடைசியில் முதல்வரும், மூன்று அமைச்சர்களும், கட்சிப் பொருளாளரும் தனித் தனியே பொறுப்பு செய்திருந்த ஒரு நிறுவனத்துக்கே ராக்கெட் கட்டும் வேலை கொடுக்கப் பட்டது.

ராக்கெட் கட்டும் இடத்தைச் சுற்றி முள் வேலி போட்டார்கள். அதிலே இருந்த ஒரு படலை முதல்வர் திறந்து வைத்ததுடன், ராக்கெட் கட்டும் வேலையையும் தொடங்கி வைத்தார்.

முதல்வரது விண்வெளிப் பயண ஏற்பாடுகள் அதற்குப்பின் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. முதல் வேலையாக, முதல்வர் பேட்டி தரும் நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

இன்னொரு புறம் விண்வெளி விஞ்ஞானிகள் மண்டையை உடைத்துக் கொண்டு யுரேனஸ் கிரகத்தை நோக்கி ராக்கெட்டைச் செலுத்துவதற்கான நாளைக் கண்டுபிடித்துக் குறித்துக் கொண்டார்கள். தேதி குறிக்கப்பட்டதிலிருந்து முதல்வரின் கட்சிப் பத்திரிகைகள் தினமும் 'இன்னும் — நாட்கள்!' என்று கட்டம் கட்டி, முதல்வரின் விண்வெளிப் பயணத்தை விளம்பரப்படுத்தத் தொடங்கின.

ராக்கெட் கட்டும் வேலை மளமளவென்று நடந்தது. முதல்வர் விண்வெளி உடையைத் தரித்துக் கொண்டதுடன், எட்டுப் 'போஸ்'களில் படமும் எடுத்துக் கொண்டார். அந்தப் படங்கள் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின.

முதல்வரது பயண நாள் நெருங்க நெருங்க, நகரச் சுவர்கள் எங்கும் நெருக்கடி தோன்றலாயிற்று. விதம் விதமான அளவுகளில், வண்ண வண்ணச் சுவரொட்டிகள் சுவர்களை அலங்கரிக்கலாயின. சுவரொட்டி வாசகங்களுக்கு இதோ ஒரு 'ஸாம்பிள்' :

'' அன்று கங்கை கொண்டான்.
அப்புறம் கடாரம் கொண்டான்.
இன்று யுரேனஸ் கொண்டான்...
ஏற்றமிகு எங்கள் தலைவன் !''

'' செகமெங்கும் புகழ்பெற்ற எங்கள் தலைவனே!

'' தேசமெங்கும் புகழ்பெற்ற எங்கள் தலைவனே !

சென்று வாரீர்! யுரேனஸ் கிரகத்தினை வென்று வாரீர் !

புகழ் மொண்டு வாரீர் !

புதுப் பெருமை கொண்டு வாரீர் !''

பயணம் புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு முதல்வர் நிருபர் மகாநாடு ஒன்று கூட்டினார். அப்போது கேட்கப்பட்ட சில கேள்விகளும், முதல்வரின் பதில்களும்:

''உங்கள் யுரேனஸ் பயணத்தின் நோக்கம் என்ன ?''

''அண்ட சராசரங்களிலும் நாம் புகழ்க் கொடி நாட்டிட வேண்டும். அதன் முதற் படியே இது!''

''நீங்கள் உங்களுடன் என்ன கொண்டு செல்லவிருக்கிறீர்கள்?''

''என்னுடைய கவிதைத் தொகுப்பு நூல்களை! அங்கு மக்கள் இனம் இருந்தால் அவர்களுக்கு என் கவிதைகளைப் படித்துக் காட்டி விளக்கம் தந்திடுவேன் !''

''அங்கிருந்து என்ன கொண்டு வருவதாக உத்தேசம் ?''

''நிச்சயமாக நீங்கள் நினைப்பது போல் சிலைகளோ, சித்திரங்களோ, அல்ல....அந்தக் கிரகத்து மக்களின் நல்லெண்ணங்களையே சுமந்து வருவேன்!''

''நீங்கள் யுரேனஸ் கிரகத்துக்குப் போவது வெறும் விளம்பரத்துக்காக என்று சிலர் சொல்கிறார்களே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?''

''அப்படிச் சொல்பவர்கள் அறியாதவர்கள், அழுக்காறு கொண்டவர்கள், அரசியல் அரிச்சுவடிகள், அநுதாபத்துக்கு உரியவர்கள்!''

''நீங்கள் யுரேனஸ் கிரகத்துக்குப் போக முடியாதவாறு தடை ஏதும் ஏற்பட்டு விட்டால்?''

''அடைந்தால் யுரேனஸ், இன்றேல் இடுகாடு !''

''போய் வந்த பிறகு உங்கள் அநுபவங்களைப் பத்திரிகைகளில் எழுதுவீர்களா ?''

'' எங்கள் கட்சியைத் தாக்கி எழுதாத ஏடு ஒன்றில் நிச்சயமாக எழுதுவேன் !''

''வந்த பிறகு அமைச்சரவையில் மாற்றம் ஏதேனும் செய்யும் உத்தேசமுண்டா ?''

''வந்தபிறகு கேளுங்கள், சொல்கிறேன்!''

பயணம் புறப்படும் நாள். ராக்கெட் கிளம்பும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்

கிறது. ஆனால் முதல்வரை மட்டும் இன்னும் காணோம். சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகள் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். 'நேரம் தவறிப் போனால் ராக்கெட் யுரேனஸுக்குப் போக முடியாதே!' என்பது அவர்கள் கவலை.

ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு குளுகுளு காரில் வந்து இறங்கினார் முதல்வர். ''என்ன இவ்வளவு லேட் பண்ணி விட்டீர்கள்?'' என்று அவரை நெருங்கித் தைரியமாகக் கேட்டார் ஒரு நிபுணர்.

''நீ யாரய்யா அதைக் கேட்கிறதுக்கு?'' என்று சீறி விழுந்த முதல்வர், பி.ஏ.வைக் கூப்பிட்டு அந்த நிமிடமே அந்த நிபுணரின் வேலைக்குச் சீட்டுக் கிழித்தார்.

அதற்குப் பிறகு முதல்வருக்கு வழியனுப்பு விழா நடந்தது. மாலைகளும், பழங்களும், கைத்தறித் துண்டுகளும் மலைபோலக் குவிந்தன. அவற்றையெல்லாம் அள்ளி அப்படியே ராக்கெட்டில் போடச் சொன்னார் முதல்வர்.

''இடம் இருக்காதுங்களே!'' என்றார் பி. ஏ. மெள்ள.

''இன்னய்யா, விவரம் தெரியாத ஆளா இருக்கியே! டிக்கி இருக்குமில்லே? அதைத் தொறந்து உள்ளே போடச் சொல்லு!'' என்று விரட்டினார் முதல்வர்.

பிறகு தம்மைக் காண வந்திருந்தவர்களுடன் கை குலுக்கினார். கட்டித் தழுவினார்; சிலரிடம் அன்புக் கண்ணீர் சொரிந்தார். .... நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது. ஆனால் முதல்வரிடம் யார் போய்ச் சொல்வது ?... ஒருவருக்கும் அந்தத் துணிவு வரவில்லை. கடைசியாக ஒரு விஞ்ஞானி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முதல்வரை நெருங்கி, ''நீங்கள் ராக்கெட்டில் ஏறிக் கொள்ளலாமே?'' என்றார் பணிவுடன்.

''நீ போய் ஸ்டார்ட் பண்ணு, முதல்லே! நான் இதோ வர்றேன்!'' என்ற முதல்வர், ''ஆமாம், அந்த கேஸ் இன்னு ஆச்சு ?'' என்று நண்பர்களுடன் கதைபேசத் தொடங்கி விட்டார். அதிலே இன்னும் மூன்று மணி நேரம் ஓடியது.

கடைசியில் ஒரு வழியாக முதல்வரே விஞ்ஞானிகள் பக்கம் திரும்பினார். ''நான் தயார். போகலாமா?'' என்றார். விஞ்ஞானிகள் மளமளவென்று அவரை அழைத்துக் கொண்டு போய் ராக்கெட்டில் ஏற்றினார்கள். கதவுகளைச் சாத்தினார்கள். 'கவுண்ட் டவுன்' ஆரம்பமாயிற்று.

பாதி ஆகியிருக்கும் ; 'தொப்'பென்று 'காபின்' கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தார் முதல்வர்.

''என்ன! என்ன!'' என்று பதறிக்கொண்டு ஓடினார்கள் அத்தனை பேரும்.

''எத்தினி நேரம் சும்மா உட்கார்ந்திருக்கிறது?.... ஒரு சீட்டுக் கட்டு இருந்தாக் கொடுங்க..... 'ஸோலோ' வாச்சும் ஆடிப் பொழுது போக்கறேன்!'' என்று கேட்டு, ஒன்றை வாங்கிக் கொண்டு மீண்டும் ராக்கெட்டில் ஏறினார் முதல்வர்.

சற்றைக்கெல்லாம் பெருத்த ஓசையுடன், நெருப்பைக் கக்கிக் கொண்டு பறந்து போயிற்று அந்த ராக்கெட்.

அமைச்சர் புள்ளி விவரத்துக்கு அளவில்லாத சந்தோஷம். அவர்தானே இனி முதல்வர் ?.... ராக்கெட்டில் யுரேனஸுக்குப் போனவராவது, திரும்பி வருவதாவது ! அன்று மாலையே அமைச்சரவையில் இருந்த மற்ற அமைச்சர்களைச் சரிக்கட்டித் தாமே முதல்வராகிவிட்டார் புள்ளி விவரம்.

மறு நாள் சுறுசுறுப்பாக எழுந்து விழுந்தடித்துக் கொண்டு தலைமைச் செயலகத்துக்கு ஓடினார் புள்ளி விவரம். முதல்வர் நாற்காலியில் உட்காரத்தான் !

முதல்வரது அறைக்குள் நுழைந்ததுமே புள்ளிவிவரத்துக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. காரணம், ராக்கெட்டில் போன பழைய முதல்வர் தம்முடைய பழைய நாற்காலியில் அமர்ந்து நிதானமாகப் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார் !

''நீங்கள்.... நீங்கள்.... எப்படி.... வந்தீர்கள் ?'' — குழறினார் பு.வி.

''எப்படியா ?.... சிவப்பிரகாசத்தைப் போய்க் கேளுங்கள்!'' என்றார் முதல்வர் சிரித்துக் கொண்டே.

''சிவப்பிரகாசமா ? யார் அது?''


''நாம் சிபாரிசு செய்த காண்ட்ராக்டர் ! அவர் கட்டிய ராக்கெட் ஆயிற்றே ! அதுவாவது, யுரேனஸுக்குப் போவதாவது ! என்னை நேராக எங்கள் வீட்டு மாடியிலே கொண்டு போய் இறக்கி விட்டுவிட்டது !... ராத்திரி நிம்மதியாகத் தூங்கிவிட்டு வந்து சேர்ந்தேன் !.....''

''உம்! கொடுப்பினை அவ்வளவுதான் !'' என்று பெருமூச்செறிந்தார் பு. வி.

''யாருக்கு? உங்களுக்கா ?''

''இல்லை, உங்களுக்குத்தான்!... 'யுரேனஸ் ரிடர்ண்ட்' என்று பட்டம் சூட்டிக் கொள்ளக் கொடுத்து வைக்கவில்லையே, உங்களுக்கு !''

''பட்டம் கிடக்கட்டும் ! பதவி பறி போகாமல் இருக்கிறதே ! அது போதும் எனக்கு!... கொஞ்சம் அசந்தால் அடித்துக் கொண்டு போகத்தான் ஆசாமிகள் காத்துக் கொண்டிருக்கிறார்களே!'' என்றார் முதல்வர் குறும்பாகக் கண்ணைச் சிமிட்டியபடி.



என். ஜி. ஆர். பயிற்சி சாலையின் அங்கத்தினர்கள் இளைஞர் சங்கத்தின் கடமைகளைப் பற்றி விவாதிக்கின்றனர்.

இளைஞர் சமுதாயம்

11. உடலுறுதியும் மன உறுதியும்

இரவு நேரத்தில் தனிமையில் அகப்பட்டுக் கொண்ட நம்மை ஒரு குண்டன் மணிபர்ஸ்ஸை எடுக்குமாறு மிரட்டினுனென்றால் அப்போது நமக்குத் தேவைப்படுவது உடலுறுதி. சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் டாக்ஸிக்காரனிடம், ''ராயப் பேட்டை போகணும் அப்பா, என்ன கேட்கிறாய்?'' என்று நடுங்கிய படி கேளாமல் டாக்ஸியில் 'ஜம்'மென்று ஏறி அமர்ந்து, ''மீட்டரைப் போட்டுவிட்டு ராயப்பேட்டைக்கு விடு'' என்று கூற நமக்குத் தேவைப்படுவது மன உறுதி. உடலுறுதி, மன உறுதி இரண்டையும் அளிப்பதில் முனைந்து முன்னிற்பது கோவையில் உள்ள தியாகி என். ஜி. ராமசாமி உடற்பயிற்சிச் சாலை. இந்த இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு நடராஜத் தேவர் மிகவும் பலமாக மேஜையில் ஒரு குத்துக் குத்திவிட்டு மேற்படி கருத்தைக் கூறினார். இந்த உடற்பயிற்சிச்சாலையின் உதவிச் செயலாளர் திரு ஆர். விசுவநாதன் உடலுறுதியை வளர்க்கச் சங்கம் தேகப்பயிற்சி அளிப்பதையும் மன உறுதியை வளர்க்க இறையுணர்ச்சியை ஊட்டுவதையும் விவரித்தார். தெய்வ பக்தியும் ஒழுக்க சீலமும் உடையவன் அவற்றுடன் உடலுறுதியையும் பெற்றுவிட்டால் எதற்காக அல்லது யாருக்காகப் பயப்படப் போகிறான்?

கோவையில் ராமநாதபுரம் என்ற பகுதியில் இந்தச் சங்கம் இருக்கிறது. இளைஞர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கும் இடம் ஒரு சின்ன ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தில் இருக்கிறது. பிள்ளையார், முருகன், நவகிரஹம் ஆகிய தெய்வ சந்நிதிகளுடன் பெரிய ஸ்ரீராமர் படத்துடன் கூடிய பஜனை மடமும் சேர்ந்து, இந்த இடமே தனிப்பட்டதொரு தெய்வ சான்னித்தியத்துடன் விளங்குகிறது.

மன்றத்தின் தலைவர் திரு நடராஜத் தேவர் நல்ல திடகாத்திரமான தோற்றம் கொண்டவர். தாடியுடன் கதரும் புனைந்துகொண்டிருக்கும் அவரை யார் பார்த்தாலும் தியாகி ராமசாமியின் உயிர் நண்பர் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்!

''நாட்டுக்கு நல்லன பல செய்ய நல்ல பலசாலிகள்தாம் தேவை என்பதைக் காலம் சென்ற என் அருமை நண்பர் தியாகி ராமசாமி அடிக்கடி கூறுவார். உள்ளத்தில் உறுதியான தேசபக்தி இருந்தால் மட்டும் போதாது; அந்தத் தேசபக்தியை அனைவருக்கும் பரப்ப உறுதியான உடலும் தேவை...'' என்று கூறினார் நடராஜத் தேவர்.

''இங்கு என்னென்ன தேகப்பயிற்சிகளை இளைஞர்களுக்கு அளிக்கிறீர்கள்?''

''எல்லா விதமான பயிற்சிகளும் அளிக்கிறோம். என் நண்பர் திரு சன்னாசித் தேவர்தான் இங்கு உடற்பயிற்சி சொல்லித் தரும் ஆசிரியர். இந்த மன்றம் செயற்படும் விதத்தைக் கேள்வியுற்று வெளியூரிலிருந்து இங்கு தாமாகவே உடற்பயிற்சி ஆசிரியராக வந்துசேர்ந்தார். மிகவும் சிரத்தையோடு சொல்லித் தருகிறார்.


நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

என்ற வள்ளுவர் பெருமான் வாக்கைத்தான் நாங்கள் பரமோபதேசமாகக் கொண்டு ஒழுகுகிறோம். இச்சங்க அங்கத்தினர்கள் புகை பிடிக்கக் கூடாது, லாகிரி வஸ்துக்களைத் தொடக் கூடாது, புலால் உண்ணக் கூடாது என்பன போன்ற கட்டுத் திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறோம்'' என்று மன்றத்தின் கொள்கைகளை விளக்கினார்.

''இளைஞர் சங்கத்தின் தலைவராகிய நீங்களும்உடற்பயிற்சி ஆசிரியரும் பெரியவர்களாயிருக்கிறீர்கள். மற்றப்படி...''

''உங்கள் கேள்வி விளங்குகிறது.எங்கள் இருவரைத் தவிர, செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் முதலியவர்களெல்லாம் இளைஞர்கள்தான். ஒரு கல்லூரியில் பிரின்ஸிபல், வைஸ் பிரின்ஸிபல், பேராசிரியர் ஆகியவர்கள் வயதில்

உடல் முழுமைக்கும் வலிமையூட்டும் மல் யுத்தப் பயிற்சி நடைபெறுகிறது; புஜங்களை உறுதியாக்கும் கருவியில் ஒருவர் பயிற்சி பெற, ஆசிரியர் கண்காணிக்கிறார்.



பெரியவர்களா யிருந்து கல்லூரியை நடத்துவது போல் நாங்களும் இந்த இளைஞர் சங்கத்தை நடத்துகிறோம்.''

''தியாகி ராமசாமியின் நினைவாக இந்தச் சங்கம் நடந்து வருவதற்குக் குறிப்பாகக் காரணம் கூற முடியுமா?''

''அவர் என் அருமை நண்பர். பேராசிரியர் கல்கி அவர்களுடன் கூட அவர் ஒரு சமயம் சிறைவாசம் செய்திருக்கிறார். தேச விடுதலையில் மிக்க ஆர்வம் காட்டினார். அதற்காக உயிர்த் தியாகமும் செய்யத் தயாராக இருந்தார். அவர் பெயரை இந்தச் சங்கத்துக்குச் சூட்டியதில் எனக்குத் தனிப்பட்ட விதத்தில் மகிழ்ச்சி.'

''சமூக சேவை ஏதாவது செய்கிறீர்களா?''

''இறை வழிபாட்டின் ஓர் அங்கமாகக் கொண்டு நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு அன்னதானம் அளித்து வருகிறோம். சமையல் வேலை, பரிமாறும் வேலை ஆகிய எல்லாப் பணிகளையும் சங்கத்தின் அங்கத்தினர்களான இளைஞர்களே செய்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தச் சங்கத்தின் முக்கியமான கொள்கை அரசியலில் எக்காரணம் கொண்டும் பங்கு கொள்ளக் கூடாது என்பதுதான். சங்க அங்கத்தினர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கு ஆண்டுதோறும் சுற்றுலாச் செய்கிறோம். ஆலயங்களும் சிறப்ப வளங்களும் நிறைந்த ஊர்களுக்குத்தான் சுற்றுலாப் போவோம்.''

தலைவரின் உரையை நான் குறுக்கிட்டு எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய அடக்கத்துக்கு முக்கியமான காரணம் என்னைச் சுற்றிலும் இருந்த அங்கத்தினர்கள் அனைவரும் உடற்பயிற்சி செய்து தேக பலத்தை வளர்த்துக் கொண்ட இளைஞர்களா யிருந்தது தான்! தப்பித் தவறி அவர்கள் மேல் மோதிக் கொண்டால் கல் தூண்களில் மோதிக் கொள்வது போல் இருந்தது.


நான் இந்த இளைஞர் சங்கத்தின் வாசலில் நுழைந்ததுமே பயப்படுவதற்கு வேண்டிய அநுபவம் கிடைத்தது. சங்கத் தலைவர் நீட்டிய கையைக் குலுக்கிவிட்டு உடற்பயிற்சி ஆசிரியரிடமும் நினைவில்லாமல் கையைக் கொடுத்து விட்டேன்! அவ்வளவுதான்! என் முகத்தில் அசடு வழிந்தது! மற்ற இளைஞர்களிடமெல்லாம் கை கொடுக்க எனக்குத் தைரியமில்லை. காரணம், எழுதிப் பிழைக்கும் கையாயிற்றே! பிழைப்பைக் கெடுத்துக் கொள்ள முடியுமா? இரண்டு கைகளையும் நெஞ்சோடு சேர்த்து இறுகக் கட்டிக் கொண்டு விட்டேன்! (மிகவும் பக்தியோடு கோயிலுக்குள் போவதாக நினைத்துக் கொள்ளட்டுமே!)

''தோளை வலியுடையதாக்கி - உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி - அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு
மாறு உடலுறுதி தந்து.....''

என்று பாரதியார் பராசக்தியை வேண்டிய வரத்தைப் பலமுறை நான் படித்திருக்கிறேன். அந்த உபதேசத்தைச் சிரமேற்கொண்டு நன்கு இயங்கி வரும் ஓர் இளைஞர் மன்றத்தை இப்போதுதான் கண்டேன்.

கோவையிலிருந்து சென்னை திரும்பிய பிறகு அண்மையில் நாளிதழில் ஒரு செய்தி படித்தேன். பிரிட்டனில் கராட்டே வீரர்கள், கையினாலேயே ஒரு வீட்டைத் தகர்த்துக் குப்பை மேடாக்கினார்கள் என்பதுதான் அந்தச் செய்தி. 'இது சாத்தியமா என்ன?' என்று என் நண்பர்கள் பலர் ஐயப்பட்டார்கள். ஆனால் தியாகி ராமசாமி உடற் பயிற்சிச் சாலைக்குச் சென்று திரும்பியிருக்கும் எனக்கு இப்படிப்பட்ட சந்தேகமே எழவில்லை.

— ஸோமாஸ்



வாள்போரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு மாணவர் ஸ்பிரிங் தேகப் பயிற்சிக் கருவியில் பயில்கிறார்.


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்




OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD.

லஞ்ச ஊழல் மிகவும் மலிந்துள்ளதே இன்று? விடுதலை பெற்ற நாட்டின் மக்கள் நேர்மையைப் புறக்கணிக்கலாமா?

சுதந்திரத்துக்கு முன்னர் லஞ்சக் குற்றத்துக்கு உள்ளானவர்கள், மக்களும் சரி, அதிகாரிகளும் சரி — கடுமையாகத் தண்டிக்கப்பட்டு வந்தனர். உயர் மட்டத்திலிருந்த அதிகாரிகள் லஞ்சத்துக்கு மசியாதவர்களாக இருந்தனர். லஞ்சம் வாங்கினால் எங்கே அகப்பட்டுக் கொண்டு விடுவோமோ என்ற பயம் வாங்கிக் கொள்பவர்களுக்கும் இருந்தது; கொடுப்பவர்களுக்கும் இருந்தது. இன்று அந்தப் பயம் போய் விட்டது. அதன் விளைவுதான் இன்றுள்ள நிலை!

பயம் நீங்கக் காரணம்...?

மேல் மட்டத்தில் ஊழல் மலிந்ததுதான். ஆங்கிலேயர் ஆட்சியில், அரசாங்கம் என்பது எக்சிக்யூடிவ் கௌன்சில் மெம்பர்களைக் குறிக்கும். அவர்கள் வைசிராயினால் நியமிக்கப்பட்டு வந்தனர். இன்று ஏறக்குறைய அதற்கு இணையான பதவிகளை வகிப்பவர்கள் அமைச்சர்கள். அமைச்சர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஜனநாயக அமைப்பின் இன்றியமையாத அம்சம் இது. அமைச்சர்களிடம் நேர்மையும் நெறியும் கண்டிப்பும் இருந்தால் இது பரவாமல் இருக்கும்.

ஜனநாயக நாட்டிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி புரியுங்கால், அவர்கள் அதிக பொறுப்புணர்ச்சியையும், நேர்மையையும், கண்ணியத்தையும் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவர்களாகத்தானே இருக்க வேண்டும்? அன்னியர் ஆட்சியில் இல்லாத இக்குறைபாடு, ஜனநாயகத்தில் இருப்பானேன்?

அடுத்த தேர்தலுக்கு மக்களைத்தானே அமைச்சர்கள் மீண்டும் சந்திக்க வேண்டியுள்ளது? மக்களுக்கு, அல்லது கணிசமான ஒரு மக்கள் தொகையிடம் செல்வாக்கு உள்ளவர்களுக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமென்றால் அதை 'எப்படியாகிலும்' நிறைவேற்றிக் கொடுக்கும்படி ஆகிறது. குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களுக்கு முறைப்படியோ, முறை யில்லாமலோ சில வசதிகளை அளிக்க வழி செய்யும்போது, இடையில் சிலர் சொந்த லாபம் கருதியும், சில வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். முன்னாள் முதலமைச்சர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பற்றி விசாரணை செய்யப்பட்டு முடிவு வெளியாகியுள்ளதே — பார்த்தீர்களல்லவா? ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே இத்தகைய விபரீதமான குற்றங்களைச் செய்வாரேயானால், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்?

ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக லஞ்சம் கொடுப்பது மானக்கேடானதல்லவா? மக்கள் தெரிந்தே இந்தக் குற்றத்தை இழைக்கலாமா?

தவறுதான். இருப்பினும் இதற்கு மாறாக நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. வாய்ப்பு, வசதிகள் குறைவு. போட்டி அதிகம். கல்லூரிகளில் சேர, வேலை வாய்ப்புக்களைப் பெற, ஒரு தொழிலுக்கு லைசென்ஸ் வாங்க, ஏன், மருத்துவ மனையில் சேர்வதற்குக்கூடப் போட்டி கடுமையாக இருப்பதால், மக்கள் சிபாரிசு, லஞ்சம் முதலிய வழிகளில் ஈடுபடுகிறார்கள். சுயநலந்தான் காரணம். ஆனால் பதவியில் உள்ளவர்கள் சரியாக, நீதிக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். அப்போது ஊழல் ஓரளவு குறையலாம்.

லைசென்ஸ் பற்றிக் குறிப்பிட்டீர்களே - லைசென்ஸ் இல்லாமலே தொழில்களைத் தொடங்கும் வாய்ப்பு மக்களுக்கு அளிக்கப்பட்டால்...?

இன்றைய பிரச்னை.11


லஞ்ச ஊழல் ஒழியுமா?

அப்போதுகூடத் தொழிற் கூடத்துக்குத் தேவையான தண்ணீர், மின்வசதி இவைகளைப் பெறும் முயற்சியில் மீண்டும் இப் பிரச்னை எழுமே? பாங்கில் கடன் வசதி பெறுவது, அயல்நாடுகளிலிருந்து சில அத்தியாவசியப் பண்டங்களை இறக்குமதி செய்வதற்கான 'பர்மிட்'டும், அந்நியச் செலாவணியும் பெறுவது—இவற்றிலும் இந்தச் சிக்கல் இருக்கிறது. போட்டி உள்ளவரை லஞ்சமும் இருக்கவே செய்யும். மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்வு செய்யும் முறையையே

[லஞ்சப் பேய் கோர தாண்டவம் புரிந்து வருவது குறித்து அதிருப்தி அடையாதவர்கள் யாருமே இருக்க முடியாது. மேல் மட்டத்தில் தொடங்கிப் படிப்படியாகக் கீழ்மட்டம் வரை எல்லா நிலைகளிலும் கோர தாண்டவமாடி வரும் இந்த ஊழல் நம் நாட்டை விட்டு ஒழியுமா? ஒழிக்க வழியுண்டா? தமிழக அரசின் பிரதம காரியதரிசியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு வி. ஏ. ராமகிருஷ்ணன் அவர்களைக் கேட்கிறோம்.]







மருந்துகள் தயாரிக்கும் பிரபல நிறுவனமான ஜியாப்ரே மானேர்ஸ், தேசிய பாதுகாப்பு நிதிக்கு 3,51,000 ரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நிதியை மகாராஷ்டிர முதன் மந்திரி ஸ்ரீ வி.பி. நாயக்கிடம் ஸ்தாபன டைரக்டர் திரு எம். ஜி. மகேசுவரி வழங்குகிறார். □

எடுத்துக் கொள்வோமே? பரீட்சை எழுதச் செய்து, தகுதிப் பிரகாரம் தேர்ந்தெடுப்ப தென்று விதி செய்தால் இன்றுள்ள குறை பாடுகள் — 'எப்பாடு பட்டாகிலும்' இடம் பிடிப்பதற்கான முயற்சிகள் — கணிசமாகக் குறையுமே?

எனவே தகுதிக்கு மட்டும் மதிப்பளிப்பது என்று முடிவு செய்தால் லஞ்ச ஊழல் குறையும் இல்லையா?

நிச்சயமாக. வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் இன்றுள்ளது போல் தகுதி புறக் கணிக்கப்பட்டதில்லை. எனவே லஞ்சமும் குறைவாக இருந்தது. அரசியல்வாதிகளின் உறவினர்; 'பெரிய' மனிதர்களின் பிள்ளை, மாப்பிள்ளை போன்ற நெருங்கிய உறவினர்கள் பலரும் உயர்ந்த பதவிகளில் அமர்ந்துள்ளதைப் பிரத்யட்சமாகக் காண்கிறோமே? தகுதியுள்ளவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தகுதியற்றவர்களைச் சிபாரிசின் பேரில் ஒரு பதவிக்கு நியமனம் செய்வதும் ஒரு வகையில் லஞ்சமே. பணம் கொடுப்பது மட்டுந்தான் லஞ்சமா?

பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது, நிர்வாகிகள் ரூ. 200, ரூ. 300 என்றெல்லாம் நன்கொடை வசூலிக்கிறார்களே? பள்ளி இறுதியாண்டு வரை இலவசக் கல்வி என்று பிரகடனம் செய்துவிட்டு இவ்விதம் கணிசமான தொகையை நன்கொடையாக வசூலிப்பதும் ஒருவகையில்....?

குற்றந்தான். ஆறாவது வகுப்பிலிருந்து மெட்ரிகுலேஷன் வரை படிக்க என்ன சம்பளம் கட்ட வேண்டியிருக்குமோ, அத்தொகையை ஒட்டு மொத்தமாக 'நன்கொடை' என்ற பெயரில் வசூலிக்கும்போது இலவசக் கல்வி என்ற சொல்லுக்கே பொருளில்லாமல் போய் விடுகிறது. வசதி உள்ளவர்கள் கொடுக்கிறார்கள் என்ற சமாதானம் ஏற்றுக் கொள்ள முடியாததே. வசதி உள்ளவர்கள்தாம் மற்றக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும் லஞ்சம் கொடுக்கிறார்கள். அதைக் குற்றம் என்றுதானே கருதுகிறோம்?

லஞ்ச ஊழல் குறைய மக்கள் என்ன செய்யலாம்?

மக்களின் மனோபாவமும் நடவடிக்கைகளும் அடியோடு மாற வேண்டும். இன்றுள்ள நிலையில் அது சாத்தியமன்று. தகுதியை மட்டும் நம்பியிருந்தால் எந்தக் காரியமும் நடக்காது; செல்வாக்கு, சிபாரிசு இவற்றையெல்லாம் நாடினால்தான் காரியம் கைகூடும் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் வேரூன்றி விட்டது. கட்சி அடிப்படையில்தான் மக்கள் தேர்தலின்போது வாக்களிக்கிறார்கள். தனி நபரின் நாணயம், நேர்மை இவையெல்லாம் கவனிக்கப்படுவதில்லை. காரியம் நிறைவேற மக்கள் தலைவர்களையும், தலைவர்கள் மக்களையும் நம்பியிருக்க வேண்டியுள்ளது. எனவே வேலைகளுக்குச் சிபாரிசு செய்வது, பதவி உயர்வு, மாற்றல் இவைகளிலெல்லாம் தலைவர்கள் குறுக்கிடுவது சகஜமாகிவிட்டது; கூடவே ஊழல் மலிகிறது.

இதனைத் தடுக்க வழி...?

கொள்கைகளை உருவாக்கி, அவற்றைக் காரியதரிசிகளுக்கும், அதிகாரிகளுக்கும் விளக்கி உரைத்து விட்டு அமைச்சர்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு அதிகாரிகளுடையதாக இருக்க வேண்டும். குறிப்பாகச் சொன்னால் அரசாங்கப் பணி அரசியல் தலைவர்களின் தலையீடு இல்லாமல் நடைபெற வேண்டும். அவ்வப்பொழுது நடைமுறைகளில் எழும் சிக்கல், பிரச்னைகளைச் சமாளிக்க ஒரு நிரந்தர விசாரணைக் குழு அமையப் பெற வேண்டும். பிரதம காரியதரிசியின் தலைமையில் அக்குழு செயல்படுவது உசிதம். இப்படி நடைபெறுமானால் குற்றவாளிகள் நிர்த்தாட்சண்யமாகத் தண்டிக்கப்படுவர். அரசியல் தலைவர்களின் பெயருக்கும் களங்கம் வராமல் இருக்கும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது கண்டு மற்றவர்களுக்கும் பயமிருக்கும். லஞ்ச ஊழல் கணிசமாகக் குறைய வழியுண்டு.

லஞ்ச ஊழலைக் குறைக்க அமைச்சர்கள் வேறு என்ன செய்யலாம்?

பெரிய ரயில் நிலையங்களுக்குத் திடீர் விஜயம் செய்து பார்வையிடலாம். நிலைமையை நேரில் கண்டு குறைகளைக் களையலாம். மருத்துவ மனைகளுக்குச் சென்று பார்வையிடலாம். லஞ்ச ஊழல் குறைய இம்முறை மறைமுகமாக உதவக் கூடும். இவையெல்லாம் விட முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். லஞ்ச ஊழலை விரட்டியடிப்பதில் அரசுக்கு அதிக ஆர்வமிருப்பதாகத் தெரியவில்லை என்ற கருத்து மக்கள் மனத்தில் ஆழப் பதிந்துள்ளது. இதனை மாற்ற முயல வேண்டும், முதற் காரியமாக. அரசியல்வாதிகளும் சரி, அதிகாரிகளும் சரி, தேவையுள்ளவர்களுக்குத் தேவையுள்ள தருணங்களில் உதவலாம். ஆனால் அவ்வித உதவியினால் பிறரது நியாயமான நலன்கள் பாதிக்கப்படக் கூடாது.

பேட்டி: **'பாணன்'**

ஹாக்கியில் குத்துச் சண்டை!

சென்னை, சேப்பாக்கம் எம். ஸி. ஸி. கிரிக்கெட் மைதானம். எம். ஸி. ஸி. நடத்தும் ஐம்பத்தெட்டாவது ஹாக்கிப் போட்டியில் குத்துச் சண்டையும் காணும் அரிய வாய்ப்பு ரஸிகர்களுக்குக் கிடைத்தது. கொடுத்த காசுக்கு இரட்டிப்புக் காட்சிகளென்றும் மகிழ்ச்சிதானே!

மாலை ஐந்து மணி ஆகியும் வெய்யில் தணியவில்லை. எம்.ஸி.ஸி. கிரிக்கெட் மைதானத்தில் பட்லர்கள் தட்டில் மரியாதையாகக் கோப்பைகளை ஏந்தி வந்தார்கள்.

"இந்த வெய்யில் வேளையிலே இவங்க கோப்பையிலே கூல்டிரிங்கைக் கொண்டு வந்தால் நல்லா யிருக்குமே!"

"இவங்க பரிசுக் கோப்பைகளைக் கொண்டு வர்றாங்க, சுவாமி!"

இந்தியன் ஏர்லைன்ஸ் ஹாக்கிக் கோஷ்டியினரும் பெங்களூர் எம்.ஈ.ஜி. குழுவினரும் முந்தினநாள் முதல் லெக் டிராவிலிருந்துஇரண்டாவது 'லெக்' ஆட்டத்தைத் தொடர மைதானத்தில் இறங்கினர்.

"அசோக்குமார் என்னமா ஆடறான் பார்த்தீங்களா?"

"போய்! நடிக்கிறான்னு சொல்லு. அவர் ஹிந்தி நடிகராச்சே!"

"ஹாக்கியில் 'மந்திரவாதி'ன்னு உலகப் புகழ் பெற்ற தயான் சந்தின் குமாரர்அசோக்குமார்! அப்பனுக்குப்பிள்ளை சோடையில்லே!"

அசோக்குமார் பறக்கிறார். அபாரமாகப் பந்தைச் சுற்றி வளைத்து எடுத்துச் சென்று ஒரு கோல் அடித்து அனைவரது கரகோஷத்தையும் பெறுகிறார். இந்தியன் ஏர்லைன்ஸ் டிராபிக் மானேஜர் திரு சக்கரவர்த்தியின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடுகிறது. இரண்டாவது 'கோல்' அடித்து ஏர்லைன்ஸுக்குப் புகழ் சம்பாதித்த கோவிந்தாவும், எம். ஈ. ஜி. குழுவின் கோல்கீப்பர் மகாதேவனும் ஹாக்கியில் குஸ்திக்கு வித்திடுகிறார்கள்.

எம். ஈ. ஜி. கோல்கீப்பர் மகாதேவனும் இந்தியன் ஏர்லைன்ஸ் இனும் 'இனமாக'க் குத்துச் சண்டை நடத்தி மகிழ்வித்தனர்!

"வேடிக்கைதான்! அடிபட்டவனை விட்டு விட்டு அடிச்சவனைச் சமாதானப்படுத்தறாங்களே!" என்றார் ஒருவர்.

அடிபட்ட இனும் மைதானத்துக்கு வெளியிலே சிகிச்சை பெறுகிறார்! எம். ஈ. ஜி. கோல்கீப்பர் மகாதேவனை நடுவர் மைதானத்தை விட்டு வெளியேற்றுகிறார்! கொஞ்ச நேரம் எம். ஈ. ஜி. கோல்கீப்பர் இல்லாமலே ஆட்டம் தொடருகிறது.

"ஒலிம்பிக் ஸ்டார் பீட்டர் உயிரைக் கொடுத்து ஆடியும் எம்.ஈ.ஜி. இன்று சோபிக்கவில்லையே!"


"ஏர்லைன்ஸ் முன்னணி ஆட்டக்காரர்களின் 'கை' ஓங்கியிருந்தது. அவர்கள் வைத்ததெல்லாம் வரிசையாயிற்று! வெற்றியைக் கொத்திக் கொண்டு பறந்து விட்டார்கள்!"

தலைசிறந்த ஆட்டக்காரர்களுக்கான பரிசுகளை எம். ஈ. ஜி. ஹாக்கி ஆட்டக்காரர் பூபாலனும், ஸ்டேட் பாங்க் பிரபாகரும் பெற்றுக் கொண்டார்கள்.

"தர்ம நியாயமான (Fair Play) ஆட்டத்துக்கு விசேஷப் பரிசு தந்து வருகிறோமே, அந்த வழக்கத்தை மாற்றி மோசமான நடத்தைக்குக் கோப்பை தருவதாகச் சொன்னால்தான் பரிசு செல்லுபடியாகும்போலிருக்கு" என்கிறார் 'அய்யா'.

அவர் சொன்னதற்கு ஏற்றாற்போல் 'Fair Play' கோப்பை ஹாக்கி விருந்தளித்த எம்.ஸி.ஸி.க்கே வந்து சேர்ந்தது. ஆட்டத்தை விக்னமின்றி முடித்ததற்காகப் பரிசு எனக் கருதலாமே! பி.எஸ்.எம்.





1. போலீஸ் கமிஷனர்; 2. நடுவர்.
ஏர்லைன்ஸ் ஆட்டக்காரர்கள்: 3. கோவிந்தா; 4. கிருஷ்ண மூர்த்தி; 5. அசோக்குமார்; 6. காப்டன் இனும்.



அம்மா

ரா. கணபதி

37. பாவத்தைப் பரிந்து ஏற்ற பாவனி

அம்பிகே! ஸ்பரிசவேதியில் வைத்த இரும்பும் உடனே பொன்னுவது போல், கங்கையில் கலந்த கழிவடை நீரும் புனித கங்கையே ஆகி விடுவது போல், எத்தனையோ பாவங்களால் மிகவும் மாசுற்ற என் உள்ளமும் உன்பால் கொண்ட அன்பால் கட்டுண்ட பின் எப்படி நிர்மலமாகாதிருக்கும்?
- ஆதி சங்கரரின் ஆனந்தலஹரீ

சியாமசுந்தரி மறைந்தவுடன் சாரதை கதறித் தீர்த்தாள். நீண்ட காலத்துக்கு முன்பே ராமகிருஷ்ணர் கூறியிருந்தது போல், அவ்வப்போது அம்மா உலகியல் இன்ப துன்பங்களில் ஒரேயடியாக மனத்தைக் கொடுத்து விட்டதாகத் தோன்றினாலும் அந்த ஆழ்ந்த உணர்ச்சி அதிசயமான விரைவில் சுவடே தெரியாமல் மறைந்து விடும். அவதாரங்களின் அப்ராக்ருத சரீரத்தைப் பிரகிருதி சம்பந்தமான பிருதிவியில் நிறுத்தி வைக்கவே அவ்வப்போது இந்த உணர்ச்சி எழுச்சிகள் நேருகின்றன என்பார் ராமகிருஷ்ணர்.

சாரதானந்தர் சியாமாப் பாட்டியின் உத்தரக் கிரியைகளை ஒரு குறையுமின்றி, யதோக்தமாக நடத்தி வைத்தார். கிருதயக்ஞத்தன்று அம்மா, தன் அம்மாவின் இறுதி ஆசைப்படி பூசணிக்காய் கறி சமைத்து ஊராருக்கெல்லாம் அன்னதானத்துடன் வழங்கினாள்.

சாரதை தனது அன்னையின் ஸ்தானத்தில் வைத்திருந்த இன்னொரு புண்ணியசாலினி உண்டு. ராமகிருஷ்ணரைக் கோபாலனாகக் கண்ட கிழவி கோபால மாதாவே அந்தப் பாக்கியசாலி. பெற்ற தாயை இழந்த பின் கல்கத்தாவுக்கு வந்த சாரதை கோபால மாதாவை மரணப் படுக்கையில் கண்டாள்.

அம்மா உள்ளே நுழைந்ததும், ''கோபாலா, வந்தாயாடா, அப்பனே'' என்று கைகளால் துழாவினாள் அந்த மூதாட்டி.

சாரதை சிலை போல் நின்றாள்.

பக்கலில் பணிமகளிடம் கோபாலமாதா ஏதோ ஜாடை செய்தாள். அந்தப் பெண் நம் அம்மாவிடம் ''உங்க பாத தூளி வேணும்கிறாங்க'' என்றாள்.

தன் 'மாமியார்' என்றே எல்லோரிடமும் கோபால மாதாவைக் குறிப்பிடுவாள் அம்மா. அந்தக் கிழவியும் ''மாட்டுப் பெண்ணே!'' என்றுதான் நம் அம்மாவைக் கூப்பிடுவாள். இன்று 'மாமியார்' இவளது பாத தூளியைக் கேட்டபோது, சாரதை எவ்விதத் தயக்கமும் ஆட்சேபமும் செய்யாமல் தன் திருவடியை நீட்டினாள். பணிப்பெண் அதனை வஸ்திரத்தால் ஒற்றி எடுத்துக் கோபால மாதாவின் உடல் முழுதும் தேய்த்து விட்டாள்.

சிறிது காலத்தில் கோபால மாதா பூலோகத்தை விட்டுக் கோலோகம் சென்றடைந்தாள்.

அரசர்கள் 'காடு ஆறு மாதம், நாடு ஆறு மாதம்' என்று வாழ்ந்தது போல், கல்கத்தாவிலும் ஜயராம்பாடியிலும் மாறி மாறி வசித்த அம்மா பிறந்த ஊருக்குத் திரும்பினாள். எந்த அவதாரமும் அநுபவிக்காத பிக்கல் பிடுங்கலுடன், எந்த அவதாரமும் செய்திராத ஓயாத உழைப்புடன் காலத்தைத் ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அதிசயத்திலும் அதிசயமாக அவளை விட்டுத் தாற்காலிகமாக ஓர் உபத்திரவம் விலகுவதாகத் தோன்றியது. ஸுரபாலாவின்

தலைப்பில் காண்பது அம்மா சென்னையில் தங்கியிருந்த இல்லம்.



தகப்பனார் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். ஆதியில் ஸூரபாலா தாயை இழந்த பின் தாய்வழிப் பாட்டியிடம் வளர்ந்தாள். தந்தைக்கு அவளிடம் பற்றுதலே கிடையாது. எனவே இப்போது மூளைக் கோளாறு பிடித்த மகளை அவர் அழைத்துப் போனது ஆச்சரியமாகவே இருந்தது. பிறகுதான் மர்மம் வெளியாயிற்று. பொருளாசையே உருவான அந்தத் தகப்பனார், அநாதையும் அவலமுமான ஸூரபாலாவின் நகைகளை ஈவு இரக்கமின்றிக் கழற்றி வைத்துக் கொண்டு அவளைச் சாரதையிடம் திருப்பி ஓட்டி விட்டார். சித்தக் கோளாற்றிலும் பொருள் ஆசையை விடாத ஸூரபாலா நகைகளுக்காகப் புலம்பத் தொடங்கினாள்.

ஒரு நாள் அம்மா வீட்டிலே யாரோ பக்தரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது திடீரென்று பேச்சை நிறுத்தினாள். ''நான் போறேன்; நான் போறேன். அந்தப் பைத்தியக்காரப் பொண்ணு **அம்மா**வை இம்சை பண்ணிண்டிருக்கு'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக வெளி வந்தாள். சிம்மவாஹினியின் கோவிலுக்கு வந்தாள். ஆம், அங்கு ஸூரபாலா சிம்மவாஹினியிடம் நகைக்



காகச் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்.

சாரதை அவளை நல்ல வார்த்தை சொல்லிக் கையைப் பிடித்து அழைத்து வந்தாள். சிம்மவாஹினியை சாரதை காப்பாற்றினாள்; சிம்மவாஹினி சாரதையைக் காப்பாற்றவில்லை! ஸுரபாலா தன் பல்லவியை மாற்றிக் கொண்டாள். சாரதையிடமே ''எங்கே என் நகை! திருடி! அதைத் திருப்பித் தரயா இல்லையா?'' என்று போர் தொடுக்கலானாள்.

அம்மாவைக் காண வந்திருந்த பக்தர் அவளது நிலை கண்டு உருகினார். அம்மா வேதனையோடு சிரித்துக் கொண்டே, ''கிரீஷ் சொல்வார்: சிவனையும் காளியையும் சுற்றிப் பேய் பிசாசுகள்.பைத்தியங்கள் எல்லாம் இருக்கும்னு. இவ என் பைத்தியச் சேடி'' என்றாள்.

ஸுரபாலாவின் தந்தையை வரவழைத்தாள் அம்மா. பாரமார்த்திகப் பருவதங்களும் எவளைப் பணிந்து வணங்கினவோ அப்படிப்பட்ட சாரதை 'சம்பந்திப் பிராமணராகிய' ஸுரபாலாவுடைய தந்தையை நமஸ்கரித்து அவரது காலைப் பிடித்துக் கொண்டாள். ''மாமா, இந்தக் கஷ்டத்திலேயிருந்து என்னை விடுவிக்க மாட்டேளா?'' என்று பரிதாபமாக வேண்டிக் கொண்டாள்.

அந்தக் கொடூரச் சித்தரோ, ''என் காலில் விழுந்தால் காரியத்தைச் சாதிச்சுக்க முடியுமா என்ன? என் கிட்டேயிருந்து நகை நட்டு ஒண்ணும் பெயராது. நாளைக்கே காலம் எப்படி இருக்குமோ? நீங்கள்ளாம் இந்தப் பெண்ணையும் பேத்தியையும் என்ன செய்வேளோ?'' என்றார்.

அம்மாவுக்கு ஒரு வேகம் வந்தது. 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் இந்த மனிதர் மசிய மாட்டார். இவரைக் கேட்கிறபடி கேட்க வேண்டும் என்று தீர்மானித்தாள். லலித் சட்டர்ஜி என்று பக்தர் ஒருவர் இருந்தார். அவர் அஞ்சா நெஞ்சர். எதற்கும் துணிந்தவர். அவரைக் 'கெய்ஸர்' என்றே அழைப்பார்கள். அம்மா அவருக்குத் தகவல் தெரிவித்தாள். 'கெய்ஸர்' கல்கத்தாவின் பெரிய போலீஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து கடிதம் பெற்றுக்கொண்டு, போலீசார் சூழ, அமர்க்களமாக ஐரோப்பிய உடுப்பிலே, ஒரு பல்லக்கில் ஆரோகணித்து ஸுரபாலாவின் தந்தை வீட்டில் வந்திறங்கினார். அந்தப் பொல்லாத கிழவர் நடுநடுங்கிக் கொண்டு கெய்ஸரின் காலைப் பிடித்துக் கொண்டார்.

இங்கே அம்மா, சம்பந்தியின் வீட்டுக்குக் கெய்ஸர் வந்தாயிற்று என்று அறிந்ததும் விலவிலத்துப் போனாள். மகாசயர் எனப்படும் மகேந்திரநாத் குப்தாவிடம், ''நீங்களும் கூடப் போயிருங்கோ. சம்பந்தியைக் கெய்ஸர் அவமரியாதை பண்ணிவிடப் போறான். அவனுக்குக் கோபம் வந்ததுன்னா எல்லையே இருக்காது. நீங்க கூட இருந்தால் கொஞ்சம் பதமாயிருப்பான்'' என்று கையைப் பிசைந்து கொண்டு கூறி அனுப்பினாள். அதுதான் தாய் உள்ளம்!

நகைகளுடன் வெற்றி வீரராக வந்தார் லலித் சட்டர்ஜி. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள் அம்மா. ''நகைக்காகக் கவலைப்படுவது போய் அந்தக் கிழவனுக்காகக் கவலைப்பட்டு எனக்குக் கை காலே ஓடவில்லை. அவரை ரொம்பப் பயமுறுத்தி விடவில்லையே?'' என்று 'கெய்ஸரை'க் கேட்டாள்.

இச்சமயத்தில் தம்மைக் காணவந்த ஒரு பக்தரிடம் அம்மா பேசிய பேச்சு ரத்தினத்துக்கும் மேலே உயர்வானது.

அந்த பக்தர், ''ராமகிருஷ்ணர் சாட்சாத் பரம்பொருளா?'' என்று கேட்டார்.

''சந்தேகமில்லாமல்'' என்றாள் அம்மா.

''மனைவிக்குக் கணவன்தான் கடவுள் என்கிற ரீதியில் சொல்கிறேளா?''


''கணவர் என்கிற முறையிலும்தான்; வாஸ்தவத்திலும்தான்.''

''சரி. அப்படீன்னா ஸீதைக்கும் ராமனுக்கும், ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இருந்த மாதிரி உங்களிருவருக்கும் ஐக்கியம் இருக்கணும். நீங்க சாதாரண மனுஷி மாதிரி சப்பாத்தி மாவை உருட்டிண்டு இருக்கிறேளே?''

''குழந்தே! இதுதான் மாயை, மாயை என்கிறது. வைகுண்டத்திலே நாராயணனுக்குப் பக்கத்திலே மகாலக்ஷ்மியாக உட்கார்ந்திருக்க வேண்டியவள்தான், இங்கே புகை மூட்டத்திலே சமையல் பண்ணிண்டு இருக்கேன். என்ன காரணம்னு கேக்கிறியா? தெய்வத்துக்கு மநுஷ்யாளா ஆகி விளையாடணும்னு ஆசை. அதுதான் காரணம்.''

''அப்படியானால் உங்களுக்கு அப்பப்போ உங்களுடைய ஈசுவரத்துவம் பளிச்சிடுமா?''

''ஆமாம். அந்தச் சமயங்களில் என்னை நானே, 'இதென்ன இந்தக் காரியங்களைப் பண்ணிண்டு இருக்கியே, நீ யார் தெரியுமா?'ன்னு கேட்டுப்பேன். ஆனால் மாயையைப் பாரு. உடனே இந்த வீடு, வாசல், குழந்தைகள் முதலானதெல்லாம் மனசிலே வந்து புகுந்துக்கிறது. மாயை என்னை ஆட்டிவைக்கிறதுன்னு அர்த்தமில்லை. நானேதான் மாயையை ஒப்புக் கொண்டு ஏத்துக்கறேன்.''


COIMBATORE FARMER RAISES EGYPTIAN COTTON LAKSHMI MAKES THEM INTO SUPERFINE CLOTH-
SUJATA IS THE RESULT
A breakthrough in cotton cultivation has been achieved in Coimbatore District - SUJATA cotton is the result which will replace imported Egyptian cotton.
Lakshmi presents 100% SUJATA Fabrics.
THE LAKSHMI MILLS COMPANY LIMITED
PAPPANAICKENPALAYAM
COIMBATORE-18

> கர்மத்தின் கட்டிலிருந்து விடுபடுகிற வழி என்ன? ஒரு காரியமும் இன்றிச் சோம்பிக் கிடப்பதல்ல. எதிலும் பற்றேயின்றி, மனம் சும்மாக் கிடக்கும் நிலையில் கர்மம் புரிய வேண்டியதில்லை. ஆனால் இந்த நிலை தொடக்கத்திலேயே சித்திக்காது. இந்த முதிர்ச்சி உண்டாகிற வரையில், சுயநலமின்றிக் கர்மம் செய்து கொண்டே இருப்பதுதான் கர்மத்தின் கட்டிலிருந்து விடுபட வழியாகும்.
>
> — தூய அன்னை சாரதா தேவி

எதற்காக? நமக்காகத்தான்!

அந்த ஆண்டு நவராத்திரி துர்கா பூஜைக்காக அம்மா கிரீஷின் வேண்டுகோளை ஏற்று அவரது இல்லத்துக்கு எழுந்தருளினாள். அப்போது அவளுக்கு மலேரியா காய்ச்சல்.

கிரீஷ் பெரிய அளவில் விழா எடுத்தார், நடமாடும் துர்க்கை வந்தாள் என்ற பூரிப்பில். ஏராளமான பக்தர்களுக்குத் தரிசனமும், பாதஸ்பரிசனமும் தரும் பொருட்டு அவள் நெடு நேரம் போர்த்திக் கொண்டு நிற்க வேண்டியதாயிற்று. அஷ்டமி – நவமி கூடுகிற ஸந்தியில் அதி விசேஷமான வழிபாடு நடக்கும். அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மியாக ஆவிர்ப்பித்த தேவி, மஹிஷாசுரனை வதைத்த பரம புண்ணிய முகூர்த்தம் அதுவே. ஆனால் அச்சமயத்தில் அம்மாவுக்கு ஜ்வரம் அதிகரித்து விட்டதால் அவள் தன் ஜாகையிலேயே முடங்கிக் கிடக்கும்படியாயிற்று.

கிரீஷுக்கு ஆற்ற மாட்டாத குறை. தன் வீட்டு மாடியில் துக்கத்துடன் அவர் அமர்ந்திருக்கையில், கீழேயிருந்து, ஸந்தி பூஜை தொடங்குவதற்காகப் புரோகிதர் குரல் கொடுத்தார். கிரீஷ் உடனிருந்தவர்களிடம் "எனக்கு மனசே சூன்யமாயிடுத்து. இதற்கென்றே ஊரிலிருந்து வந்த அம்மா இப்போது நம்மோடு இல்லை. அம்மா இல்லாத துர்கா பூஜையிலே அர்த்தமே இல்லை. கீழே என்ன வேணுமானாலும் பண்ணட்டும். நான் வரவில்லை" என்றார்.

அதே சமயத்தில் பின்புறக் கதவு மெல்லத் தட்டப்பட்டது. "யார்?" என்று கேட்டுக் கொண்டே வேலைக்காரி சென்றாள்.

வெளியிலிருந்து "நான்தான்" என்று மெல்லிய குரல் வந்தது.

ஆஹா, **அம்மா**! கிரீஷ் மூர்ச்சித்து விழாமலிருந்தது ஆச்சரியம்தான்.

"அங்கே எனக்கு இருப்பாகவே இல்லை. அதுதான் வந்துட்டேன்" என்று கூறிக் கொண்டு உள்ளே பிரவேசித்தாள் சாரதை. குழந்தைகளை ஏமாற்றக் கூடாதென்று காய்ச்சலைப் பொருட்படுத்தாமல் தன் விடுதியிலிருந்து நடந்தே வந்திருக்கிறாள்!

மின்னல் வேகத்தில் செய்தி பரவவே, திமுதிமுவென்று கூட்டம் சேர்ந்தது. ஒவ்வொருவராக அனைவரும் தன் பாதத்தில் படவிட்டு வணங்கும் வரையில் அப்படியே நின்று கொண்டிருந்தாள். பொதுவில் மகான்கள் அநுமதிக்க மறுக்கும் கிரீஷின் நடிக–நடிகையர் கூட்டமும் அம்மாவை வணங்கி அருள் பெற்றது. தாபஜ்வரத்தை அம்மா தாங்கியது பெரிதே இல்லை; எத்தனையோ பேரின் பாப பாரத்தைப் பரம பவித்திர மாதா தாங்கினாளே, அதுதான் மகா பெரிசு! பாஸிடிவ் மின்சக்தி, நெகடிவ் மின்சக்தியை வாரி இழுத்துக் கொள்வதுபோல் அம்மாவின் புனித சக்தி, பாவியரின் தீய சக்தியை வாரி இழுத்துக் கொள்ளும். பாவிகள் அம்மாவின் காலைத் தொட்டு வணங்கியவுடன் அவர்களின் பாபம் அம்மாவுள் புகும். அவளது உடம்பு, குறிப்பாகத் திருப் பாதங்கள் பற்றி எரியும். அம்மா அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சகிப்பு ஸ்வரூபிணியாக, சாந்த ஸ்வரூபிணியாக நிற்பாள். அனைவரும் அகன்ற பின்னரே கங்கா ஜலத்தால் திரும்பத் திரும்பக் காலை அலம்பிக் கொண்டு அந்தத் தாபத்தைத் தீர்ப்பாள் அம்மா. இப்படி அவதிப்பட்ட போதிலும் அடியார் தன் அடி தீண்டுவதை அவள் தடுக்கவேமாட்டாள்.

இவ்விதம் பிறரது பாதகங்களால் மலினமான தனது நளின பாதங்களை நள்ளிரவு வரையில் கழுவிக் கொண்டாலும், அவளது அருட்கங்கை வற்றாது. அந்த நடுநிசியில் நடுத்தெருவிலிருந்து ஒரு பதிதனின் குரல் கேட்டுவிட்டால் போதும், விரைந்தோடுவாள் வாயிற்புறச் சாளரத்துக்கு. பதிதனுக்கும் கருணாமயியாகத் தரிசனம் தந்து, கரிசனத்துடன் அவனது பாபத்தையும் பரிந்து வாங்கிக் கொள்வாள்.

அன்பின் எல்லை நிலம் நம் அன்னை சாரதை!

ஜயராம்பாடிக்குத் திரும்பினாள் தேவி. மலேரியாக் காய்ச்சல் கண்டு ஜன்னி நிலைக்குப் போய்விட்டது. எப்படியோ பிழைத்தாள்.

அம்மாவைக் கல்கத்தாவுக்கு வருமாறு அழைத்தார் சாரதாநந்தர்.

அம்மா மெல்லப் பேசினாள்: "கல்கத்தாவிலேயும் பல தினுசு கஷ்டம் இருக்கு சரத். முன்னே நான் ஒன்றிக் கட்டையாயிருந்த மட்டும் சரி. இப்போ பிச்சி மாமி (ஸுரபாலா), ராதி எல்

லோரையும் இழுத்துண்டு விடா விடா வரது நன்னாயில்லே. நான் இங்கேயே கிடக்கேன்'' என்றாள்.

சாரதாநந்தரின் உள்ளத்தில் ஓர் உத்தேசம் உருவாயிற்று. ஆனால் கர்ம வீரர்கள் உத்தேசத்தைச் சொல்லமாட்டார்கள்; அது பழுத்தபின் கனியைத்தான் கொண்டு வருவார்கள். ஏதும் பேசாமலே கல்கத்தாவுக்குத் திரும்பினார் சாரதாநந்தர்.

அன்றிலிருந்து அந்தத் துறவி பைசா பைசாவாகச் சேமிக்கலானார். விவேகாநந்தரின் உரைகளைப் புத்தகமாக வெளியிட்டதில் 2700 ரூபாய் கிடைத்தது. கங்கைக் கரையில் பாக் பஜாரில் ஒரு பக்தர் முன்னமே அன்பளிப்பாகத் தந்திருந்த மனைக் கட்டில் கடைகால் எடுத்தார். ''அம்மா, உன்னை நம்பி இதில் ஈடுபடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு கடன் தேடலானார். எட்டாயிரத்துக்கு மேல் கடனாகத் திரட்டினார். கடைகாலின் மீது கட்டடம் எழும்பியது. பதினாயிரம் ரூபாய் செலவில் மூன்றடுக்குக் கட்டடம் எழும்பியது. ஆறு அறைகள் கொண்ட கீழ்ப் பகுதி 'உத்போதன்' என்ற சமய சஞ்சிகைக்கு அலுவலகமாயிற்று. முதன் மாடியிலிருந்த மூன்று அறைகளும், மேல் மாடியில் உள்ள அறையும் அம்மாவுக்கே சொந்தமாக வைக்கப்பட்டன.

பராசக்திக்கு ஜீவராசிகள் அனைத்துமே குழந்தைகள் என்றாலும் கணபதியும் கார்த்திகேயனும் விசேஷமாகக் குழந்தைகள் அன்றோ? அம்மாவுக்கு இப்படி இரு சிறப்புப் புதல்வர்களாயிருந்தவர்கள், முதலில் யோகாநந்தரும் பிறகு சாரதாநந்தரும் ஆவர். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தை எதிர்பாராமல், தாமே பொருள் திரட்டி அம்மாவுக்கு ஆஸ்தானம் அமைத்துத் தந்த பெருமையைப் பெற்றவர் சாரதாநந்தர். எண்ணாயிரம் ரூபாய் கடனை அடைக்கவும் அவர் உபாயம் வைத்திருந்தார். அம்மாவுக்குக் கல்லால் வீடு கட்டியவர், 'அப்பா'வுக்குச் சொல்லால் வீடு கட்டிக் கொண்டிருந்தார். ஆம், ''ஸ்ரீராமகிருஷ்ண லீலாப் பிரசங்கம்'' என்ற அற்புத வாழ்க்கை வரலாற்றை இயற்றியவர் சாரதாநந்தரே. அந்த நூல் விற்பனையின்மூலம் பிற்பாடு கடனைத் தீர்த்தார்— குருமஹராஜுக்குப் பட்டிருந்த அன்புக் கடனையும்தான்! அன்புப் பணி மூலமே இன்ப நிலையான மோட்சத்தைத் தொட்டவர் சாரதாநந்தர்.

வீட்டு வேலை பூர்த்தியானதும் சாரதாநந்தரின் மனமும் பூரித்தது. அம்மாவை அழைத்து வர அவர் எண்ணிய அதே சமயத்தில் அவருக்கு அம்மாவின் அழைப்பு வந்தது. அதுகாறும் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்த சாரதையின் சோதரர்கள் இப்போது பாகப் பிரிவினை செய்து கொண்டு பிரிந்து போக முடிவு செய்திருந்தனர். வெறும் நாளிலேயே பூசலிட்டுக் கொள்ளும் அவர்களிடை இப்போது புயலாகக் கிளம்பிய சர்ச்சைகளைச் சொல்லி முடியாது. தன் குழந்தைகள் அனைவரிலும் தெளிந்த புத்தியும், நிதானமும், உறுதியும் கொண்ட 'ஷரத்' வந்தாலே சுமுகமான தீர்வு பிறக்கும் என்று அம்மா கருதி, அவரை அழைத்தாள். சாரதாநந்தர் ஜயராம்பாடிக்குச் சென்றார்.

பாகப் பிரிவினை அடிதடி இல்லாமல் நடந்ததற்குச் சாரதாநந்தர்தான் காரணம். அவரது ஆத்மிக காம்பீர்யம் காரணமாக, அவரது தலை மறைவில் குஸ்தி பிடித்துக் கொண்ட அம்மாவின்

ஆறுமுகமங்கலத்தில் ஆனைமுகன் திருப்பணி!

திருநெல்வேலி ஜில்லா, ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் தாம்பிரபரணி நதிக் கரையில் உள்ள ஊர் ஆறுமுகமங்கலம். இங்கு ஸ்ரீ ஆயிரத்தெண் விநாயகர் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இந்த விநாயகராலயம் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், மணிமண்டபம் முதலிய பலவிதமான மண்டபங்களுடன் நூல்களில் கூறிய விதிப்படியே அமைந்துள்ளன. அழகிய தேருண்டு. தேரோட்டம் உண்டு. கோயிலில் விலை உயர்ந்த வாகனங்கள் பல உண்டு. அவைகள் பந்தோபஸ்தாக வைப்பதற்குத் தகுதியாகப் பாதுகாப்பான இடம் இல்லை. மண்டபங்கள் எல்லாம் ஒழுக்குடையதாக இருக்கின்றன. அவசியமான திருப்பணிகளைச் செய்து முடிப்பதற்குத் திருப்பணிக் கமிட்டி நியமிக்கப் பெற்றுள்ளது. இந்தப் புண்ணிய கைங்கரியத்துக்கு எல்லோரும் பொருளுதவி செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திரு கா. க. சண்முகவேல் நாடார், பொக்கிஷதார், ஆறுமுகமங்கலம் ஸ்ரீ ஆயிரத்தெண் விநாயகர் திருப்பணிக் கமிட்டி, தாத்துக்குடி என்ற விலாசத்துக்குப் பொருளுதவி அனுப்பலாம்.

சோதரர்கள், அவரைக் கண்ட மாத்திரத்தில் பெட்டிப் பாம்பாகி விடுவர். சகோதரர்கள் வெட்கக்கேடான முறையில் கணக்குப் போட்டுப் பிரிவினை செய்யும்போது, அம்மா சிறிதும் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி இருந்தாள். அவளது பற்றின்மையையும், நிச்சலனப் பாங்கையும் கண்டு அவளை நன்கு புரிந்துகொண்ட 'ஷரத்'துமே ஆச்சரியப்பட்டார்.

கல்லுக்குள் ஈரம் என்பார்களே, அதுபோல் சாரதையின் வறண்ட சகோதரர்களுக்குள்ளும் ஒரு குளிரிழை ஓடிற்று. வாழ்நாள் எல்லாம் தங்களுக்கு உழைத்துக் கொட்டியிருப்பவளும், பணத்தாலும் எவ்வளவோ செய்திருப்பவளுமான அக்காளுக்கெனப் பிதிரார்ஜிதக் குடிசைகளில் ஒன்றைத் தர அவர்கள் முடிவு செய்தனர். மத்தியஸ்தக் குழுவினர் அம்மா எந்தக் குடிலைத் தேர்ந்தெடுக்கிறாள் எனக் கேட்டனுப்பினர்.

அம்மாவின் முகத்தில் இகலோகத் தொடர்பில்லாத இளநகை அரும்பியது. ''இந்த எலிகள் இருக்கே, அதுகள் பாவம், தங்களுக்குன்னு வளை தோண்டிக்கும். அப்புறம் என்ன நடக்கும் தெரியுமோ ? நாகப் பாம்பார் வந்து அந்த எலிகளைத் தின்னுட்டு, வளையிலே ஜம்முனு வாசம் பண்ணுவார்'' என்று பதில் சொல்லியனுப்பினாள்.

மத்தியஸ்தருக்கு இந்த வேதாந்தம் புரியவில்லை. அன்றாட உலகைக் கருத்தில் வைத்து அம்மா ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று சொல்லியனுப்பினார்.

''எனக்குன்னு எதுவும் வேண்டாம். நான் பிரஸன்னன் அகத்திலேயும் கேலே அகத்திலேயும் மாறி மாறி இருந்துக்கறேன்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள் அம்மா.

பிறகு சாரதாநந்தரிடம், ''ஷரத், நான் கல்கத்தாவுக்கு வரேண்டாப்பா'' என்றாள் அன்பு மயமாக.

சாரதாநந்தரின் உள்ளத்தில் ஆனந்த ஊற்றெடுத்தது. கல்கத்தாவில் ஷரத் கட்டியிருப்பதுதான் தனக்குச் சொந்த வீடு என்பதை அம்மா எப்படிச் சொல்லாமல் சொல்லிவிட்டாள் ?

1909-ம் ஆண்டு மே 23ந் தேதி சாரதா தேவி 'உத்போதன் சாலை' என்றே இப்போது பேர் பெற்றுவிட்ட — அந்த பாக்பஜார் வீதியில் சாரதாநந்தர் எழுப்பியிருந்த கட்டடத்தில் பொன்னடி வைத்தாள். அங்கும் சில அசௌகரியங்கள் இல்லாமலில்லை. ஆனால் சாரதாநந்தர் கூர்ந்த கவனத்துடன் அங்கு செய்திருந்த ஏற்பாடுகளைப் பார்த்து அம்மா அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள். ''குழந்தே ! உன்னை இருதயம் நிரம்பி ஆசீர்வதிக்கிறேன்'' என்றாள்.

சாரதாநந்தரை அம்மா 'சொற்படி' நடப்பவர் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அம்மா சொல்லுமுன்பே அவளுக்கான பணிவிடையைச் செய்துவிடுவார் அவர். அதோடு அம்மாவே சாரதாநந்தரின் சொற்படி நடப்பவளாக ஆகிவிட்டாள். எந்த விஷயமானாலும், ''ஷரத் எப்படிச் சொல்றானோ, அப்படிச் செய்யலாம்'' என்பாள்.

ஆனால் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எவருக்கும் ஏற்படக்கூடிய தலைக் கனம் சாரதாநந்தருக்கு இம்மியும் ஏற்பட்டது கிடையாது.

தம்மை யாராவது நமஸ்கரித்தால் கூட அதைச் சாரதாநந்தரால் தாங்க முடியாது. ''நீங்க அம்மாவோட பிரதம கிங்கரர் இல்லையா? அதுக்காக நமஸ்கரிக்கத்தான் வேணும்'' என்று யாரேனும் கூறினால், ''அந்த அம்மா உங்களுக்கும் அநுக்கிரகம் பண்ணுகிற அம்மாதானே ? அவளோட கடாக்ஷத்துக்குக் காத்திருந்து பிரார்த்தனை பண்ணுகிறவன்தான் நான். அவள் திருவுள்ளம் கொண்டால் இந்த க்ஷணத்திலேயே நான் இருக்கிற இடத்திலே உங்களை அமர்த்த முடியுமே?'' என்பார் சாரதாநந்தர்.

அம்மாவுக்குச் சின்னம்மை வார்த்தது. கடுங் கோடை காலம் வேறு. அம்மாவின் சூழலையும் உள்ளத்தையும் குளிர்விக்க சாரதாநந்தர் சகலமும் செய்தார். தினமும் சீதளா (மாரியம்மன்) கோயில் அர்ச்சகர் வந்து வேப்பிலை போட்டார். அம்மா கழுத்தைச் சுற்றிப் புடவைத் தலைப்பை முடிந்தபடி சம்பிரதாயப்படி அவரை நமஸ்கரிப்பாள்.

ஒரு பக்தர், ''அம்மா, நீங்க ரொம்ப எளிமையானவா என்பது உண்மை. ஆனாலும் குருமஹராஜ் பத்தினி என்கிறதுக்காகவாவது நீங்க இந்தப் பூஜாரிக்கு விழுந்து நமஸ்காரம் பண்ணாம இருக்கணும். இவர் படு சாமானிய ஆள்'' என்றார்.

''அது எப்படி வேணுமானாலும் இருக்கட்டும். அவர் அம்பாளைத் தொட்டுப் பூஜை பண்ணுகிற பிராமணர். அவாளை நமஸ்காரம் பண்றது சம்பிரதாயம். அவாவாளுடைய ஸ்தானத்துக்கான மரியாதையைத் தரத்தான் வேணும். குரு மஹராஜ் பழைய ஆசாரங்களை அழிக்கிறதுக்காக வரல்லைன்னு புரிஞ்சுக்கோ'' என்றாள் தேவி. (தொடரும்)

...இட்டால் இதமளிப்பு



டெட்டால் அரவணைப்பு

காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி
ஆற்றவும் துணை டெட்டால்.

பட்ட காயம் எதுவாயினும் இட்டுப் பயன்காணத்
தட்டாமல் உதவுவது டெட்டால். உங்கள் டாக்டரே
கூறுவார் : ஒழுங்குதவறுமல் காயத்தின்மீது
அடிக்கடி இட்டால், கிருமிகள் அணுகாமல்
காக்க உதவுவது டெட்டால் ... பரிபூரணமான
ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு அது.

குளி நீரிலே இட்டால் : புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.
க்ஷவரத்திற்கான நீரிலே : பாதுகாக்கிறது டெட்டால்.



புதுமைக் கோல டெட்டால் - பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு

லின்டாஸ்-DTL. 2 - 140 TM (A)

(ஸ்தாபிதம் : 1947)

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்", 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தந்தி : 'EVERMANS', போன் : 85834 • தபால்பெட்டி : 414

மதராஸ் சிட் பண்டு 1961 ஆக்ட்படி மேற்காணும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன (மதராஸ் ஆக்ட் நெ. 24 OF 1961)

நீண்டகாலச் சீட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTM	ரூ. 200/-	ரூ. 10,000/-
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகிய காலச் சீட்டுகள்

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-


சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள் : புது டில்லி – பம்பாய் – பெங்களூர் – கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

முப்பது வயதில் ஒரு பெண்!

அட்டைப் படக் கதை



வ.சா.நாகராஜன்

சாந்தாகுரூஸ் விமான நிலையம்.

நியூயார்க் செல்லும் விமானம் கிளம்பத் தயாராக இருக்கிறது. மாதவன் விமானத்தின் கடைசிப் படியில் ஏறி, வழியனுப்புவோர் இருக்குமிடத்தில் நின்று கொண்டிருந்த சங்கரனை நோக்கிக் கையை ஆட்டிவிட்டு உள்ளே போய்விட்டான். இறக்கைகளின் பேரிரைச்சல் ஆரம்பமாகி விட்டது.

வழியனுப்ப வந்திருந்தோர் அனைவரும் போயாகி விட்டது. சங்கரன் கண்ணாடிச் சுவரைப் பிடித்தபடியே நின்று கொண்டிருந்தார். ''போகலாமா?'' என்று அவர் கையை நாராயணி பிடித்து உலுக்கிய பின்னர்தான் அவர் திரும்பி நடந்தார்.

கார் செம்பூரை நோக்கிச் சென்றது.

பில்டிங் வாசலில் கார் நின்றது. இரண்டு மாடிக் கட்டிடத்தின் மேல் தளத்தில் இருந்த அவர்கள் ஃப்ளாட்டுக்குப் போகப் படி ஏறினார்கள்.

ஒரு வழியாக அவர்கள் மேலே ஏறிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்ததும் சோபாவில் போய்ச் சாய்ந்தார்.

''ஏதாவது வேணுமா? ராத்திரிகூடச் சரியாகச் சாப்பிடவில்லையே. போர்ன்விட்டா தரட்டுமா ?'' என்று கேட்டாள் நாராயணி.

ஒன்றும் வேண்டாம் என்று அவர் தலையசைத்தார்.

சங்கரன் புரண்டு புரண்டு படுத்தார். தூக்கம் எப்படி வரும்?

''ப்ளேன் இப்போது எவ்வளவு தூரம் போயிருக்கும்?''

சங்கரன் பெட்ரூம் லைட் வெளிச்சத்தில் கடிகாரத்தைப் பார்த்தார். ''மணி மூணு ஆகிறது. மணிக்கு முந்நூறு மைல். இப்போ அறுநூறு மைலுக்கு மேல் நடுக் கடல் மேலே போய்க் கொண்டிருக்கும். காலை ஏழு மணி சுமாருக்குத்தான் கீழே இறங்கும்.''

''நானும் எத்தனையோ பேரைப் பார்க்கிறேன். மாதவனோடு டாக்டர் படிச்ச அவன் சிநேகிதர்கள் அத்தனை பேரையும் தெரியும். அத்தனை பேருக்கும் தோணாத ஆசை. இப்படி அமெரிக்காவுக்குப் போய்க் குடியேறவேண்டும் என்று இவனுக்கு எப்படித் தோணித்து?''

''ஒரு தடவையா சொன்னேன்? 'அங்கே கிடைக்கிற வசதி, சௌகரியம் அத்தனையையும் இங்கே பண்ணித் தரேன். என்ன வேண்டும் உனக்கு? கார் இல்லையா ? வசதியான வீடு

இல்லையா? தனியாக டிஸ்பென்சரி வைக்கிறதற்குப் பணமில்லையா? இல்லே, நீ சம்பாதித்துத்தான் சாப்பிட வேண்டும் என்று இருக்கிறேமா?' என்று எத்தனை தடவை சொன்னேன்? இத்தனையையும் உதறி எறிந்து விட்டு இங்கே இல்லாத ஒன்றைத் தேடிக் கொண்டு போயிருக்கிறனே? அப்படி எதைத் தேடிக் கொண்டு போயிருக்கிறன் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்குப் புரியவே இல்லே.''

நேரம் மூன்று மணிக்கு மேல் ஆகியும் இருவரும் தூக்கம் வராமல் தவித்தார்கள். சங்கரன் எழுந்து உட்கார்ந்தார். நாராயணியிடம் கேட்டார். ''தூக்கம் வரவில்லையா உனக்கு?''

''உங்களுக்கு...?''

''எனக்குக் கண்களைக் கொட்டக்கூட முடியவில்லே. இப்படிக் கடைசிக் காலத்தில் நம்மை அநாதையாக விட்டு விட்டுப் போக மாதவனுக்கு எப்படி மனசு துணிந்தது என்று நினைச்சு நினைச்சுப் பார்க்கிறேன். தெரியல்லே ...இந்த உலகத்திலே எந்தக் காரியத்துக்கும் ஒரு காரணம் இல்லாமல் இராது. துரும்பு கீழே விழ வேண்டுமானாலும்கூடப் புவிசர்ப்பு இருந்தால்தான் முடியும். துரும்பின் அசைவுக்கே காரணம் வேண்டுமானால், மாதவன் அமெரிக்காவுக்குப் போகிறதற்கு — அதுவும் நம்மை இப்படி விட்டுவிட்டுப் போக — காரணம் இல்லாமல் இருக்குமா? காரணம் இப்போதுதான் எனக்குத் தெரிகிறது... அதனால் தான் இருக்குமோ...?''

குறைவாகத் தெரிந்த வெளிச்சத்தில் நாராயணி அவர் முகத்தைப் பார்த்தாள்.

''உனக்கு ராமாயணம் முழுதும் தெரியும் இல்லையா? ராமன் காட்டுக்குப் போய் விடுகிறன். தசரதன் சோகத்தில் நினைவிழக்கிறன். நினைவு மீண்டபோது கௌசலையிடம் ஒரு கதை சொல்லுகிறன், தெரியுமில்லையா? சின்ன வயசில் வேட்டையாடப் போனதும், யானை என்று நினைத்துக் கொண்டு ஒரு பையனை அம்பு விட்டுக் கொன்றதும், அந்தப் பையனைப் பெற்றவர்கள் தசரதனுக்குச் சாபம் கொடுத்ததும்... தசரதன் அம்பு விட்டுப் பையனைக் கொன்றன். நான்... நான்..''

நாராயணி இருட்டில் அந்த முகத்தைத் தேடினள்.

''இந்த முப்பது வருஷங்களாக ஒருவரிடமும் சொன்னதில்லே. இப்பொழுதுதான் முதன் முதலாக என் மனசைக் கீறிச் சொல்லுகிறேன்...''

முப்பது வருஷங்களுக்கு முன்னல் சங்கரன் இருபது வயதுப் பையன். திருச்சியில் அப்பா வக்கீல். ஒரே பிள்ளை. பி.ஏ. முடித்துக் கொண்டு வீட்டில் சும்மா இருந்தான். மேலே பி.எல். படிக்கும்படி அப்பா வற்புறுத்திக் கொண்டு வந்தார். முடியாது என்று மூர்க்கமாக மறுத்துக் கொண்டு வந்தான்.

அப்பாவுக்கு அந்த நாள் வக்கீலுக்குரிய ஜபர்தஸ்தெல்லாம் உண்டு. ஒற்றை மாட்டு வண்டி, குமாஸ்தா, சமையற்காரர்.

சமையற்காரர்... சமையற்காரர்... சமையற்காரர்...

வீட்டில் அம்மா, அப்பா, அவன் மூன்றே பேர்தாம். சமையற்காரர்கூட ஓர் அந்தஸ்துக்காகத்தான். வேலை அதிகம் இல்லாததால் அவர் அவ்வப்போது வெளியில் கல்யாண காண்ட்ராக்ட்டுக்குப் போய்விடுவார். அந்தச் சமயங்களில் அவர் மனைவியாவது அவர்களுடைய பெண் கஸ்தூரியாவது வந்து சமையல் செய்து வைத்துவிட்டுப் போவார்கள்.

கஸ்தூரி வருவாள். மாதத்துக்கு ஏழெட்டு நாட்கள் அவள் வர நேரிடும்.

அவளுக்கு அப்போது வயது பதினெட்டு, பத்தொன்பது.

சங்கரனுக்கு இருபது, இருபத்தொன்று.

வேலை ஏதுமில்லாமல், அப்பா சம்பாதிக்கும் பணத்தில் சோம்பேறி வாழ்க்கை நடத்திய நாட்கள். அஸ்திவாரமோ, சிந்தனையோ, தெளிவோ அழுத்தமோ இல்லாமல், நிமிஷத்துக்கு நிமிஷம் ஏதேதோ மன மாளிகைகளை எழுப்பிக் கனவு காணும் நாட்கள்.

இளமை முறுக்கில், பார்க்கும் பெண்கள் அனைவரிடமுமே ஏதாவது ஓர் அங்கத்தின் கவர்ச்சியை மாத்திரம் பிடித்துக்கொண்டு அந்த நூலேணியைப் பற்றிக் கொண்டே மேலே வெகுதூரம் ஏற நினைக்கும் நாட்கள்.

கஸ்தூரி சமையற்காரர் பெண் என்ற அந்தஸ்தை விடக் கொஞ்சம் அதிகமாகப் படிப்பும் உருவமும் கற்பனைகளும் உள்ளவள். சங்கரன் பார்த்த மற்றப் பெண்களிடம் இருந்த கவர்ச்சியைவிட அதிகமான கவர்ச்சியை அவளிடம் கண்டான்; தடுமாறினன். அறிவை விட உணர்ச்சியே அதிகமாக ஆட்சி செலுத்தியது. ''இந்த உலகமே எதிர்த்து வந்தாலும் உன்னைக் கைவிட மாட்டேன்'' என்று தனிமையில் சத்தியம் செய்து கொடுத்தான்.

அந்தச் சத்தியத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர்கள் போன வழி ஓர் எல்லைக்கு வந்தபோது அவர்கள் நிலைகுலைந்து போனார்கள்.

நிமிர்ந்து நிற்க வேண்டியவள் நிலைகுலைந்து போனதால், வெளியில் சொல்ல முடியாத பாவத்தை ஏற்ற கஸ்தூரி தனிமையில் அழுதாள். அதுவரை வாழ்க்கை என்பதே சிகரெட் புகை போல் அவ்வளவு மெல்லிதாய், அவ்வளவு சுலபமாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்த சங்கரனுக்கு, எதிர்ப்பட்ட பிரச்னை திடீரென்று மலைபோல் தோன்றியது. ஆனாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒரு நாள் அப்பாவிடம் விஷயத்தை ஆரம்பித்தான்.

பூகம்பம் வெடித்தது. அப்பா ராட்சதனானார். வக்கீல் மூளையின் வக்கிரங்கள் அனைத்தும் வெளிக் கிளம்பின. ''எங்கே அந்தச் சமையற்காரன்?'' என்று கர்ஜித்தார். சமையற்காரர் வந்து நின்றதும் ''என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் நீரும் உம் பெண்ணும்? இன்னும் நாலு நாட்கள் டைம். அதற்குள் ஊரை விட்டு ஓடிவிடுங்கள். வேண்டுமானால் இரண்டாயிரமோ, மூவாயிரமோ, ஏன், ஐயாயிரம் வேண்டுமானாலும் தருகிறேன். என் கண் முன்னே நிற்காமல் போய்விட வேண்டும்'' என்றார்.

சமையற்காரர், பாவம், இத்தகைய இக்கட்டுகளைச் சமாளிக்கத் தெரியாத அப்பாவி.

அவர் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். அவருடைய அப்பாவித்தனத்தைச் சங்கரனின் அப்பா மிக சாமர்த்தியமாக உபயோகித்துக் கொண்டார். நாலு நாட்களில் ஊரைவிட்டுப் போகாவிட்டால் ஏதாவது கிரிமினல் வழக்கில் மாட்டி உள்ளே தள்ளி விடுவதாகப் பயமுறுத்தினார்.

சங்கரன் கெஞ்சியும் பயமுறுத்தியும்கூட அவரை அசைக்க முடியவில்லை. அடுத்த ரயிலில் அவனை மூட்டை கட்டி, பம்பாயிலிருந்த உறவினர் வீட்டுக்கு அனுப்பி விட்டார். சமையல்காரரும் வக்கிலய்யா நீட்டிய பணத்தை அருவருப்புடன் பார்த்து விட்டுக் கை நீட்டி வாங்காமலே போய்விட்டார்.

பம்பாய்க்கு வந்த சங்கரன் ஒரு பெண் பிள்ளையைப் போல் கஸ்தூரியை நினைத்துக் கொண்டு அழுதான். ஆனால், நாள்பட நாள்பட, மரைன் டிரைவும் மலபார் ஹில்லும் இந்தியா கேட்டும் ஜுஹூ பீச்சும் மின்சார ரயில் கூட்டமும் கஸ்தூரியிடமிருந்து அவன் மனத்தை எங்கெங்கோ கொண்டு போய் மறைத்து விட்டன.

நாலைந்து வருஷங்கள் கழித்து அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாகியது.

கரூரில் கல்யாணம். திருச்சியிலிருந்து பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் அவர்கள் கிளம்புவதாக இருந்தார்கள். வீடு முழுவதும் உறவினர் கூட்டம்.

சங்கரன் சாப்பிட்டு விட்டு, நண்பர்கள் புடைசூழ வெளி வாசலுக்கு வந்தபோது தபால்காரர் கடிதக் கட்டுகளைக் கொடுத்து விட்டுப் போனார். மறுநாள் நடக்கவிருந்த கல்யாணத்துக்கு முதல் நாளே வந்த அட்வான்ஸ் வாழ்த்துக்கள். மற்றும், கல்யாணத்துக்கு வர முடியாத உறவினர்களின் மன்னிப்புக் கடிதங்கள். அவற்றுக்கிடையே ஒரு கவர்...சங்கரன் பெயருக்கு... அதுவரையில் அவன் பார்த்தறியாத கையெழுத்தில்..... உறையைப் பிரித்துக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான். ஐந்து வருஷங்களுக்குப் பின் முதன் முதலாகக் கஸ்தூரி எழுதிய கடிதம்.

''இப்போது நாங்கள் கோயமுத்தூரில் இருக்கிறோம். அப்பா ஒரு ஹோட்டலில் வேலை செய்கிறார். வயதாகி விட்டது. ரொம்பவும் முடியவில்லை. இங்கே நாங்கள் இருக்கும் வீட்டுக்கருகில் சின்னதாக ஹோட்டல் ஒன்று விலைக்கு வருகிறது. ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தால் பாத்திரம் பண்டம் உட்பட அது எங்களுடையதாகிவிடும். அதை வாங்கி, அம்மாவும் நானும் சமையல் அறை வேலைகளைப் பார்த்துக்கொண்டால், அப்பா அடுப்படி வேலையிலிருந்து விடுபட்டுக் கடைசிக் காலத்தைக் கொஞ்சம் நிம்மதியாகத் தள்ளலாம். அதனால் மனசைக் கல்லாக்கிக் கொண்டு கேட்கிறேன். ரூபாய் இரண்டாயிரம் அனுப்ப முடியுமா?... கஸ்தூரி.''

இன்ப உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சங்கரனின் மனத்தில் அந்தக் கடிதம் இடியாகத் தாக்கியது. கடிதத்தைப் படித்து முடித்ததும் அவனுக்குக் கஸ்தூரியின்மீது எல்லையில்லாத பச்சாதாபமும் இரக்கமுமாகப் பீறிட்டுக் கொண்டு வந்தது. கண்களில் கசியும் கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். அவனைச் சுற்றி நின்றுகொண்டு ஒவ்வொரு கடிதமாக வாங்கிப் படித்துக் கொண்டிருந்தவர்கள் அடுத்த கடிதத்துக்காகக் கையை நீட்டிக் கொண்டிருந்தார்கள். ''இது எனக்கு வந்த கடிதம்'' என்று சொல்லி அதை மடித்துப் பையில் வைத்துக் கொண்டான். ''யார் கடிதாகடா அது?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து அப்பா வருவதைப் பார்த்ததும் மற்றக் கடிதக் கட்டைக் கொடுத்துவிட்டு அவசரம் அவசரமாகப் பின்பக்கம் போனான். குளியல் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டான். கடிதத்தை இரண்டாவது தடவை படிக்கக்கூட இல்லை. நாலாகக் கிழித்தான்; விட்டெறிந்தான். விட்டெறிந்த அடுத்த கணம் தோன்றியது, 'அடடா, விலாசத்தை மறுபடியும் ஒரு தடவை படித்து நினைவு வைத்துக் கொள்ளாமல் போய்விட்டோமே' என்று.

மாப்பிள்ளை அழைப்பில் கதாநாயகனாகி, மறுநாள் கல்யாணம் முடிந்து ஊருக்குத் திரும்பும்வரை அவன் மற்றவர்கள் சொல்கிறபடி ஆடிக்கொண்டேயிருக்கும்படி இருந்தது. அந்த நிலையிலும் இடையிடையே கஸ்தூரியின் கடிதமும் அதற்கு அவன் எவ்வளவு ஆவலுடன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் என்ற நினைவும் எழுந்து மனம் துடித்தது. கூடவே, 'அடடா, கல்யாணம் எல்லாம் முடிந்த பிறகு பணம் அனுப்பலாம் என்றால் அதுகூட முடியாமல் கடிதத்தைக் கிழித்து விட்டேனே! அவளை இப்படிக் கைவிட்டு விடும்படியாகி விட்டதே' என்று எண்ணி எண்ணித் தவித்தான். அந்த மனநிலை அவனுடைய திருமண நிகழ்ச்சிகளின் உற்சாகத்தைப் பெரிதும் பாதித்தது.

மீண்டும் பம்பாய்க்கு வந்ததும், புது மனைவியுடன் இன்ப வாழ்க்கை, படிப்படியாக உயர்ந்த அந்தஸ்து, ஆகியவற்றில் மூழ்கி, கஸ்தூரியின் கடிதத்தைப் பற்றி மறந்தே போனான்....

முப்பது வருஷங்கள் ஓடிவிட்டன.

இப்போது, ஒரே பிள்ளையாக அருமை பெருமையாக வளர்ந்த மாதவன், கடைசிக் காலத்தில் தம்மை நிர்க்கதியாகத் தவிக்க விட்டு விட்டுப் போன பின்னர், 'இந்த நிகழ்ச்சி இயற்கையாக நேர்ந்த நிகழ்ச்சி அல்ல, ஒரு பெண்ணின் சாபமே கடைசிக் காலத்தில் தம்மை அநாதையாக்கிவிட்டது' என்ற



திருவனந்தபுரம் சாலை வரி செலுத்தப்படாத வரை இரண்டு மாதத்துக்கு மோட்டார் வரி கட்டுவது இல்லை என்று அங்குள்ள கார் சொந்தக்காரர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். 'பாலி'

நினைவு சங்கரன் மனத்தில் வளர்ந்துகொண்டே யிருந்தது.

இத்தனை வருஷங்களாக உள்ளத்தின் அடி ஆழத்தில் மூடி வைத்திருந்த உணர்ச்சிகளை அவர் வெள்ளமாக வெளிப்படுத்தியபோது, அந்த வேகத்தில் நாராயணியும் மூழ்கிச் சற்று நேரம் பேச்சற்றுப் போனாள். பிறகு கேட்டாள்: ''ஆமாம், அவளுக்கு என்ன குழந்தை பிறந்தது? ஆணா, பெண்ணா?''

'தெரியாது' என்று தலையை ஆட்டினார் அவர்.

''முதலில் கொஞ்ச நாட்கள் பார்க்கத் தைரியம் இல்லாமல் இருந்திருக்கலாம். சரி! பிறகாவது போய் அவளைப் பார்த்திருக்க வேண்டாமோ?''

''எண்ணம் இல்லாமல் இருக்குமா? எங்கே என்று தேடுவது? விலாசம்கூடத் தெரியாமல் 'கோயமுத்தூர்' என்ற ஊர்ப் பெயரை மாத்திரம் வைத்துக் கொண்டு யாரைப் போய்க் கேட்பது?''

நாராயணி பெருமூச்சு விட்டாள்.

மறுநாள் காலை காப்பி சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருந்தபோது நாராயணி சொன்னாள்: ''நீங்கள் அவளைப் பற்றிச் சொன்னதி லிருந்து என் மனசு ரொம்பவும் வேதனையாக இருக்கிறது. மாதவன் நினைவுகூடக் கொஞ்சம் மங்கிப் போய்விட்டது. இப்படி அநியாய மாக ஒரு பெண்ணைக் கண்ணீரும் கம்பலையு மாக வாழ்க்கை முழுதும் விட்டதனாலேதான் நாம் இன்றைக்கு இப்படிப் பிள்ளை இருந்தும் இல்லாதவர்களாகி விட்டோம். எனக்குத் தோணுகிறது. ஒரு தடவை கோயமுத்தூர் போய் அவளைப் பார்த்தால் என்ன?''

''எப்படிப் பார்ப்பது? முப்பது வருஷங்கள் கழித்து எங்கே இருப்பாள் என்று தேடுவது? அப்படியே தேடிக் கண்டுபிடிச்சாலும் எந்த முகத்துடன் அவளைப் பார்த்து என்ன சொல்வது?''

''அதையெல்லாம் பிறகு யோசித்துக் கொள்வோம். எனக்குத் தோன்றுகிறது. கோயமுத்தூருக்குப் போய் விசாரித்துப் பார்த்தால் அவர்களிருக்குமிடம் தெரியும் என்று.''

''பார்த்து என்ன சொல்வது? அதனால் என்ன பிரயோசனம்?''

''அவளைப் பற்றி அவ்வளவு சொன்னீர்கள். பிறந்த குழந்தை... ஒருவேளை அது ஆண் பிள்ளையாக இருந்தால்...? அவன் இப்போது முப்பது வயதுப் பையனாக, மாதவனைவிடப் பெரியவனாக இருப்பான். மாதவன்தான் பிறந்த கடனைப் பற்றி நினைக்கவில்லை. நீங் களாவது பெற்ற கடனைப் பற்றி முப்பது வருஷங்கள் கழித்தாவது நினைச்சுப் பார்த்து ஏதாவது செய்ய வேண்டாமா?''

சங்கரன் குழம்பிப் போய் நின்றார்.

கோயமுத்தூர். முன் பின் பார்த்தறி யாத அந்த ஊரில் வந்திறங்கிய சங்கரன், ஹோட்டல் ஒன்றில் தங்கினார்.

இரண்டு நாட்கள் பலவிதமாக யோசனை செய்த பிறகு ஒரு முடிவுக்கு வந்தார். அதன் படி அந்த ஹோட்டலில் பல வருஷங்களாக இருக்கும் வயதான சமையற்காரரைத் தனி யாக அழைத்து, நூறு ரூபாயை அவர் கையில் வைத்து, ''முப்பது வருஷங்களுக்கு முன்னால் சுந்தரம் என்ற பெயரில் இந்த ஊர் ஓட்டல் ஒன்றில் சமையற்காரராக இருந்தவரைப் பற்றி விவரம் தெரிய வேண்டும். அவருக்கு மனைவியும் ஒரே ஒரு பெண்ணும் மாத்திரம் தான் உண்டு. அவர்களிலே யாராவது இப் போது இந்த ஊரிலோ வேறே ஊரிலோ இருக்கிறார்களா என்று கண்டுபிடியுங்கள்'' என்றார்.

அந்தச் சமையற்காரர் ஒரு ஹோட்டல் விடாமல், தொழில் முறை நண்பர்களிடம் அலசினார். ஒரு வாரம் கழித்து வயதான ஒரு பாட்டியை அழைத்துக் கொண்டு சங்கரன் முன் வந்தார்.

கிழவி சொன்னாள்: ''சுந்தரத்தையும் அந்த மாமியையும் எனக்கு நன்னாத் தெரியும். அந்த நாளிலே பகவதி விலாசிலே அந்த மனு ஷர் சமையல் வேலையிலே இருந்தார். அந்த மாமியும் நானும் ஒண்ணா மாவரைச்சோம்.''

சங்கரன் நெஞ்சைத் தடவி விட்டுக்கொண் டார்.

''அவர்கள் பெண் — அவள் பெயர் என்ன, —என்னமோ, ஆமாம், கஸ்தூரி. அவர்கள் இங்கு வந்த நாலைஞ்சு மாசத்துக்கப்புறம் நான் மெட்ராசிலே என் தங்கை வீட்டுக்குப் போனேன். சுந்தரத்தின் பெண் கஸ்தூரி, சென்னையில், வேலை பார்க்கிற பெண் களுக்குன்னு ஹாஸ்டல் இருக்காமே, அதிலே சமையல் காரியம் பார்க்கிறான்னு யாரோ சொன்னா. நீங்க யாரு? எதுக்காகக் கேட்கிறேள்?''

கயநிலைக்கு மீண்ட சங்கரன் சொன்னார்: ''அந்த சுந்தரம் சின்ன வயசிலே எனக்கு உப காரம் பண்ணி யிருக்கார். என்னமோ இப்போதான், ரொம்ப வருஷங்கள் கழித்து இந்தப் பக்கம் வந்தேன். முடிந்தால் அவர் களைப் பார்க்கலாம் என்றுதான்'' என்று சொல்லிப் பாட்டியிடம் நூறு ரூபாய் நோட்டு கொடுத்தார்.

சென்னை.

சங்கரன் தங்குமிடத்தை அடைந்ததும், டெலிபோன் டைரக்டரியில், 'வேலை பார்க் கும் பெண்களுக்கான ஹாஸ்டலை'த் தேடினார். இதே மாதிரி பெண்கள் தங்கும் மற்ற ஹாஸ் டல்களின் விலாசங்களை அங்கே விசாரித்து அறிந்து கொண்டார். திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், மயிலாப்பூர்...

ஒவ்வொன்றாகப் பார்த்து விட்டுத் தியாக ராயநகரில் இருந்த ஹாஸ்டலுக்கு அவர் வந்தபோது ஒரு நாள் காலை பதினொரு மணி.


சுற்றுச் சுவரையும் தோட்டப் பகுதியையும் தாண்டி உள்ளே போனார். வராந்தாவுக்கு எதிரில் இருந்த அறையில் ஓர் அம்மாள் மேஜையடியில் உட்கார்ந்து எழுதிக்கொண் டிருந்தாள். கஸ்தூரியின் பெயரைச் சொல்லி விசாரித்ததும் ''நீங்கள் யார், எதற்காகப் பார்க்க வேண்டும்?'' என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, ''இப்படி உட்காருங்கள். அவள் வேலையாக இருக்கிறாள். முடிந்தவுடன் வருவாள். சொல்லி யனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே போனாள்.

ராக்:.போர்ட் பொருளாதார அமைப்பை வலுப்படுத்துகிறது



நமது கிராமங்களில் பொருளாதாரப் புரட்சி நிகழ்ந்துவருகிறது. நீர்ப்பாசன அமைப்புக்களின் பயனாக மேலும் செழுமையான பயிர்கள் காட்டுப்புறங்கள் முழுவதிலும் புதுச் செல்வத்தைப் பரப்பிவருகின்றன. மண் குடிசைகள் இருந்த இடங்களில் செங்கல் கட்டடங்கள் தோன்றிவருகின்றன. நமது விவசாயச் செல்வத்தைப் பத்திரமாகப் போற்றிக்காக்க அங்கங்கே கிடங்குகள் தோன்றிவருகின்றன.

இந்த முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு அடியிலும், பொருளாதாரத்திற்குத் திண்மையையும், வலுவையும் தந்து, புரட்சிக்குப் புத்தூக்கம் அளிக்கிறது ராக்:.போர்ட்.





ராக்:.போர்ட்

டால்மியா சிமெண்ட்







டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.,
பதிவுபெற்ற அலுவலகம் மற்றும் ஆலைகள்:
டால்மியாபுரம், தமிழ் நாடு.
தலைமை அலுவலகம்: சிந்தியா ஹவுஸ், புது டெல்லி-1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிட்.,
டால்மியாபுரம், தமிழ் நாடு.

பலவித உபயோகங்களுள்ள மின்விசிறி

நீங்கள் இந்த கச்சிதமான ஓரியண்ட் ஆல் பர்ப்பஸ் மின்விசிறியை மேஜை மீதும், சுவரில் அல்லது மேற்கூரையிலும், எக்ஸ்ஹாஸ்ட் அல்லது ஏர்-ஸர்குலேட்டராகக்கூட உபயோகிக்க முடியும். இந்தியாவின் நீண்ட அனுபவமிக்க மின்விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் ஓரியண்ட் ஆல் பர்ப்பஸ் மின்விசிறி, பத்து ஆண்டுகளுக்கு மேலாக மார்க்கெட்டில் பூர்ண ஆதிக்கம் செலுத்தி உங்களுக்கு பல வருடங்களுக்கு ஓசையற்ற அடக்கமான உழைப்பைத் தருகிறது.

ஓரியண்ட்-இன்றைய மின்விசிறிகளில் மிகநம்பிக்கை வாய்ந்த பெயர்.





ஆல் பர்ப்பஸ் விசிறிகள்

விசேஷ சிறப்புகள்:

- ஓசையற்ற ஓட்டத்துக்காக மிகச்சீராக அமைக்கப்பட்டுள்ள இறக்கை தொகுப்பு.
- நிதானமான ஓட்டத்துக்கான 'ரெஸிலியண்ட் மவுண்டட்-மோட்டார்'
- சுலபமான எண்ணெயிடும் ஏற்பாடு.
- பராமரிப்பது எளிது, சீராக்குவது அதனினும் எளிது.

இரண்டு வருடங்களுக்கு உத்தரவாதம்

ஓரியண்ட்
விசிறி

உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுபவை

ஓரியண்ட் விசிறி

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கல்கத்தா-54

CC/O-1/3/72

தொழிற்சாலைகள்: கல்கத்தா, பரிதாபாத்

சிறிது நேரம் சென்ற பிறகு உள்ளேயிருந்து அவள் ஈரக் கைகளைப் புடவைத் தலைப்பில் துடைத்தபடியே சங்கரன் உட்கார்ந்திருந்த அறைக்கு வந்தாள்.

முப்பது வருஷங்களுக்கு முன்னர் தம்மை மறந்த விபரீதத்தில் ஈடுபட வைத்த அந்தக் கஸ்தூரியை இப்போது பார்க்கும்போது இதயத்தில் ஏற்படும் பெரும் வலியைத் தாங்க முடியாமல் அவர் தவித்தார். இப்போது அவள் முகத்திலே, தோற்றத்திலே, பழைய கஸ்தூரிதான் என்பதற்கான அடையாளம் இல்லை. ஆனாலும் அந்த ஒளியிழந்துபோன கண்களில், ஒட்டிய கன்னங்களில் நெருங்கிப் பார்த்துப் பழகிய ஜாடை கொஞ்சம் இருக்கத்தான் இருந்தது.

சங்கரனை ஒரு தடவை பார்த்தாள் அவள். அவளுக்கு அவரைக் கொஞ்சம் கூட அடையாளம் தெரியவில்லை. அந்தப் பிரக்ஞையே அவளுக்கு இல்லை. "நான்தான் கஸ்தூரி. உங்களுக்கு என்ன வேணும்? அப்பளமா, கருவடாமா? கருவடாம்னு ஸ்டாக் இல்லை. அப்பளாம் மாத்திரம்தான் இருக்கு..."

"என்னைத் தெரியவில்லையா கஸ்தூரி...?"

சில நிமிஷ நேர மௌனம். புதிர்ப் பார்வை.

"பம்பாயிலிருந்து இந்தப் பக்கம் வந்தேன். நீ எங்கே இருக்கிறாய் என்று விசாரித்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. எப்படியோ விசாரித்துக் கொண்டு வந்துவிட்டேன்..."

அவர் அப்பளத்துக்காக வரவில்லை என்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. திடீரென்று அவள் உள் மனத்தில் முப்பது வருஷ வாழ்க்கையின் கஷ்டங்கள் பீறிட்டெழுந்தன. அந்த உணர்ச்சிகள் மனத்தில் பொங்கிய வேகத்தில் அப்படியே வார்த்தைகள் வெளி வந்தன. "முப்பது வருஷங்கள் கழிச்சு இப்போ வந்து பார்த்து என்ன ஆகணும்? இத்தனை வருஷங்காக இல்லாத அவசரம் இப்போ என்ன?"

பளீர் என்று அவள் கேட்ட வேகத்தைக் கண்டு சங்கரனுக்கு மறுபடியும் அதிர்ச்சியின் துடிப்பு அதிகமாக ஆரம்பித்தது.

"அப்பா, அம்மா எல்லாரும்..."

"எல்லாரும் போயாச்சு. மனிதர்களைக் கல்லால் படைக்கவில்லையே பகவான்?"

"ஆமாம்... கல்லால் படைக்கவில்லை. ஆனால் சில சமயம் மனம் மாத்திரம்தான் கல்லாய்ப் போய்விடுகிறது. உன்னைப் பார்த்ததும் ஏதேதோ கேட்க வேண்டும் என்று யோசித்து வைத்திருந்தேன். எல்லாம் மறந்தே போய்விட்டது."

அவள் எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தாள். அவரும் மேலே என்ன சொல்வது என்று புரியாமல் இருந்தார்.


"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? என்ன செய்கிறார்கள்?"

"ஒரே பிள்ளைதான். அவனும் கடைசிக் காலத்தில் என்னைத் தவிக்க விட்டு விட்டு அமெரிக்காவைப் பார்க்கப்போய்விட்டான்."

கஸ்தூரி பதில் ஏதும் சொல்லாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேர

இந்திரா காந்தி
சில சமயங்களில்
புடவைத்
தலைப்பைக்
குஜராத்தி
ஸ்டைலில்
பின்புறமிருந்து
முன்புறமாக
அணிந்து
கொள்கிறாராம்!

- ஹிந்துஸ்தான்
டைம்ஸ்- 'பாலி'



மௌனத்துக்குப் பிறகு சங்கரனே ஆரம்பித்தார்: "முக்கியமாக இப்போது நான் உன்னைப் பார்க்க வந்தது எதற்காகவென்றால் ....அந்தக் குழந்தை... கஸ்தூரி... முப்பது வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் உன்னிடம் வந்து கேட்கிறேன்... இத்தனை வருஷங்களாக உன்னையும் குழந்தையையும் நினைத்துப் பார்த்திருக்கவே மாட்டேன் என்று நினைக்கிறாயா?... உம்... அதையெல்லாம் வாயால் சொல்லி விளக்க முடியுமா? எத்தனையோ ராத்திரி ஒருவரிடமும் வாய் விட்டுச் சொல்ல முடியாமல், தூங்காமல் தவித்திருக்கிறேன்."

"ஐயோ பாவம்! ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள்!"

சவுக்கடி மாதிரி வார்த்தைகள் வந்து விழுந்தபோது சங்கரன் திகைத்துப் போனார்.

கஸ்தூரி ஓர் அப்பாவியாக இருப்பாள்; தன்னைக் கண்டதும் ஏழைமையினாலும், தாழ்வுணர்ச்சியாலும் அழுது கண்ணீர் விடுவாள்; அவளைச் சமாதானப்படுத்துவது கூடச் சங்கடமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டு வந்த சங்கரனுக்குக் கஸ்தூரி திகைப்பூட்டினாள். அவள் மீது திடீரென்று எழுந்த அக்கறையை விளக்கிச் சொல்ல முடியாமல் அவர் தடுமாறினார்.

"என் மனசைத் துன்புறுத்த வேண்டும் என்றே நீ பேசுவது புரிகிறது. இத்தனை வருஷங்கள் கழித்து வந்து நான் விசாரிப்பதில் உள்ள சங்கடமும் புரிகிறது. உனக்கு என் வேதனை தெரியாது. அதை என்னால் சொல்லி விளக்கவும் முடியாது. ஒன்றே ஒன்று மாத்திரம் சொல்கிறேன். இனிமேல் நீ இங்கே இப்

படி வேலையில் இருக்க வேண்டாம். வேண்டும் என்கிற அளவு பணம் தரேன்...''

''பணமா...?'' சிரித்தாள் கஸ்தூரி. ''ஒரு காலத்தில் எனக்கு இரண்டாயிரம் ரூபாய் வேண்டியிருந்தது. அதுகூட எனக்காக இல்லை. அப்பா எங்கேயோ எரிகிற அடுப்படியிலே வேகிறாரே என்ற வேதனையினாலே கடைசிக் காலத்திலேயாவது அவரைக் கொஞ்சம் நிம்மதியாக வாழ வைக்கலாமே என்று பைத்தியக்காரத்தனமாக நினைத்தேன். என் மானம், மரியாதை, அத்தனையையும் உதறி விட்டு வெட்கமில்லாமல் உங்களுக்கு ஒரு கடிதாக எழுதினேன். அதற்கு இன்னமும் உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.'' துக்கம் தொண்டையை அடைக்கத் தலைப்புத் துணியால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''அந்தக் கடிதாக வந்தது... வந்தது... ஆனால்... அது வந்த நேரம்... நேரம்... என்னை மன்னித்துக்கொள் கஸ்தூரி. எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாத சோதனையை உனக்குக் கொடுத்தேன். செய்ய முடிந்த சிறு உதவியைக்கூடச் செய்யவில்லை. என் மனசை எப்படித் திறந்து சொல்வது என்றே புரியவில்லை. பழைய கதையெல்லாம் அப்புறம் இருக்கட்டும். அந்தக் குழந்தை...''

கஸ்தூரியின் குரலில் இப்போது அமைதியும் ஓர் நிச்சயமான உறுதியும் பிரதிபலித்தது. ''மறுபடியும் மறுபடியும் அந்தக் குழந்தை என்ன ஆச்சு என்று கேட்டுக் கொண்டிருப்பதிலே பிரயோசனமில்லை. கல்யாணமாகி முதல் பத்து வருஷங்கள் எல்லாத்தையும் மறந்து புதுவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். அதற்குப் பிறகாவது, மனச்சாட்சி உறுத்தி, உங்களுக்கு அக்கறை இருந்து, இப்போது முப்பது வருஷத்துக்குப்பிறகு என்னைத் தேடிக் கண்டுபிடித்தீர்களே, அந்தமாதிரி கண்டு பிடிச்சிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன் ... முப்பது வருஷங்களுக்குப் பிறகு நான் இப்போது நிம்மதியாக, சந்தோஷமாக இருக்கேன். இனிமேலும் இப்படியே இருக்க விட்டு விடுங்கள். இந்த இடத்திலே நூறு பெண்களுக்கு மேல் இருக்கிறார்கள். எல்லாரும் வயசுப் பெண்கள். எல்லாரும் வேலை பார்க்கிறார்கள். சாப்பாட்டுக்கோ, துணிக்கோ என்னைப் போல அப்பா அம்மாவை நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் இல்லை. இவர்களுடனேயே கடைசிவரை என் வாழ்க்கையைக் கழிச்சுடப் போகிறேன்.''

வக்கிரமாகிப் போய்விட்ட வாழ்க்கையில், சோகத்தின் எல்லைகளைக் கண்டுவிட்ட அவள் மன நிலையை அவர் புரிந்து கொண்டார். குழந்தையைப் பற்றி ஆரம்பிக்கும்போதெல்லாம் அவள் பேச்சை உடனே வேறு எங்கோ கொண்டு போய் விடுவதைக் கவனித்தார். இவளிடமிருந்து இவள் வாய்மொழியாகக் குழந்தையைப் பற்றித் தெரிந்து கொள்வது முடியாத காரியம் என்று புரிந்தது.

மறு நாள் காலை. அவருக்குத் தங்குமிடத்தில் இருப்புக் கொள்ளவில்லை. கிளம்பி ஹாஸ்டல் வாசலுக்குப் போய் நின்றார்.

முதல் நாள் அவரை விசாரித்த அம்மாள் முன் அறையில் உட்கார்ந்திருந்தாள். கஸ்தூரியின் பெயரைச் சொன்னதும் அவள் சொன்னாள்: ''சமையல் அறையில் இருக்கிறாள். இப்போது அவளால் வெளியே வர முடியாது. ஆபீசுக்குப் போக வேண்டியவர்களுக்குச் சாப்பாடு போட்டு வேலைக்கு அனுப்பிய பிறகு தான் வர முடியும்.''

'' எனக்கு அவசரமில்லை. பிறகு வருகிறேன்'' என்று திரும்பினார். பிறகு நினைத்துக் கொண்டு, ''கஸ்தூரிக்கு உறவு முறையில் யாராவது இங்கே வந்து அவளைப் பார்ப்பதுண்டோ ?'' என்று தயக்கத்துடன் கேட்டார்.

''ஏன், எதற்காகக் கேட்கிறீர்கள்?''

''என் சின்ன வயசில் கஸ்தூரியின் அப்பா எனக்கு உதவி செய்திருக்கிறார். அதை நினைத்துக் கொண்டு, அதற்குப் பிரதியாக இப்போது இவளுக்கு ஏதாவது பண உதவி செய்கிறேன் என்று சொன்னேன். எதுவும் வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்கிறாள். ஒரு வேளை உறவினர்கள் யாராவது இருப்பது தெரிந்தால் அவர்களுக்காவது முடிந்ததைச் செய்யலாம் என்று பார்க்கிறேன்......''

''கஸ்தூரிக்கு உறவிலே யாரும் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவை இவளுக்கு உள்ள கொஞ்ச சம்பளத்திலிருந்து சேலத்திலுள்ள அநாதை ஆசிரமத்துக்குப் பணம் அனுப்புவாள். நீங்கள் ஏதாவது செய்வதாக இருந்தால், ஒரு வேளை அந்த ஆசிரமத்துக்குச் செய்வது அவளுக்குத் திருப்தியாக இருக்கலாம். எதற்கும் அவளையும் கேட்டுக் கொண்டு செய்யுங்கள்.....''

''சரி, செய்கிறேன். அந்த ஆசிரமத்தின் பெயர்....?''

அவள் சொன்னாள்.

சங்கரன் வெளியே வந்தார். கஸ்தூரி இப்போது வெளியே வரமாட்டாள். வந்தாலும் நேற்று சொல்லாததைப் புதிதாக என்ன சொல்லப் போகிறாள்?


அநாதை ஆசிரமம்....? குழந்தை அங்கே வசித்திருக்குமோ ....?

சேலம்.

அநாதை ஆசிரமத்தின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது சிரமமாக இல்லை.

தலைவியைச் சந்தித்து, தாம் கஸ்தூரிக்கு உறவினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு கஸ்தூரியின் குழந்தை சின்ன வயசில் இந்த ஹாஸ்டலில் இருந்ததால் ஆசிரமத்துக்கு நன்கொடை அளிக்க வந்திருப்பதாகச் சொன்னார். அவர் அளித்த நன்கொடையை நன்றியுடன் பெற்றுக் கொண்ட ஆசிரமத் தலைவியிடம் அவர் பேச்சின் நடுவே, ''கஸ்தூரியின் அந்தக் குழந்தை இப்போது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டு வைத்தார்.

''பானுவா? பத்து வயது வரை இங்கே தான் வளர்ந்தது. பிறகு கஸ்தூரி அவளையும் மெட்ராசுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டாள். கல்யாணம்கூட ஆகிவிட்டதே. உங்களுக்குத் தெரியாதா ?''


போஸ்டர் கலர்கள் வாட்டர் ப்ரூப் டிராயிங் இங்க மற்றும் இன்ஸ்ட்ரு-மென்ட் பாக்ஸ்.
camel
camel
camlin
வாட்டர் கலர் டியூபுகள், கட்டிகள்.
camel
கலைஞர்களின் ஆயில் கலர்கள், மாணவர்களின் ஆயில் கலர்கள்
உங்கள் வாழ்க்கைக்கு வண்ணப் பொலிவைக் கூட்டுங்கள்...
கேமல்
ஆர்ட் கலர்களை உபயோகியுங்கள்
கேம்லின் பிரைவேட் லிட்.
ஆர்ட் மெடீரியல் டிவிஷன்
(கலைப் பொருள்கள் பிரிவு)
ஜே.பி. நகர், பம்பாய்-59.
ஏ.எஸ். இந்தியா.
PRATIBHA 1711-29 Tam

பாரதிக்கு முதல் மரியாதை !

தலைநகர் டெலிவிஷனில் முதன்முதலாக ஒரு தமிழ் நாடகம்! அதன் ஆசிரியர் யார் தெரியுமா? மகாகவி பாரதியார்.



நாடகத்தின் பெயர்: 'பாஞ்சாலி சபதம்'. சென்னை சேவா ஸ்டேஜ் குழுவினர்தான் இதில் நடித்தார்கள்.

எஸ். வி. சஹஸ்ர நாமம் கூறக் கேட்டவர் :

- ஏ. சுவாமிநாதன்

இவ்வளவு சுலபமாகக் குழந்தையின் பெயரும் கல்யாணம் ஆன விவரமும் தெரியும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. ஒரு சான்ஸ் பார்க்கலாமே என்று வந்த இடத்தில் வேலையின் ஆரம்ப கட்டம் முடிந்தது. பானு இப்போது எங்கே இருக்கிறாள்? யாரைக் கேட்பது? ஆசிரமத் தலைவிக்குத் தெரியாது. மீண்டும் கஸ்தூரியிடமே போனால் அவள் சொல்வாளா....?

அதைத் தவிர வேறு வழி இல்லை.

மீண்டும் ஒரு நாள் காலை பதினொரு மணிக்கு மேல், கஸ்தூரிக்கு வேலை இல்லாத நேரத்தில் ஹாஸ்டலுக்கு வந்து முன் அறையில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் கஸ்தூரி உள்ளேயிருந்து வந்தாள். வரும்போதே புன்னகையுடன் வந்தாள். முதல் தடவை பார்த்தபோது ஏற்பட்ட அதிர்ச்சி இல்லாமல், அவரைப் பார்ப்பதில் உள்ள திருப்தி வெளிப்படையாகத் தெரிய வந்தாள்.

''கஸ்தூரி, சேலத்துக்குப் போனேன். நீ குழந்தையைப் பற்றிப் பேச முடியாது என்று திர்த்தாட்சண்யமாகச் சொன்னாலும் என் மனம் கேட்கவில்லை; விசாரிக்கத்தான் செய்தேன். பிறந்தது பெண் குழந்தை. பானு என்று பெயர், பத்து வயது வரை அங்கே இருந்தது. கல்யாணமாகிப் பத்து வருஷங்களாகிறது — என்கிறவரைதான் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. அவள் இப்போது எந்த ஊரில் இருக்கிறாள் என்ற விவரம் அவர்களுக்குத் தெரியவில்லை. கஸ்தூரி, பானு இப்போது எந்த ஊரில் இருக்கிறாள் என்று சொல்ல மாட்டாயா?''

''அவளைப் போய்ப் பார்த்து என்ன பண்ண வேண்டும் என்கிறீர்கள்? 'நான்தான் இவள் அப்பா. இவள் அம்மாவைச் சீரழித்து நடுத் தெருவில் நிறுத்தினவன்' என்று அவள் வீட்டுக்காரர்கள் முன்னிலையில் பிரகடனப் படுத்த ஆசைப்படுகிறீர்களா....?''

அவள் சொல்வதில் உள்ள நியாயத்தை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''கொஞ்சம்கூட மனம் இரங்க மாட்டாயா, கஸ்தூரி? உனக்கு உறுதியாகச் சொல்கிறேன். அவளிடம் போய் 'நான்தான் உன் அப்பா' என்று நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள மாட்டேன். அவர்களில் யாருக்குமே அந்தச் சந்தேகத்தின் நிழல்கூடத் தெரியும் படி நடந்து கொள்ள மாட்டேன்.... நேரில் பார்த்து — நேரில் இல்லை, எட்டி நின்று பார்த்து, ஒரு சொட்டுக் கண்ணீர்....''

''ஒரு சொட்டுக் கண்ணீரா...? நான் எத்தனை குடம் குடமாகக் கண்ணீர் விட்டிருக்கிறேன், தெரியுமா உங்களுக்கு? அதை நினைத்துக் கொண்டால் உங்களுடைய இந்த ஒரு சொட்டுக் கண்ணீர் எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அந்த நாட்களில், நீங்கள் எனக்காக வராவிட்டாலும் குழந்தைக்காகவாவது வருவீர்கள் என்று எத்தனை நாட்கள், எத்தனை இரவுகள்.... ஐயோ....! எத்தனை எத்தனை யுகங்கள் காத்துக் கொண்டிருந்திருப்பேன், தெரியுமா? தெரு வாசலில் வண்டிச் சத்தம் கேட்டால், எங்கோ போகும் கார்ச் சத்தம் கேட்டால், — எத்தனை நூறுயிரம் தடவை நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்திருப்பேன், தெரியுமா? குழந்தையிடம் எத்தனை ஆயிரம் தடவை உங்கள் கதையைச் சொல்லி, நீங்கள் என்னென்ன வாங்கிக் கொண்டு வருவீர்கள் என்று சொல்லி, — பாவம், அந்தப் பிஞ்சு மனத்தில் எத்தனை ஆசைகளைத் தூண்டியிருப்பேன் தெரியுமா? அத்தனை கனவுகளும், ஆசைகளும் எரிந்துபோய், மண்ணாய்க் குப்பையாய்ப் போயிற்று! என்றால் அதையெல்லாம் மறக்க முடியவில்லை. இப்போது அவள் முப்பது வயதில் குழந்தையும் குடும்பமுமாக இருக்கும்போது பெருமை கொண்டாட வருகிறீர்கள். நீங்கள் அவளைப் பாராமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது...''

சங்கரன் தலை குனிந்து நின்றார்.

பம்பாய் ரயில்.

இரவு மணி இரண்டு. இருளைக் கிழித்துக் கொண்டு வெகு நேரம் நிற்காமல் ரயில் போய்க் கொண்டிருந்தது. தனிப் பெட்டியில் இருந்த சங்கரன் உட்கார்ந்த நிலையில் வெளியே சூழ்ந்திருந்த கரிய இருளையும், தொலை தூரத்தில் தெரியும் கிராமத்து விளக்கு வெளிச்சங்களையும் பார்த்துக் கொண்டு வந்தார். மிகுதி உள்ள வாழ்க்கை முழுதும், எங்கேயும் நிற்காமல் இந்த ரயிலில், இப்படியே, போய்க் கொண்டிருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்....?

பானு....! உனக்கு இப்போது முப்பது வயசிருக்கும். ஆஹா.... முப்பது வயதில் ஒரு பெண் எவ்வளவு அழகாக இருப்பாள்!.... அதைப் பெற்றவர் கண்ணாறப் பார்க்கும் போது எவ்வளவு பெருமையாக இருக்கும்? பானு....! பானு....! உன்னைப் பாராமல் இருக்க மாட்டேன்..... பம்பாயில் உள்ள அத்தனை தமிழ்க் குடும்பங்களிலும் கேட்பேன். பம்பாயில் இல்லையானால், டெல்லிக்குப் போவேன். ஒவ்வொரு குடும்பமாகக் 'கஸ்தூரியின் பெண் பானு'வைத் தேடுவேன். அங்கேயும் இல்லையானால் கல்கத்தாவுக்குப் போவேன்... பானு...பானு!

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)